# வலுசக்தி அமைச்சு

## வருடாந்த செயலாற்றுகை அறிக்கை - 2025

இல.437, காலி வீதி,
கொழும்பு 03
தொலைபேசி இல: 011 2574922
தொலைநகல்: 011 2574741
மின்னஞ்சல்: info@energymin.gov.lk

# 2025 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
# வலுசக்தி அமைச்சு
# செலவினத் தலைப்பு இல: 119

**உள்ளடக்கம்**

பக்கம்


**அத்தியாயம் 01 – நிறுவன விபரக்குறிப்பு / நிறைவேற்றுச் சுருக்கம்** 1

1.1 அறிமுகம் 1
1.2 அமைச்சின் தொலைநோக்கு மற்றும் பணிக்கூற்று 6
1.3 வலுசக்தி அமைச்சின் விடயங்களும் பணிகளும் 7
1.4 நிறுவனசார் கட்டமைப்பு 9
1.5 பிரிவுகளும் அவற்றின் தொழிற்பாடுகளும் 11
1.6 அமைச்சின் நோக்கெல்லையின் கீழ் உள்ள நிறுவனங்கள் 16

**அத்தியாயம் 02 – 2025 ஆம் ஆண்டின் முன்னேற்றம் மற்றும் 2026 ஆம் ஆண்டிற்கான எதிர்கால கண்ணோட்டம்** 19

2.1 2025 ஆம் ஆண்டில் மின்சக்தி பிரிவின் செயலாற்றுகை 20
2.1.1 மின்சாரத்துறை ஒரே பார்வையில் 20
2.1.2 மின்சார பிறப்பாக்கம் 20
2.1.3 தேசிய மின்சார வலையமைப்பின் நிறுப்பட்ட கொள்திறன் 21
2.1.4 பிறப்பாக்கக் கருத் திட்டங்கள் 23
2.1.5 மின்செலுத்துகை அபிவிருத்திகள் 25
2.1.6 காலநிலை மாற்றத் தணிப்பு நடவடிக்கைகள் மற்றும் மின்சாரத் துறையின் தேசிய அளவில் நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புகள் (NDCs) 29
2.1.7 மின்சாரக் கட்டணத் திருத்தம் 29
2.1.8 புதுப்பிக்கத்தக்க வலுசக்தி கட்டணங்களின் திருத்தம் 29

2.2 2025 ஆம் ஆண்டில் வலுசக்தி பிரிவின் செயலாற்றுகை 31
2.2.1 பெற்றோலியத் தொழிற்துறை ஒரே பார்வையில் - 2025 31
2.2.2 உலகளாவிய பெற்றோலிய விலைகளின் போக்குகளால் இலங்கையில் எரிபொருள் விலையில் ஏற்படுத்தும் தாக்கம் 31
2.2.3 பெற்றோலியப் பொருட்களின் இறக்குமதி, இறக்குமதி செலவினம் மற்றும் விற்பனைகள் 34
2.2.4 இறக்குமதி செய்யப்பட்ட மசகு எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்கள் 37
2.2.5 எரிபொருள் களஞ்சியம் 39
2.2.6 எரிபொருள் விநியோகம் 40
2.2.7 பெற்றோலிய சந்தையின் தன்மைகள் 41
2.2.8 2025 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகள் 44
2.2.9 பெற்றோலியம் சார்ந்த உட்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்றம் 49

2.3 2026 ஆம் ஆண்டிற்கான எதிர்கால கண்ணோட்டம் 52

## உள்ளடக்கம்


பக்கம்

**அத்தியாயம் 03 – திசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான ஒட்டுமொத்த நிதி சார்ந்த செயலாற்றுகை** **54**

3.1 நிதிச் செயலாற்றுகை கூற்று 56
3.2 நிதி நிலைமைக் கூற்று 57
3.3 காசுப் பாய்ச்சல் கூற்று 58
3.4 வருமானம் சேகரிக்கும் செயலாற்றுகை 59
3.5 ஒதுக்கிய நிதிப் பயன்பாட்டு செயலாற்றுகை 59
3.6 நி.பி.கு. இலக்கம் 208 இன் பிரகாரம் வழங்கிய நிதியேற்பாடு 59
3.7 நிதி சாராத சொத்துக்கள் அறிக்கையிடல் செயலாற்றுகை 62
3.8 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 62

**அத்தியாயம் 04 – செயலாற்றுகை குறிகாட்டிகள்** **63**

4.1 அமைச்சின் செயலாற்றுகை குறிகாட்டிகள் (செயற்றிட்டத்தின் அடிப்படையில்) 64

**அத்தியாயம் 05 – நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைவதன் செயலாற்றுகை** **66**

5.1 மின்சக்தி துறையின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் (SDGs) 67
5.2 தொடர்புடைய நிலையான அபிவிருத்தி இலக்குகளின் (SDGs) முன்னேற்றம் 68
5.3 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகளும் சவால்களும் 68

**அத்தியாயம் 06 – மனித வளங்கள் பற்றிய குறிப்பு** **71**

6.1 ஆளணி முகாமைத்துவம் 72
6.2 அமைச்சின் செயலாற்றுகை மீது மனித வளங்கள் பற்றாக்குறை அல்லது மிகை பாதிக்கும் விதம் 72
6.3 மனித வளங்கள் அபிவிருத்தி 73

**அத்தியாயம் 07 – இணக்கப்பாட்டு அறிக்கை** **77**

## அட்டவணைகள்

பக்கம்


அட்டவணை 2.1.1 வாடிக்கையாளர் தளம் - 2025 20
அட்டவணை 2.1.2 மின்சார பிறப்பாக்கம் - 2025 21
அட்டவணை 2.1.3 மின்பிறப்பாக்க மூலங்களின் அடிப்படையில் நிறுவப்பட்ட மின்சார கொள்திறன் (2025 டிசம்பர் இறுதில் உள்ளவாறு) 22
அட்டவணை 2.1.4 நீர் மின்சார பிறப்பாக்க விரிவாக்கல் கருத்திட்டங்கள் 23
அட்டவணை 2.1.5 அனல் மின்சார பிறப்பாக்க விரிவாக்கல் கருத்திட்டங்கள் 23
அட்டவணை 2.1.6 கூரை மீது பொருத்தப்பட்ட சூரியகல இணைப்புகளின் முன்னேற்றம் 23
அட்டவணை 2.1.7 காற்று மின்பிறப்பாக்க கருத்திட்டங்கள் 24
அட்டவணை 2.1.8 வலுசக்தி சேமிப்பு அபிவிருத்தி கருத்திட்டங்கள் 25
அட்டவணை 2.1.9 முறைமை நவீனமயப்படுத்துகை மற்றும் ஆதரவு கருத்திட்டங்கள் 25
அட்டவணை 2.1.10 இடம்பெற்றுவரும் மின்செலுத்துகை அபிவிருத்தி கருத்திட்டங்களின் முன்னேற்றம் 25
அட்டவணை 2.1.11 நிதியளிக்கப்படவுள்ள மின்செலுத்துகை அபிவிருத்திகளின் விபரங்கள் 28
அட்டவணை 2.2.1 ஆசிய-பசிபிக் பிராந்திய மசகு எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்களின் விலை போக்குகள் - 2025 32
அட்டவணை 2.2.2 பெற்றோலியப் பொருட்களின் சராசரி, அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச விலைகள் - 2025 33
அட்டவணை 2.2.3 எரிபொருளின் சராசரி மாதாந்த இறக்குமதி செலவு - 2025 34
அட்டவணை 2.2.4 2025 ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட பெற்றோலியப் பொருட்கள் 34
அட்டவணை 2.2.5 2025 ஆம் ஆண்டின் உள்ளவாறான பெற்றோலியப் பொருட்களின் இறக்குமதி செலவினம் 35
அட்டவணை 2.2.6 2025ஆம் ஆண்டின் உள்ளவாறு பெற்றோலியப் பொருட்களின் விற்பனைகள் 36
அட்டவணை 2.2.7 மின்சார உற்பத்திக்கான எரிபொருள் விற்பனை (2022 - 2025) 37
அட்டவணை 2.2.8 மசகு எண்ணெய் இறக்குமதி (2020 - 2025) 37
அட்டவணை 2.2.9 உள்நாட்டில் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்கள் (2022 - 2025) 38
அட்டவணை 2.2.10 2025 ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட முடிவுப் பொருட்கள் மற்றும் உள்நாட்டில் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்கள் 38
அட்டவணை 2.2.11 கொலன்னாவை மற்றும் முத்துராஜவல எரிபொருள் களஞ்சியசாலை தகவல்கள் 39
அட்டவணை 2.2.12 சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல்ஸ் லிமிடெட் இன் 2025ஆம் ஆண்டில் உள்ளவாறான எரிபொருள் விநியோக முன்னேற்றங்கள் 40
அட்டவணை 2.2.13 எரிபொருள் நிரப்பு நிலையங்களின் மொத்த எண்ணிக்கை (2025ஆம் ஆண்டில் உள்ளவாறு) 41
அட்டவணை 2.2.14 2025 ஆம் ஆண்டின் உராய்வு நீக்கி எண்ணெய் தொழிற்துறையின் செயற்பாடுகள் 42
அட்டவணை 2.2.15 2025 ஆம் ஆண்டில் உள்ளவாறான நுகர்வோர் சேவை நிலையங்களின் எண்ணிக்கை 46
அட்டவணை 2.2.16 2025 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச சந்தை விலைகள் 47
அட்டவணை 2.2.17 எரிபொருள் களஞ்சியத் திறன் விரிவாக்கல் திட்டத்தின் விபரங்கள் 51
அட்டவணை 2.2.18 எரிபொருள் குழாய் வலைப்பின்னல் அபிவிருத்தி கருத்திட்டங்கள் 52


## வரைபுகள்


வரைபு 2.1.1 மின்சாரப் பிறப்பாக்கம் 21
வரைபு 2.1.2 மின்பிறப்பாக்க மூலங்கள் 22
வரைபு 2.2.1 2025 ஆம் ஆண்டின் எரிபொருள் விநியோகம் 41
வரைபு 2.2.2 2025 ஆம் ஆண்டில் உள்ளவாறான அறிக்கையிடப்பட்ட சந்தை விலைகள் 47

# அத்தியாயம் 01
# நிறுவனசார் விபரக்குறிப்பு / நிறைவேற்றுச் சுருக்கம்

# அத்தியாயம் 01

# நிறுவனசார் விபரக்குறிப்பு / நிறைவேற்றுச் சுருக்கம்

## 1.1 அறிமுகம்

மின்சாரம் மற்றும் பெற்றோலியம் ஆகிய இரு துறைகளின் நிர்வாகத்திற்கும் பொறுப்பான வலுசக்தி அமைச்சு, 2025 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க இலங்கை மின்சார (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க புதிய இலங்கை மின்சாரச் சட்டத்தை அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்துவதன் மூலம் வலுசக்தி துறை மறுசீரமைப்புகளை விரைவுபடுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இது தொடர்பாக, இலங்கை மின்சார சபையை (CEB) பிரித்து, ஆறு புதிய பின்தொடர் நிறுவனங்களை பதிவு செய்வதற்கும், நியமிக்கப்பட்ட திகதியை வெளியிடுவதற்கான தேவைகளை பூர்த்தி செய்வதற்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன் ஆரம்ப இடமாற்றத் திட்டம், தேசிய மின்சாரக் கொள்கை, தேசிய கட்டணக் கொள்கை, வருடாந்த மின்சார பெறுகைத் திட்டம், நீண்ட கால மின் பிறப்பாக்க விரிவாக்கத் திட்டம் மற்றும் நீண்ட கால மின் விநியோக அபிவிருத்தித் திட்டம் ஆகியன அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்பதில் திருப்தியடைந்த பின்னர், புதிய நிறுவனங்களின் செயல்பாடுகளைத் தொடங்குவதற்கு இலங்கை மின்சார சபை அனுமதிக்கும் திகதி இதுவாகும். இம்மறுசீரமைப்புகளுக்கு இணங்க, முன்மொழியப்பட்டுள்ள தேசிய முறைமை தொழிற்படுத்துநர் (தனியார்) லிமிடெட் (National System Operator (Pvt) Ltd.) நிறுவனம், தேசிய வலுசக்திக் கொள்கைக்கு இணங்க நீண்ட கால மின்சார முறைமை அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரித்து நடைமுறைப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. தேசிய வலுசக்திக் கொள்கை எனும் அனைத்தும் உள்ளடக்கிய கொள்கையின் கீழ், மின்சாரத் துறைக்கான கொள்கைகளை, புதுப்பிக்கத்தக்க ஹைட்ரஜன், மின்சார வாகன சார்ஜிங் உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் மின்கல வலுசக்தி சேமிப்பு அமைப்புகள் (Battery Energy Storage Systems) ஆகியவற்றின் மீது உருவாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

இலங்கையின் மின்சாரத் துறையானது 2025 ஆம் ஆண்டில் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி ஒருங்கிணைப்பு, அமைப்பை நவீனமயமாக்கல் மற்றும் நிறுவன மறுசீரமைப்பு ஆகியவற்றிற்கு அதிக முக்கியத்துவம் அளித்து சீரான முறையில் முன்னேறியது. 2025 ஆம் ஆண்டில் மொத்த நிறுவப்பட்ட மின்சாரம் 6,749 மெகாவாட்டை எட்டியது, இதில் சுமார் 67% பெரிய மற்றும் சிறிய நீர்மின்சாரம், காற்று, சூரிய சக்தி மற்றும் உயிரித் தொகுதி (Biomass) உள்ளிட்ட புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மூலங்களைக் கொண்டிருந்தது. 2025 நவம்பர் வரையிலான நிகர மின் உற்பத்தி 17,812 கிகாவாட் மணிநேரமாகும் (GWh), இதில் சுமார் 60% புதுப்பிக்கத்தக்க வலுசக்தி வளங்களில் இருந்து உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மற்றும் தூய்மையான தொழில்நுட்பங்களை ஊக்குவிப்பதற்கான பல முயற்சிகளை அமைச்சு இந்த ஆண்டில் துரிதப்படுத்தியது. 600 மெகாவாட்டிற்கும் அதிகமான சூரிய மின்பிறப்பாக்கத் திறன் தேசிய இணைப்புடன் சேர்க்கப்பட்டது. அதே நேரத்தில் பல காற்று மின் திட்டங்கள், மின்கல வலுசக்தி சேமிப்பு திட்டங்கள் மற்றும் ஒரு நீரேற்று சேமிப்பு (நீர்மின்சாரம்) திட்டத்திற்கான ஆரம்ப நடவடிக்கைகள் தொடங்கின. இந்த நடவடிக்கைகள் இலங்கையை பிராந்தியத்திலேயே மிகக் குறைந்த மின்சார விலையைக் கொண்ட நாடாக மாற்றுவதற்கும், அனைத்து பிரஜைகளுக்கும் நியாயமான மற்றும் மலிவான விலையில் மின்சாரத்தை உறுதி

செய்வதற்கும் அரசாங்கத்தின் நோக்கத்திற்கு வழிவகுத்தன.

2025 ஆம் ஆண்டில், மின்சாரத் துறையில் பல பெரிய அளவிலான அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டதோடு அவற்றுள் பெரும்பாலானவை நிறைவடையும் இறுதிக்கட்டத்தில் இருந்தன. ஒரே நீர்மின் உற்பத்தித் திட்டமான மொரகொல்ல நீர்மின் திட்டம் 2025 ஆம் ஆண்டின் இறுதியில் நிறைவடையவிருந்தது, ஆனால் "டிட்வா" (Ditwah) சூறாவளியால் ஏற்பட்ட கடுமையான சேதம் காரணமாக அது 2026 ஆம் ஆண்டின் இறுதி வரை நீடிக்கப்பட்டது. தேசிய மின் விநியோகக் வலையமைப்பு அபிவிருத்தி மற்றும் செயல்திறன் மேம்பாட்டுத் கருத்திட்டம் (NTDND&EIP) - தொகுதி 1 மற்றும் 2 மற்றும் மின்சார விநியோக நம்பகத்தன்மை மேம்பாட்டுத் கருத்திட்டத்திற்கான ஆதரவு (SESRIP) - தொகுதி 4 ஆகியவை ஆண்டின் இறுதியில் நிறைவடையும் நிலையிலிருந்த பிரதான மின் விநியோக இணைப்பு கருத்திட்டங்களாகும். சிறிய தீவுகளில் கலப்பு புதுப்பிக்கத்தக்க வலுசக்தி முறைமைகளின் நிர்மாணம் - (நெடுந்தீவு, அனலைதீவு, நயினாதீவு) மற்றும் ஹம்பாந்தோட்டையில் 5MW/10.7MWh மின்கல வலுசக்தி சேமிப்பு முறைமையை நிறுவுதல் ஆகியவை 2025 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட முக்கியமான உற்பத்தி மற்றும் மின்சார சேமிப்பு திட்டங்களாகும். அத்துடன், நாடு முழுவதும் 16 இடங்களில் 160MW/640MWh தனித்த மின்கல வலுசக்தி சேமிப்பு அமைப்பை (BESS) நிறுவுதல், மன்னாரில் 50 மெகாவாட் காற்று மின் நிலையம் (தம்பபவணி கட்டம் II), திருகோணமலை (சம்பூர்) 50 மெகாவாட் சூரிய மின் உற்பத்தித் திட்டம் (கட்டம் I), முள்ளிக்குளம் (50MW+50MW) காற்று மின் திட்டம், சியம்பலாண்டுவ 100 மெகாவாட் தரையில் பொருத்தப்பட்ட சூரிய சக்தி பூங்கா மற்றும் கெரவலப்பிட்டியவில் 350 மெகாவாட் இரண்டாவது எல்.என்.ஜி சஹஸ்தனவி கூட்டு சுழற்சி மின் நிலைய அபிவிருத்தி போன்ற சில திட்டங்கள் தனியார் முதலீட்டாளர்களின் ஆதரவுடன் தொடங்கப்பட்டுள்ளன.

தேசிய இணைப்பு முறைமையில் மின்சார விநியோகத்தை தரம் உயர்த்தவும் நவீனமயமாக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அனைத்து நான்கு பிரிவுகளிலும் உயர்தரத்திலான மாணிவாசிப்பு உட்கட்டமைப்பு (AMI) ஆதரவுடன் கூடிய மேற்பார்வைக் கட்டுப்பாடு மற்றும் தரவு கையகப்படுத்தல் (SCADA) அமைப்பை நிறுவுவதன் மூலம் விநியோக முறைமையை மேம்படுத்த இலங்கை மின்சார சபை (CEB) நடவடிக்கை எடுத்துள்ளது. மேலும், லெகோ (LECO) நிறுவனமும் தங்களது முறைமையை நிலத்தடி கேபிளிங் போன்றவற்றின் மூலம் நவீனமயமாக்குவதில் கவனம் செலுத்தியுள்ளது.

மேலும், மின் பிறப்பாக்கம், கடத்துகை, விநியோகம், புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மேம்பாடு மற்றும் வலுசக்தி செயல்திறன் மேம்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை மின்சார சபை (CEB), லங்கா மின்சார நிறுவனம் (LECO), இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை (SLSEA) உள்ளிட்ட முக்கிய மின்சாரத் துறை நிறுவனங்களுக்கு அமைச்சு கொள்கை வழிகாட்டலையும் மேற்பார்வையையும் தொடர்ந்து வழங்கியது.

இலங்கை அணுசக்தி ஒழுங்குறுத்துகை சபை (SLAERC) மற்றும் இலங்கை அணுசக்திச் சபை (SLAEB) ஆகியன இலங்கையில் அணுசக்தி பயன்பாடுகளின் முன்னேற்றம் தொடர்பான தமது நடவடிக்கைகளைத் தொடர்ந்தன. மின் உற்பத்திக்கான அணுமின் ஆய்வு மற்றும் திட்டமிடல் திட்டமும் 2025 ஆம் ஆண்டில் தொடர்ந்தது. பின்னர், 2024 ஆம் ஆண்டின் நவம்பர் 25 ஆம் திகதியிட்ட 2412/08 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், இலங்கை அணுசக்தி ஒழுங்குறுத்துகைச் சபை (SLAERC) மற்றும் இலங்கை அணுசக்திச் சபை (SLAEB) ஆகியன விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் கீழ் மாற்றப்பட்டன, இது 2025 அக்டோபர் 18 ஆம் திகதியிட்ட 2458/65 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலால் திருத்தப்பட்டது. இதற்கு மேலாக,

வரையறுக்கப்பட்ட இலங்கை நிலக்கரி (தனியார்) கம்பனி (LCC), ஸ்ரீலங்கா எனர்ஜிஸ் (SLE) மற்றும் வரையறுக்கப்பட்ட எல்ரீஎல் ஹோல்டிங்ஸ் (தனியார்) கம்பனி (LTL Holdings) ஆகியன இக்காலப்பகுதியில் தங்களது செயல்பாட்டு மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளைத் தொடர்ந்தன.

டிட்வா சூறாவளி 2025 நவம்பர் 28 அன்று இலங்கையில் கரையை கடந்தது, இது தேசிய உட்கட்டமைப்பு அமைப்புகளுக்கு, குறிப்பாக மின்சார வலைப்பின்னலுக்கு முன்னெப்போதுமில்லாத அழுத்தத்தை ஏற்படுத்தியது. மின் பிறப்பாக்கம், கடத்துகை மற்றும் விநியோகம் ஆகியவற்றில் ஏற்பட்ட கடுமையான சேதங்கள் மற்றும் நீர்மின்சாரம், காற்று மற்றும் சூரிய சக்தி சொத்துக்கள், கடத்துகை கோபுரங்கள் மற்றும் கோடுகள், அத்துடன் மீட்டர்கள் போன்ற பயன்பாட்டு உபகரணங்கள் பாதிக்கப்பட்டதன் காரணமாக சேதம் 23.9 பில்லியன் ரூபா (78.5 மில்லியன் அமெரிக்க டொலர்) என மதிப்பிடப்பட்டுள்ளது. 14 நாட்கள் வரையிலான மின் தடை மற்றும் 4.1 மில்லியனுக்கும் அதிகமான நுகர்வோர், முக்கியமான வசதிகள் (மருத்துவமனைகள், நீர் வழங்கல்) மற்றும் முக்கிய உற்பத்தி மற்றும் விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டதன் மூலம் இழப்பு 5.8 பில்லியன் ரூபா (19.2 மில்லியன் அமெரிக்க டொலர்) என மதிப்பிடப்பட்டுள்ளது. அவசரகால பதில் நடவடிக்கை, பொதுப் பாதுகாப்பு, சுகாதார சேவைகள், நீர் வழங்கல், தொலைத்தொடர்பு மற்றும் ஒட்டுமொத்த பொருளாதார மீட்சியை உறுதி செய்யும் வகையில் மின்சார விநியோகத்தின் 87% இரண்டு நாட்களுக்குள் வழமைக்குக் கொண்டுவரப்பட்டது. அனைத்து சேதங்களும் சீர்செய்யப்பட்டு தற்போது தொடர்ந்து இயங்கி வருகின்றன.

பெற்றோலியத் துறை முன்னேற்றம் தேசிய வலுசக்தி பாதுகாப்பை வலுப்படுத்துதல் மற்றும் தடையற்ற எரிபொருள் விநியோகத்தை உறுதி செய்யும் நோக்கத்துடன் 2025 ஆம் ஆண்டில் பெற்றோலியத் துறையில் சீர்திருத்தங்கள் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாடுகளை செயல்படுத்துவதில் அமைச்சு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் கண்டுள்ளது.

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை தரம் உயர்த்துவதற்கும் புனரமைப்பதற்கும் பணிகள் தொடங்கப்பட்டன, அதே நேரத்தில் மேம்பட்ட செயல்பாட்டுத் திறன் மற்றும் கொள்ளளவுடன் கூடிய புதிய சுத்திகரிப்பு நிலையத்தை நிறுவுவதை மதிப்பிடுவதற்கான இணையான சாத்தியக்கூறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அதே நேரத்தில், தற்போதுள்ள பெற்றோலியத் துறை ஒப்பந்தங்கள் மறுபரிசீலனை செய்யப்பட்டு, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு (CPC) சொந்தமான 24 தாங்கிகள் மற்றும் பங்காளர் நிறுவனங்களால் இயக்கப்படும் 61 தாங்கிகள் உட்பட பெற்றோலிய சேமிப்பு வசதிகளை இயக்குவதிலும் பயன்படுத்துவதிலும் இருந்து பெறப்படும் பொருளாதார நன்மைகளை அதிகப்படுத்துவதற்காக ஒரு புதிய வணிக மாதிரி உருவாக்கப்பட்டது.

இவ்வருடத்தில் பல மூலோபாய எரிபொருள் விநியோகம் மற்றும் விநியோக உட்கட்டமைப்பு திட்டங்களும் செயல்படுத்தப்பட்டன. நாடு தழுவிய எரிபொருள் விநியோகத்தை வலுப்படுத்துவதற்கும் தடையற்ற விநியோகத்தை உறுதி செய்வதற்கும் ரயில்வே எரிபொருள் சேமிப்பு மற்றும் விநியோக அமைப்பில் மாற்றங்கள் தொடங்கப்பட்டன. ஆதற்கு மேலாக, கொழும்பு துறைமுகத்தையும் கொலன்னாவ முனையத்தையும் இணைக்கும் சேதமடைந்த குழாய், சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல்ஸ் லிமிடெட் (CPSTL) செய்த முதலீடுகளின் மூலம் புனரமைக்கப்பட்டது, இதன் மூலம் எரிபொருள் இறக்குதல் மற்றும் விநியோக நடவடிக்கைகளின் நம்பகத்தன்மை மற்றும் செயல்திறன் மேம்படுத்தப்பட்டது.

பெற்றோலியம் மற்றும் இயற்கை எரிவாயு ஆய்வு தொடர்பான நடவடிக்கைகளையும் அமைச்சு துரிதப்படுத்தியது. மன்னார் மற்றும் காவேரி படுகைகளில் கண்டறியப்பட்ட இயற்கை எரிவாயு மற்றும் ஏனைய புதைபடிவ எரிபொருள் வளங்களை

ஆய்வு செய்வதற்கும் பிரித்தெடுப்பதற்கும் புதிய ஒப்பந்தங்கள் மற்றும் ஆரம்பகட்ட நடவடிக்கைகள் முன்னேறின. இந்த முயற்சிகள் இலங்கையின் நீண்ட கால வலுசக்தி சுயசார்பை மேம்படுத்துவதற்கும், இறக்குமதி செய்யப்படும் புதைபடிவ எரிபொருட்களிலான தங்கியிருப்பதைக் குறைப்பதற்கும் கணிசமான பங்களிப்பை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், அமைச்சின் பெற்றோலியத் துறையானது இத்தொழில்துறையை வலுப்படுத்துவதற்கான கொள்கை மற்றும் ஒழுங்குறுத்துகை கட்டமைப்புகளை உருவாக்குவதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. லூப்ரிகண்ட் (உராய்வு எண்ணெய்) மற்றும் பன்கரிங் (கப்பல்களுக்கு எரிபொருள் நிரப்புதல்) தொழில்களுக்கான கொள்கைக் கட்டமைப்புகள் தற்போது உருவாக்கத்தின் இறுதிக்கட்டத்தில் உள்ளன.

இதற்கு மேலாக, ஜெட் ஏ-1 (Jet A-1) எரிபொருள் மற்றும் பிற்றுமின் இறக்குமதியை ஒழுங்குபடுத்தும் கொள்கைக் கட்டமைப்புகளை உருவாக்குவதற்காக குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. இந்த முயற்சிகள் ஒழுங்குமுறை மேற்பார்வையை மேம்படுத்துவதையும், சந்தை செயல்திறன் மற்றும் போட்டியை ஊக்குவிப்பதையும், தேசிய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக மூலோபாய பெற்றோலிய தயாரிப்புகளின் தடையற்ற விநியோகத்தை உறுதி செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன.

பெற்றோலிய விநியோகம், சேமிப்பு, விநியோகம், ஆய்வு மற்றும் துறைசார் அபிவிருத்தி நடவடிக்கைகளின் பயனுள்ள ஒருங்கிணைப்பை உறுதி செய்யும் வகையில், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (CPC), சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல்ஸ் லிமிடெட் (CPSTL) மற்றும் இலங்கைப் பெற்றோலிய அபிவிருத்தி அதிகாரசபை (PDASL) உள்ளிட்ட முக்கிய பெற்றோலியத் துறை நிறுவனங்களுக்கு அமைச்சு கொள்கை வழிகாட்டுதலையும் மேற்பார்வையையும் தொடர்ந்து வழங்கியது.

இதற்கு மேலாக, மின்சார வாகன மின்னேற்றல் நிலையங்களின் வலையமைப்பு நாடு முழுவதும் தொடர்ந்து விரிவடைந்தது, 2025 ஆம் ஆண்டின் இறுதிக்குள் ஏழு நிலையங்கள் ஏற்கனவே செயல்பாட்டில் இருந்தன மற்றும் மூன்று மேலதிக நிலையங்கள் கட்டுமானத்தில் இருந்தன.

வலுவூட்டப்பட்ட நிர்வாகம், நிறுவன ஒருங்கிணைப்பு, உட்கட்டமைப்பு நவீனமயமாக்கல் மற்றும் நிலையான வலுசக்தி நடைமுறைகள் மூலம் இலங்கையின் வலுசக்தித் துறையை மாற்றுவதற்கு அமைச்சு தொடர்ந்து அர்ப்பணிப்புடன் உள்ளது. இந்த முயற்சிகள் மூலம், நாட்டுக்கு மீளெழுச்சியுடைய, பாதுகாப்பான மற்றும் நிலையான வலுசக்தி எதிர்காலத்தை அடைவதை நோக்கி அமைச்சு தொடர்ந்து பங்களிப்பு செய்கிறது.

## 1.2 அமைச்சின் தொலைநோக்கு மற்றும் பணிக்கூற்று

### தொலைநோக்கு

"இலங்கையை தெற்காசியாவின் வலுசக்தி மையநிலையமாக மாற்றுதல்"

### பணிக்கூற்று

**மின்சக்திப் பிரிவு**

தேசியத்தின் பொருளாதார செழிப்பை உறுதிப்படுத்தும் வகையில், தரம், நம்பகத்தன்மை, நிலைத்தன்மை மற்றும் கட்டுப்படியாகக் கூடிய விலையை உறுதிசெய்யும் மின்சார சேவையை வழங்குதல்.

### பணிக்கூற்று

**வலுசக்திப் பிரிவு**

"எரிபொருள் இறக்குமதி முகாமைத்துவம் மற்றும் உள்நாட்டு புதிய வலுசக்தி மூலங்களை வலுசக்தி கலவையில் ஒருங்கிணைப்பதன் மூலம் தேசிய தேவைகளை பூர்த்தி செய்ய குறைந்த செலவிலான வலுசக்திக்கான அணுகலை மேம்படுத்தல், மற்றும் தொடர்புடைய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க வலுசக்தி தொடர்பான கொள்கை அமுலாக்கத்தை ஒழுங்குபடுத்துவதன் மூலம் சூழல் நட்புடைய நிலையான வலுசக்தி விநியோகத்தை உறுதி செய்தல்"

### 1.3 வலுசக்தி அமைச்சின் விடயங்களும் பணிகளும்


2025 நவம்பர் 25 ஆம் திகதியிட்ட 2412/08 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின்படி வலுசக்தி அமைச்சின் விடயங்களும் பணிகளும் பின்வருமாறு:

1. சூரியன், நீர், வெப்பம், நிலக்கரி, கழிவு மற்றும் காற்று போன்ற மூலங்களிலிருந்து புதுப்பிக்கத்தக்க வலுசக்தி, மின்சாரம் மற்றும் பிற வலுசக்திகளை உற்பத்தி செய்வது தொடர்பான நடவடிக்கைகளின் ஆய்வு, திட்டமிடல், மேம்பாடு மற்றும் மேற்பார்வை.
2. இலங்கையின் மின்சாரத் தேவைகளைப் பூர்த்தி செய்தல் மற்றும் வலுசக்தி பாதுகாப்பைப் பாதுகாத்தல்.
3. சக்திதுறை செயல்திறனை உறுதி செய்வதற்கான தேவையை முகாமைத்துவம் செய்தல்.
4. நீண்ட காலத் தேவைகளின் அடிப்படையில் மின் உற்பத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.
5. மின்சாரம் கடத்துகை மற்றும் விநியோகிக்கும் செயல்முறைகளை வினைத்திறனாக்குதல்.
6. உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை அதிகபட்சமாக வினைத்திறன்மிக்க பயன்பாட்டை உறுதி செய்வதற்காக ஒரு ஸ்மார்ட் வலையமைப்பை உருவாக்குதல்.
7. மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான செலவைக் குறைத்தல் மற்றும் உற்பத்தியின் போது ஏற்படும் நிச்சயமற்ற தன்மைகளை நீக்குதல்.
8. தற்போதுள்ள அதிக செலவுடைய மின் பிறப்பாக்க மூலங்களுக்கு பதிலாக குறைந்த செலவிலான, சுற்றுச்சூழலுக்கு உகந்த, புதுப்பிக்கத்தக்க மூலங்களை மாற்றுவதற்கான பொருத்தமான திட்டங்களை செயல்படுத்துதல்.
9. தேசிய புதுப்பிக்கத்தக்க வலுசக்தி திட்டங்களில் உள்ளூர் நிறுவனங்கள் முதலீடு செய்வதற்கு சமமான வாய்ப்புகளைப் பெறுவதை உறுதி செய்தல்.
10. கைத்தொழில் கழிவுகளைப் பயன்படுத்தி வலுசக்தி உற்பத்தியை அதிகரித்தல்.
11. கூட்டுறவு கொள்கைகளின் அடிப்படையில் மைக்ரோ-கிரிட் வலையமைப்புகளை வலுசக்தி அலகுகளாக நிறுவுதல்.
12. வலுசக்தி துறையில் மூலோபாய கூட்டாண்மைகள் மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை ஏற்படுத்துதல்.
13. சிறிய அளவிலான நீர்மின் உற்பத்தியில், குறிப்பாக தற்போதுள்ள ஒப்பந்தங்களை புதுப்பிப்பதன் மூலம் மீள்முதலீட்டை ஊக்குவித்தல்.
14. மின்சாரக் கட்டணத்தைப் புதுப்பிப்பதற்கும் பெற்றோலியம் மற்றும் எரிவாயுவிற்கான விலை சூத்திரத்தைப் பயன்படுத்துவதற்கும் நியாயமான மற்றும் வெளிப்படையான முறையை அறிமுகப்படுத்துதல்.
15. நீண்ட கால தேவைப்பாடுகளின் அடிப்படையில் மின்சார பிறப்பாக்க திட்டமொன்றின் அமுலாக்கம்
16. நிறுவன முகாமைத்துவ மட்டத்தில் ஏற்படும் இழப்புகள் மற்றும் மின் உற்பத்தி மற்றும் விநியோக அமைப்பில் ஏற்படும் தொழில்நுட்ப சேதங்களை குறைக்க தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
17. மின்சார வாகனங்களைப் பயன்படுத்துவதற்கு வசதி செய்தல் மற்றும் ஊக்குவித்தல்.
18. இலங்கையை ஒரு வலுசக்தி வர்த்தக மையமாக (Energy Trading Hub) மாற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.
19. பசுமை இல்ல வாயு உமிழ்வைக் கட்டுப்படுத்துதல்.
20. கிராமப்புற மின்மயமாக்கல்.
21. பெற்றோலியம் சார்ந்த பொருட்கள் மற்றும் இயற்கை எரிவாயுவின் இறக்குமதி, சுத்திகரிப்பு, சேமிப்பு, விநியோகம் மற்றும் விற்பனை ஆகியவற்றை ஒருங்கிணைத்து செயல்படுத்துதல்.
22. பெற்றோலிய உற்பத்தி மற்றும் சுத்திகரிப்பு தொடர்பான விடயங்கள்.


23. பெற்றோலியம் மற்றும் இயற்கை எரிவாயு ஆய்வு மற்றும் அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகள்.
24. பெற்றோலிய உற்பத்தி மூலங்களிலிருந்து எரிவாயு மற்றும் துணைப் பொருட்களின் உற்பத்தி, கையிருப்புகளைப் பராமரித்தல், உற்பத்தி மற்றும் விநியோகம் தொடர்பான விடயங்கள்.
25. எரிபொருள் வழங்கல் மற்றும் விநியோகம் தொடர்பாக உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.
26. வலுசக்தி வளங்களின் கட்டுப்பாடு, ஒழுங்குமுறை மற்றும் பயன்பாட்டிற்கான பொருத்தமான வலுசக்திக் கொள்கையை உருவாக்குதல்.
27. எண்ணெய் சுத்திகரிப்பு திறனை மேம்படுத்துதல் மற்றும் பெற்றோலிய துணைப் பொருட்கள் மீதான அசோசியேட் தொழில்துறையை ஊக்குவித்தல்.
28. எரிபொருள் விநியோகத்தில் நம்பகத்தன்மை, தொடர்ச்சி மற்றும் செயல்திறனை மேம்படுத்துதல்.

## 1.4 நிறுவனசார் கட்டமைப்பு

- **மின்சக்திப் பிரிவு**



- **வலுசக்திப் பிரிவு**


கௌரவ அமைச்சர்
செயலாளர்
மேலதிகச் செயலாளர் (நிர்வாகம்) 01
மேலதிகச் செயலாளர் (பெறுகை) 01
மேலதிகச் செயலாளர் (அபிவிருத்தி) 01
பணிப்பாளர் நாயகம் (திட்டமிடல்) 01
பிரதான நிதியியலாளர் 01
சிரேஸ்ட உதவிச் செயலாளர் (நிர்வாகம்) 01
பணிப்பாளர் (பெறுகை) 01
சிரேஸ்ட உதவிச் செயலாளர் (அபிவிருத்தி.) 01
பிரதான பொறியியலாளா
பணிப்பாளர் (திட்டமிடல்)
பிரதான கணக்காளர் 01
பிரதான உள்ளக க்காளர் 01
உதவிச் செயலாளர் (நிர்வாகம்) 01
சட்ட அலுவலர் 01
உதவிப் பணிப்பாளர் (த.தொ) 01
பிரதி / உதவி பணிப்பாளர் (பெறுகை) 01
உதவிச் செயலாளர் (அபிவிருத்தி) 01
பிரதி /உதவி பணிப்பாளர் (திட்டமிடல்) 01
கணக்காளர் 01
உள்ளக கணக்காளர் 01
நிர்வாக உத்தியோகத்தர் 01
மொழிபெயர்ப்பாளர் 01
தகவல் தொழிநுட்ப உத்தியோகத்தர் 01
ஒருங்கிணைப்புச் செயலாளர் 01
முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் 25
அபிவிருத்தி உத்தியோகத்தர் 26
தகவல் தொழிநுட்ப உதவியாளர் 01
நிழற் பட பிடிப்பாளர் 01
அலுவலக உதவியாளர் சேவை 11
சாரதி 11
நிழற் பட பிடிப்பு உதவியாளர் 01

## 1.5 பிரிவுகளும் அவற்றின் தொழிற்பாடுகளும்

- **மனித வளப் பிரிவு**
  - அமைச்சில் மனித வளங்களை முகாமைத்துவம் செய்தல் மற்றும் நலன்புரி வசதிகளை வழங்குதல்.
  - அமைச்சோடு தொடர்புடைய அனைத்து உத்தியோகத்தர்களின் நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் உத்தியோகத்தர்கள் தங்களது கடமைகளை ஆற்றுவதில் அவர்களின் செயல்திறன் மற்றும் வினைத்திறனை மேம்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
  - அமைச்சின் பணியாளர்களின் தனிப்பட்ட கோப்புகளை முறையாகப் பேணுதல்.
  - அமைச்சின் உத்தியோகத்தர்களின் அறிவு, அனுபவம் மற்றும் அணுகுமுறைகளை மேம்படுத்தும் பொருட்டு உள்நாட்டு மற்றும் சர்வதேச பயிற்சி திட்டங்கள், கருத்தரங்குகள், மாநாடுகள் மற்றும் செயலமர்வுகளில் அவர்கள் பங்கேற்பதை உறுதி செய்வதற்கான ஏற்பாடுகளை செய்தல்.
  - பாராளுமன்ற வினாக்களுக்கான பதில்களைத் தயாரித்தல் மற்றும் பாராளுமன்றக் குழுக்களுக்கு வசதி செய்தல்.
  - வலுசக்தி துறை காப்பகங்களை (Archives) பேணிப் பராமரித்தல்.
  - அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களான: இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (CPC), சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல்ஸ் லிமிடெட் (CPSTL), இலங்கைப் பெற்றோலிய அபிவிருத்தி அதிகாரசபை (PDASL), ட்ரிங்கோ பெற்றோலியம் டெர்மினல் லிமிடெட் (TPTL), இலங்கை மின்சார சபை (CEB), லங்கா எலக்ட்ரிசிட்டி கம்பனி (பிரைவட்) லிமிடெட் (LECO) மற்றும் இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை (SLSEA) ஆகியவற்றிற்கான மனித வள முகாமைத்துவத்தை எளிதாக்குதல்.

- **பொருள்வசதியளிப்புப் பிரிவு**
  - அமைச்சில் பணிபுரியும் அனைத்து அலுவலர்களுக்கும் அமைச்சு தொடர்பான அனைத்து சிறிய பெறுகை பணிகள் மற்றும் தேவைகளை நிறைவேற்றுதல்.
  - அனைத்து அலுவலர்கள் மற்றும் கட்டிட வளாகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்தல், பொதுமக்களின் கோரிக்கைகள் மற்றும் முறைப்பாடுகளைத் திட்டமிடுதல் மற்றும் ஊழியர் உரிமைகள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்தல்.
  - அமைச்சின் அதிகாரிகளுக்கு நல்ல வேலைச் சூழலை உருவாக்குவதற்காக அமைச்சு அமைந்துள்ள கட்டிடத்தில் உள்கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்வதன் மூலம் ஆரோக்கியமான வேலைச் சூழலைப் பராமரித்தல்.
  - உட்கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளின் கீழ் அமைச்சின் தொலைபேசிகள், கணினிகள், அச்சுப்பொறிகள், புகைப்பட நகல் இயந்திரங்களை பேணுதல், அலுவலர்களின் தினசரி வேலையை எளிதாக்குவதற்கு தேவைக்கேற்ப இயந்திரங்கள் மற்றும் பிற உபகரணங்களை வாங்குதல், பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல்.
  - சரியான பெறுகை செயல்முறையின் கீழ் பெறுகை செய்தல்.
  - அமைச்சின் கீழ் உள்ள 45 வாகனங்களை முறையாக பராமரித்தல் மற்றும் தேவைகளுக்கு ஏற்ப அதிகாரிகளுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குதல்.

- வெளி நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களிடமிருந்து பெறப்படும் கடிதங்கள் மற்றும் ஆவணங்களை அமைச்சின் தொடர்புடைய பிரிவுகளுக்கு அனுப்புதல்.
- அமைச்சினால் வெளித் தரப்பினருக்கு வழங்கப்படும் கடிதங்கள், அறிக்கைகளை தினசரி செயலாக்குதல்.
- பொதுமக்களால் அனுப்பப்படும் கோரிக்கைகள், முறைப்பாடுகள் மற்றும் ஆலோசனைகள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
- பல்வேறு மத நடவடிக்கைகள் மற்றும் ஊர்வலங்களுக்காக அந்த மத ஸ்தலங்களில் இருந்து கோரிக்கை கடிதங்கள் வந்த பிறகு, மதிப்பீடுகளை கோரிய பின்னர் இலங்கை மின்சார சபையினால் ஒதுக்கப்பட்ட நிதியின் மூலம் அந்த நடவடிக்கைகளுக்கு நிதி வழங்க நடவடிக்கை எடுத்தல்.
- இந்த அமைச்சு மற்றும் அதன் இணைந்த நிறுவனங்களில் (11) பொருள்வசதியளிப்பு நிர்வாகப் பணிகளைச் செய்தல் மற்றும் அவ்வப்போது எழும் சிக்கல்களைத் தீர்ப்பதற்கும் அலுவலர்களின் தொழில் திருப்தியைப் பேணுவதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

- **அபிவிருத்திப் பிரிவு**
  - புதுப்பிக்கத்தக்க வலுசக்தி / அணுசக்தி மற்றும் கதிர்வீச்சுத் துறை தொடர்பான கொள்கைகளை உருவாக்குதல்.
  - தேசிய அமைப்பில் புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தியை ஒருங்கிணைப்பதற்கான கட்டண- ங்களை நிர்ணயித்தல்.
  - திட்ட நிதியுதவி மற்றும் பங்களிப்புகளை ஒருங்கிணைத்தல் - பன்முக ஒருங்கிணைப்பு.
  - புதுப்பிக்கத்தக்க வலுசக்தியை அபிவிருத்திசெய்தல் மற்றும் எளிதாக்குதல்.
  - புதுப்பிக்கத்தக்க வலுசக்தி துறை தொடர்பான வெளிநாட்டு நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பு.
  - புதுப்பிக்கத்தக்க வலுசக்தி திட்டங்களுக்காக இறக்குமதி செய்யப்படும் பொருட்கள், உபகரணங்கள் மற்றும் மூலப்பொருட்களுக்கான சுங்க அனுமதி மற்றும் வரி சலுகை கோரிக்கைகளை பரிந்துரைத்தல்.
  - புதுப்பிக்கத்தக்க வலுசக்தி திட்டங்களுக்காக வரும் வெளிநாட்டு ஆலோசகர்கள்/ பணியாளர்களுக்கு தேவையான நுழைவு விசா / வதிவிட விசாக்களை வழங்குவதற்கோ / நீடிப்பதற்கோ பரிந்துரைகளை வழங்குதல்.
  - மேல்நிலை (Upstream), நடுத்தரநிலை (Midstream) மற்றும் கீழ்நிலை(Downstream) பெற்றோலிய தொழில்கள் தொடர்பான கொள்கை மேம்பாட்டை உருவாக்குதல் மற்றும் செயல்படுத்துதல்.
  - எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு ஆய்வு மற்றும் உற்பத்தி மீதான அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளையும் ஒருங்கிணைத்தல்.
  - பெற்றோலியத் துறையில் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல் மற்றும் கண்காணித்தல்.
  - பெற்றோலிய பொருட்களின் விலை நிர்ணயம், எரிபொருள் மானியங்கள், விநியோகம், விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் பிரச்சினைகள் தொடர்பாக நிதி அமைச்சு மற்றும் பிற தொடர்புடைய அரசு முகவர்களுடன் ஒருங்கிணைத்தல்.
  - இலங்கையில் லுப்ரிகண்ட் மற்றும் கிரீஸ்கள், பிற்றுமின் மற்றும் பன்கரிங் வணிகங்களில் ஈடுபடுவதற்கு சாத்தியமான தரப்பினருக்கு உரிமங்களை வழங்குதல்/ புதுப்பித்தல்.

- வழங்கப்பட்ட உரிமங்களை புதுப்பித்தல் மற்றும் பிற விசேட பெற்றோலிய பொருட்களை இறக்குமதி செய்ய தனியார் தரப்பினருக்கு அனுமதி வழங்குதல்.

◆ **மின்சாரம் மற்றும் மின்சாரத் துறை மறுசீரமைப்புப் பிரிவு**

- பெரிய மற்றும் நடுத்தர அளவிலான மின் பிறப்பாக்க திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் மின்பிறப்பாக்கம், கடத்துகை மற்றும் விநியோகத்திற்கு பொருத்தமான அனைத்து கொள்கை விடயங்களையும் கையாளுதல்.
- சுற்றுச்சூழலுக்கு உகந்த எரிபொருளாக இலங்கையின் மின்சாரத் துறைக்கு திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயுவை (LNG) அறிமுகப்படுத்தும் செயல்முறையை கண்காணித்தல்.
- மின்சாரத் துறையின் நிறுவன மறுசீரமைப்பு தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் ஒருங்கிணைத்தல்.
- அனல் மின் நிலைய திட்டங்கள் மற்றும் புதுப்பிக்கத்தக்க மின் நிலைய திட்டங்களுக்கு அங்கீகாரமளித்தல், செயல்படுத்துதல் மற்றும் நிலங்களை கையகப்படுத்துதல் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- மேற்கூறிய திட்டங்கள் தொடர்பாக வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தை ஒருங்கிணைத்தல்.

◆ **தொழில்நுட்பப் பிரிவு**

- இலங்கை மின்சாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க, விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளை வலுப்படுத்துதல் மற்றும் கொள்கை பணிப்புரைகளை உருவாக்குதல் ஆகியவற்றில் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுடன் இணைந்து செயல்படுதல்.
- மின்சாரப் பிறப்பாக்கம், கடத்துகை மற்றும் விநியோகிப்பதற்காக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் உரிமங்களை வழங்குவதற்கு கௌரவ அமைச்சரின் உடன்பாட்டை வழங்குவதற்கு தேவையான ஏற்பாடுகளை செய்தல்.
- தேசிய மின்சாரக் கொள்கை வழிகாட்டுதல்களை வெளியிடுதல், மின்சாரக் கட்டணங்களைத் தயாரித்தல், உரிமங்களை வழங்குதல் போன்றவற்றில் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுடன் ஒருங்கிணைந்து செயற்படுதல்.
- நீர்மின்சாரம் மற்றும் அனல் மின்சாரம் (எரிபொருள் எண்ணெய், நிலக்கரி, அணுசக்தி போன்றவை) போன்ற மின் நிலையங்களின் மின் உற்பத்தியை மேற்பார்வையிடுதல் மற்றும் கண்காணித்தல்.
- மின் தடையை நிவர்த்தி செய்தல் மற்றும் கடத்துகை மற்றும் விநியோக அமைப்புகளில் ஏற்படும் அனைத்து பற்றாக்குறைகளையும் தடுத்தல் மற்றும் தணித்தல் தொடர்பான அனைத்து தொழில்நுட்ப விடயங்களும்.
- நீர்மின்சாரம், அணுசக்தி, நிலக்கரி அனல் மின்சாரம், பிற அனல் மின்சாரம் மற்றும் வழக்கத்திற்கு மாறான புதுப்பிக்கத்தக்க வலுசக்தி போன்ற வளங்களைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்யும் அனைத்து மின் திட்டங்கள் தொடர்பான தொழில்நுட்ப விடயங்கள்.
- வலுசக்தி திட்டமிடல் தொடர்பான தொழில்நுட்ப விடயங்களை மேற்பார்வையிடுதல் மற்றும் கண்காணித்தல்.
- வலுசக்தி பாதுகாப்பு மற்றும் தேவை மற்றும் விநியோக முகாமைத்துவம் தொடர்பான தொழில்நுட்ப விடயங்கள்.
- இந்தியா-இலங்கை மின்சார கட்டங்கள் ஒன்றோடொன்று

இணைப்பு குறித்த முன்மொழியப்பட்ட திட்டம் தொடர்பான விடயங்கள்.

- நிலையான வலுசக்தியைப் பயன்படுத்தி இலங்கையில் மின்சார நடமாட்டத்தைப் பிரபலப்படுத்தும் நோக்கத்திற்கு இணங்க, மின்சார வாகன மின்னேற்றல் உள்கட்டமைப்பை ஊக்குவிக்கும் செயல்முறையைக் கண்காணித்தல்.
- வெளிவிவகார அமைச்சு மூலம் சார்க் (SAARC), பிம்ஸ்டெக் (BIMSTEC), எஸ்கப் (ESCP) போன்ற சர்வதேச அமைப்புகளுடன் மின்சாரம் மற்றும் வலுசக்தி தொடர்பான நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்.
- தொழில்நுட்பப் பிரிவுக்கு பொருத்தமான புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) மற்றும் ஒத்துழைப்புக்கான ஒப்பந்தங்களின் தேவையான அங்கீகாரங்கள் மற்றும் செயலாக்கங்களைப் பெறுவதில் விடயங்களை ஒருங்கிணைத்தல்.

◆ **திட்டமிடல் பிரிவு**

- அமைச்சின் செயல் திட்டங்கள், வருடாந்த செயல்திறன் அறிக்கை மற்றும் முன்னேற்ற அறிக்கை ஆகியவற்றைத் தயாரித்து தொடர்புடைய நிறுவனங்களுக்குச் சமர்ப்பித்தல்.
- திட்ட முன்மொழிவுகளைத் தயாரித்தல் மற்றும் மறுபரிசீலனை செய்தல் மற்றும் செயல்படுத்துவதற்கு தேவையான அங்கீகாரங்களைப் பெறுதல்.
- அபிவிருத்தித் திட்டங்களுக்கான வருடாந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளைத் தயாரித்தல்.
- அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றத்தைக் கண்காணித்தல் மற்றும் மீளாய்வு செய்தல் மற்றும் அவ்வப்போதைய முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்தல்.
- மின்சாரத் துறையின் தேசிய அளவில் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புகளை (NDCs) செயல்படுத்துவதைக் கண்காணித்தல் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் குறித்த நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை மேற்பார்வையிடுதல் மற்றும் மீளாய்வு செய்தல்.
- கார்பன் வர்த்தக வசதிக்கான கோரிக்கைகள் மற்றும் கார்பன் நிகர-பூஜ்ஜிய இலக்குகளை அடைவது தொடர்பான நடவடிக்கைகள்.
- சனாதிபதி செயலகம், பிரதமர் அலுவலகம், நிரல் அமைச்சுகள் மற்றும் திறைசேரி திணைக்களங்களால் கோரப்படும் பல்வேறு அறிக்கைகள் மற்றும் திட்டங்களைத் தயாரித்தல்.
- வலுசக்தி மாற்றம் சட்டம் மற்றும் தேசிய வலுசக்திக் கொள்கை மற்றும் உத்திகள் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.
- அமைச்சரவையின் அங்கிகாரத்தைத் தொடர்ந்து, பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் வருடாந்த அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்.

◆ **பெறுகைப் பிரிவு**

- அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழுக்கள் (HLPC/ SHLPC / SSHLPC) தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- அமைச்சு மட்டத்திலான ஆலொசனை பெறுகை குழுவின் (CPCM) தொடர்புடைய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தைக் குழுக்கள் (CANC) தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- அமைச்சின் பெறுகைக் குழுக்கள் (MPC) தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- பெறுகை மேல்முறையீடுகள் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- அமைச்சரவை குறிப்புகளை சமர்ப்பித்தல்.
- அமைச்சிற்கான தொடர்புடைய பெறுகைத் திட்டத்தைத் தயாரித்தல்.
- பல்வேறு பெறுகைக் குழுக்களுக்கு அதிகாரிகளை நியமிக்க ஒருங்கிணைத்தல், விசேட நிலையான அமைச்சரவை அங்கீகாரம் பெற்ற பெறுகைக் குழுக்களின் (SSCAPC) நடவடிக்கைகளை மேற்கொள்வது மற்றும் அமைச்சின் கீழ் வரும் நிறுவனங்களின் பெறுகைகளுக்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறுதல்.
- நிதி அமைச்சுடன் இணைந்து முழுதுமளாவிய பெறுகை விடயங்களை ஒருங்கிணைத்தல்.
- அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் பெறுகைகளை மேற்பார்வையிடுதல், கண்காணித்தல் மற்றும் தேவைப்படும் போது ஆலோசனை வழங்குதல்.

### நிதிப் பிரிவு

- அந்தந்த ஆண்டிற்கான அமைச்சின் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகளின் மூலம் அனைத்து செலவுகளையும் முகாமைத்துவம் செய்தல்.
- கௌரவ அமைச்சர் மற்றும் அமைச்சின் பணியாளர்களின் சம்பளங்களைத் தயாரிப்பதற்கும் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுத்தல் மற்றும் சம்பளக் கொடுப்பனவுகள் தொடர்பான பிற நடவடிக்கைகளில் பங்கேற்றல்.
- கௌரவ அமைச்சர் மற்றும் அமைச்சின் பணியாளர்களின் தேவைகளுக்கு ஏற்ப தேவையான சரக்கு பொருட்கள், எழுதுபொருட்கள் மற்றும் அலுவலக உபகரணங்களை கட்டளை செய்து வழங்குதல்.
- அமைச்சின் உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கை முறையாக இயக்குதல் மற்றும் பேணிவருதல்.
- அமைச்சின் செலவினங்களுக்குத் தேவையான ஒதுக்கீடுகளைக் கருத்தில் கொண்டு, அடுத்த நிதியாண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளைத் தயாரித்தல்.
- அமைச்சின் அரசாங்க வருவாயாகப் பெறப்படும் பண வரவுகள் மற்றும் அமைச்சின் பணிகளுக்காகச் செய்யப்பட்ட செலவினங்களுக்கான பொருள்களை வகைப்படுத்தி கணக்கு பேரேட்டை தயாரித்து பேணிவருதல்.
- அமைச்சின் தினசரி வருமானம் மற்றும் ஏற்பட்ட செலவுகள் குறித்த மாதாந்த கணக்குகளைத் தயாரித்து, அக்கணக்குகளின் விபரங்களை திறைசேரிக்கு சமர்ப்பித்தல்.
- அமைச்சின் அனைத்து கொடுக்கல் வாங்கல்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒதுக்கீட்டுக் கணக்கை (Appropriation Account) ஆண்டுதோறும் தயாரித்து கணக்காய்வு தலைமை அதிபதியிடம் சமர்ப்பித்தல்.

### உள்ளக கணக்காய்வுப் பிரிவு

- முகாமைத்துவ கணக்காய்வு திணைக்கள வழிகாட்டுதல்களின்படி அபாயங்களின் அடிப்படையில் அமைச்சின் வருடாந்த உள்ளக கணக்காய்வுத் திட்டத்தைத் தயாரித்தல்.
- அங்கீகரிக்கப்பட்ட உள்ளக கணக்காய்வுத் திட்டத்தை செயல்படுத்துதல்.
- அமைச்சின் கீழ் உள்ள சட்டப்பூர்வ அமைப்புகள் தொடர்பான கடமைகளைச் செய்தல்.
- தலைமை கணக்கு அதிகாரியின் அறிவுறுத்தலின்படி விசேட விசாரணைகளை நடத்துதல்.
- கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்களை நடத்துதல்.
- காலாண்டு அறிக்கைகளைத் தயாரித்தல்.

## 1.6 அமைச்சின் நோக்கெல்லையின் கீழ் உள்ள நிறுவனங்கள்

- **இலங்கை மின்சார சபை**

இலங்கை மின்சார சபை (CEB) என்பது 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஒரு அரசுக்கு சொந்தமான நிறுவனமாகும், மேலும் இது இலங்கையில் மின்சார உற்பத்தி, கடத்தல் மற்றும் விநியோகத்தை ஒழுங்குபடுத்துவதற்காக பல முறை திருத்தப்பட்டுள்ளது. 2013 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்ட 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டம், இலங்கை மின்சார சபையை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் (PUCSL) கீழ் கொண்டு வந்தது. அண்மைய சீர்திருத்தமான 2024 ஜூன் 27 அன்று சான்றுப்படுத்தப்பட்ட 2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டம் மற்றும் அதன் 2025 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க திருத்தமாகும்.

- **லங்கா எலக்ரிசிட்டி கம்பனி (பிரைவட்) லிமிடெட்**

லங்கா எலக்ரிசிட்டி கம்பனி (பிரைவட்) லிமிடெட் (LECO) என்பது 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் மற்றும் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் ஆகியவற்றின் கீழ் 1983 இல் கூட்டிணைக்கப்பட்ட ஒரு வரையறுக்கப்பட்ட பொறுப்பு நிறுவனமாகும். மேல் மாகாணத்திலிருந்து தென் மாகாணம் வரையிலான கடலோரப் பகுதியில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட பகுதிகளில் மின்சாரத்தை விநியோகிப்பதற்காக லங்கா எலக்ரிசிட்டி கம்பனி (பிரைவட்) லிமிடெட் நிறுவப்பட்டுள்ளது. லெகோ என்பது இலங்கை மின்சார சபையின் ஒரு துணை நிறுவனமாகும், இதில் இ.மி.ச. 54.84% பங்குகளையும், திறைசேரி 43.56%, நகர அபிவிருத்தி அதிகாரசபை 0.79% மற்றும் உள்ளூர் அதிகாரசபைகள் 0.81% சிறுபான்மை பங்குகளையும் கொண்டுள்ளன. இதன் முதன்மை நோக்கம் அதன் உரிமையுள்ள பகுதிக்குள் மின்சாரத்தை விநியோகிப்பதாகும், இது நீர்கொழும்பிலிருந்து காலி வரையிலான இலங்கையின் மேற்கு கடற்கரைப் பகுதியில் உள்ள முதன்மை பொருளாதார வலயத்தை உள்ளடக்கியது. லெகோ 631,000 க்கும் மேற்பட்ட நுகர்வோருக்கு சேவை செய்கிறது. அதைத் தொடர்ந்து 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மின்சாரச் சட்டத்தின் மூலம், லெகோ நிறுவனத்திற்கு விநியோக உரிமம் வழங்கப்பட்டதன் மூலம் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் ஒழுங்குறுத்துகை வரம்பிற்குள் கொண்டு வரப்பட்டது.

- **இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை**

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை (SLSEA) நிலைபேறான வலுசக்தி அபிவிருத்திக்கான மாதிரி தேசிய முகவராண்மையொன்றாக புதுப்பிக்கத்தக்க சக்தி அபிவிருத்தி, வலுசக்தி முகாமைத்துவம், கொள்கை அபிவிருத்தி மற்றும் நிதி முகாமைத்துவம் ஆகிய நான்கு முதன்மை நோக்கங்களுடன் அக்டோபர் 1, 2007 ஒக்தோபர் 1 ஆந் திகதியன்று நிறுவப்பட்டது. இந்த அதிகாரசபையானது 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபேறான வலுசக்தி அதிகாரசபைச் சட்டத்தினால் கூட்டிணைக்கப்பட்டது. இலங்கை 2050 ஆம் ஆண்டிற்குள் கார்பன் நடுநிலையை அடைவதற்கான ஒரு முன்னெடுப்பை தொடங்கியுள்ளது, இந்த இலக்கின் 70% புதுப்பிக்கத்தக்க வலுசக்தி பிறப்பாக்கத்தை 2030 ஆம் ஆண்டிற்குள் அடைவதை நோக்காகக் கொண்டுள்ளது. 2024 ஆம் ஆண்டளவில், குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளதுடன், இலக்கின் 64மூ ஏற்கனவே அடையப்பட்டுள்ளது.

- **எல்.ரீ.எல் ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிடெட்**

முன்னர் “லங்கா டிரான்ஸ்.்.பார்மர்ஸ் லிமிடெட்” என்று அழைக்கப்பட்ட எல்.டி.எல் ஹோல்டிங்ஸ் லிமிடெட் (LTLH)

என்பது இலங்கை மின்சார சபை (CEB) மற்றும் மூன்று பிற நிறுவனங்களுக்கு இடையிலான ஒரு பொது தனியார் கூட்டாண்மை ஆக இருப்பதோடு, இதன் உரிமையானது எல்.டி.எல் குழுமத்தின் ஊழியர்கள் மற்றும் வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவேட்) லிமிடெட் (WCPL) ஆகியோரிடம் உள்ளது. தற்போதைய பங்குரிமை கட்டமைப்பின் அடிப்படையில், இது CEB 35% மற்றும் WCPL கு 28% பிரதிநிதித்துவப்படுத்துவதோடு எஞ்சிய 37% எல்.டி.எல் குழுமத்தின் ஊழியர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இரண்டு (02) நிறுவனங்களுக்கு உரியதாகவுள்ளது.

- **இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை**

இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை (SLAERC) 2014 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்திச் சட்டத்தின் (சட்டம்) கீழ் 2015 ஜனவரி 1 ஆம் திகதி நிறுவப்பட்டது. பேரவையானது தற்போது மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் கீழ் இயங்குகிறது. சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை பின்வருவனவற்றிற்கு ஆணைகளை கொண்டுள்ளது.:

ஆ. பொதுமக்கள், கதிர்வீச்சு தொழிலாளர்கள், நோயாளிகள் மற்றும் சுற்றுச்சூழலின் பாதுகாப்பிற்காக உரிமம் வழங்குதல், பரிசோதனை செய்தல் மற்றும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் அயனியாக்கும் கதிர்வீச்சு சம்பந்தப்பட்ட நடைமுறைகள் மற்றும் மூலங்களை ஒழுங்குபடுத்துதல்.

ஆ. கதிர்வீச்சு மூலங்களின் பாதுகாப்பு மற்றும் தற்காப்பை உறுதி செய்தல்.

இ. சட்ட ஏற்பாடுகள் மற்றும் உரிமநிபந்தனைகளை மீறுபவர்களுக்கு எதிராக வினைப்படுத்துகை நடவடிக்கைகளை எடுத்தல்.

ஈ. அணுசக்தி பயன்பாடுகள் தொடர்பான காப்பு, பாதுகாப்பு மற்றும் தற்காப்புகள் குறித்து இலங்கை கைச்சாத்திட்ட ஒப்பந்தங்களின் மீதான இலங்கையின் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.

- **இலங்கை அணுசக்திச் சபை**

இலங்கை அணுசக்திச் சபை (SLAEB) என்பது அரசாங்கத்தின் முதன்மையான அணுசார் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைப்பாகும், இது மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் கீழ் இயங்குகிறது. 2014 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க அணுசக்திச் சட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட அதிகாரங்களிலிருந்து இலங்கை அணுசக்திச் சபைப் ஆணை ஊடாக - தேசிய அபிவிருத்தி நோக்கங்களுக்காக அணுசார் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத்தின் பயன்பாட்டை மேம்படுத்துவதற்கும் ஊக்குவிப்பதற்குமாக ஏற்பாடுசெய்கின்றது. இலங்கை அணுசக்திச் சபை தொடர்புடைய சேவைகள், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி (R&D) பணிகள் மூலம் அணு தொழில்நுட்பத்தின் அமைதியான பிரயோகத்தை ஊக்குவித்து மேம்படுத்துவதோடு மற்றும் பாதுகாப்பு, காப்பு மற்றும் தரத்தை உறுதி செய்யும் அதே வேளையில் ஒழுங்குறுத்துகை தேவைகளை பூர்த்தி செய்ய கதிர்வீச்சு பாதுகாப்பு சேவைகளை வழங்குகிறது. இலங்கையில் மருத்துவம், விவசாயம், கைத்தொழில், வலுசக்தி மற்றும் சுற்றுச்சூழல் துறைகளின் வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கக்கூடிய பரந்த அளவிலான பிரயோகத்தை அணு தொழில்நுட்பம் கொண்டுள்ளது.

- **லங்கா கோல் கம்பனி (பிரைவட்) லிமிடெட்**

லங்கா கோல் கம்பனி (பிரைவட்) லிமிடெட் (LCC) என்பது முற்றிலும் அரசாங்கத்திற்கு சொந்தமான ஒரு வணிக நிறுவனமாகும். இலங்கை மின்சார சபையின் (CEB) கீழ் இயங்கும் நுரைச்சோலையில் உள்ள லக்விஜய மின் நிலையத்திற்கு (LVPP) நிலக்கரியை இறக்குமதி செய்து விநியோகிக்கும் நோக்கத்திற்காக மட்டுமே இந்நிறுவனம் கூட்டிணைக்கப்பட்டது. லங்கா

கோல் கம்பனி (பிரைவட்) லிமிடெட் என்பது இலங்கை மின்சார சபையின் ஒரு ஏக துணை நிறுவனமாகும், இதில் 60% பங்குகளும், திறைசேரி 20%, லங்கா ஷிப்பிங் கோபரேஷன் 10% மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபை 10% ஆகிய சிறுபான்மை பங்குகளையும் கொண்டுள்ளன.

- **லங்கா எனர்ஜிஸ் (பிரைவட்) லிமிடெட்**

லங்கா எனர்ஜிஸ் (பிரைவட்) லிமிடெட் என்பது 2011 இல் கூட்டிணைக்கப்பட்ட ஒரு நிறுவனமாக இருப்பதோடு இது இலங்கை மின்சார சபையின் 100% சொந்தமான துணை நிறுவனமாக இயங்குகிறது.

லங்கா எனர்ஜிஸ் (பிரைவட்) லிமிடெட் ஆனது ஒருங்கிணைந்த மின்சார கடத்துகை ஆதன விருத்தி, மற்றும் மனிதவள மூலவள வழங்குகை ஆகிய உள்ளிட்ட ஏனைய நோக்கங்களுடன், புதுப்பிக்கத்தக்க வலுசக்தி அபிவிருத்தி என்ற தொலைநோக்குடன் இயங்குகிறது.

- **இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்**

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், (CPC), பெற்றோலியப் பொருட்களின் இறக்குமதி, ஏற்றுமதி, சுத்திகரிப்பு, விற்பனை, வழங்கல் அல்லது விநியோகம் தொடர்பான வணிக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டிருக்கின்றது. இந்த நிறுவனம் பெற்றோலியப் பொருட்களின் முக்கிய இறக்குமதியாளராக உள்ளதுடன் பெற்றோலியப் பொருட்களுக்கான உள்நாட்டுத் கேள்வியில் சுமார் 68% ஐ இறக்குமதி செய்து விநியோகிக்கிறது. 1969 ஆம் ஆண்டு முதல், இந்நிறுவனம் முழு உரிமையின் கீழ் மசகு எண்ணெயை இறக்குமதி செய்து சப்புகஸ்கந்தவில் உள்ளூர் சுத்திகரிப்பு மற்றும் விநியோகத்தை மேற்கொண்டு வருவதுடன், இது பெற்றோலியப் பொருட்களுக்கான மொத்த உள்நாட்டுத் கேள்வியில் சுமார் 32% வழங்குகிறது. இதற்கு மேலாக, இது விமான எரிபொருளின் ஏக வழங்குநராக செயல்படுவதுடன் மின்சார பிறப்பாக்கத்திற்கான எரிபொருளையும் வழங்குகிறது.

- **சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல்ஸ் லிமிடெட்**

சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல்ஸ் லிமிடெட் (CPSTL) என்பது 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட ஒரு நிறுவனமாகும். இந்நிறுவனமானது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா இந்தியன் ஒயில் நிறுவனத்தின் பங்குரிமை மூலம் இணைக்கப்பட்டது. இது சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள் விநியோகத்தை மேற்கொள்வதோடு பெற்றோலிய களஞ்சியப்படுத்தலையும் பேணி வருகின்றது.

- **இலங்கைப் பெற்றோலிய அபிவிருத்தி அதிகாரசபை**

இலங்கைப் பெற்றோலிய அபிவிருத்தி அதிகாரசபை (PDASL) 2021 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ளது மற்றும் பெற்றோலியத்துடன் தொடர்புடைய வளங்களை ஆய்வு செய்வதற்கும் மேம்படுத்துவதற்கும் அங்கீகரிக்கப்பட்ட அமைப்பாகும்.

- **ரின்கோ பெற்றோலியம் டெர்மினல் (தனியார்) கம்பனி**

இந்நிறுவனம் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டதோடு அதன் முக்கிய கடமைப்பொறுப்பு யாதெனில் திருகோணமலையில் உள்ள பெற்றோலிய சேமிப்பு களஞ்சிய தாங்கிகளின் செயற்பாடுகளை விருத்திசெய்வதாகும்.

# அத்தியாயம் 02
# 2025 ஆம் ஆண்டின் முன்னேற்றம் மற்றும் 2026 ஆம் ஆண்டிற்கான எதிர்கால கண்ணோட்டம்

# அத்தியாயம் 02

# 2025 ஆம் ஆண்டின் முன்னேற்றம் மற்றும் 2026 ஆம் ஆண்டிற்கான எதிர்கால கண்ணோட்டம்

## 2.1. 2025 ஆம் ஆண்டில் மின்சக்திப் பிரிவின் செயலாற்றுகை

### 2.1.1. மின்சாரத்துறை ஒரே பார்வையில்

**அட்டவணை 2.1.1**
**வாடிக்கையாளர் தளம் 2025**

| இல | வகுதி | இ.மி.ச | லெகோ | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | வீட்டுத் தேவை | 6,142,601 | 521,473 | 6,664,074 |
| 2 | சமயசார் நோக்கம் | 44,777 | 2,804 | 47,581 |
| 3 | கைத்தொழில் தேவை | 73,039 | 3,566 | 76,605 |
| 4 | பொதுத் தேவை | 908,991 | 108,069 | 1,017,060 |
| 5 | ஹோட்டல் | 972 | 141 | 1,113 |
| 6 | அரசாங்கம் | 9,254 | 420 | 9,674 |
| 7 | விவசாயம் | 4,636 | - | 4,636 |
| 8 | வீதி விளக்குகள் | 1 | 2,028 | 2,029 |
| 9 | தற்காலிகத் தேவை | - | 61 | 61 |
| | மொத்தம் | **7,184,271** | **638,501** | **7,822,772** |

### 2.1.2 மின்சார பிறப்பாக்கம்

2025 இல் மொத்த மின்சார பிறப்பாக்கம் 17,812 ஜி.வோ (நிகர) ஆக இருந்ததோடு இது கடந்த வருட பெறுமதியுடன் 16,802 ஜி.வோ ஒப்பிடும்போது 6 வீத வளர்ச்சியாகும். இதில் 60 வீத பிறப்பாக்கம் 2025 இல் புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களின் பங்களிப்பைக் கொண்டுள்ளது. எஞ்சிய மின் உற்பத்தி நிலக்கரி மற்றும் எண்ணெய் அடிப்படையிலான அனல் மின் நிலையங்கள் மூலம் பெறப்படுகிறது.


கீழே தரப்பட்ட அட்டவணையானது 2025 இல் ஒவ்வொரு மூலத்தினாலும் செய்யப்பட்ட பங்களிப்பு சதவீகத்தை காட்டுவதோடு இது பெறுமதியில் 17,812 ஜி.வோ ஆகவுள்ளது.

**அட்டவணை 2.1.2.**
**மின்சார பிறப்பாக்கம் – 2025**

| இல | மூலம் | சதவிகிதம் (%) |
|---|---|---|
| 01 | நீர்மின்சாரம் (CEB) | 35 |
| 02 | சிறிய நீர்மின்சாரம் (IPP) - தனியார்துறை) | 8 |
| 03 | காற்று மின்சாரம் (CEB) | 2 |
| 04 | காற்று மின்சாரம் (IPP) | 2 |
| 05 | கூரைமேல் சூரிய சக்தி (IPP) - மதிப்பிடப்பட்டது | 10 |
| 06 | முறைமையுடன் இணைக்கப்பட்ட சூரிய சக்தி (IPP) | 2 |
| 07 | அனல் எண்ணெய் (CEB) | 8 |
| 08 | அனல் எண்ணெய் (IPP) | 5 |
| 09 | நிலக்கரி (CEB) | 27 |
| 10 | ஏனைய மரபுசாராதவை | 1 |
| | மொத்தம் | **100** |

மூலம்: இ.மி.ச., லெகோ, நி.ச.அ

வரைபு – 2.1.1




IPP – சுயாதீன மின்சார உற்பத்தியாளர்கள்

### 2.1.3. தேசிய மின்சார வலையமைப்பின் நிறுப்பட்ட கொள்திறன்


2025 டிசம்பர்இறுதியில் மொத்த நிறுவப்பட்ட கொள்திறன் 6,749 மெகாவோட்டாக இருந்தது, அதன் விபரங்களை பின்வரும் அட்டவணையில் காணலாம்.

பிரதான நீர்மின் நிலையங்களின் நிறுவப்பட்ட திறன், மொத்தத் திறனில் 23% ஆக இருந்தது. சிறிய நீர் மின்சாரம் உள்ளிட்ட புதுப்பிக்கத்தக்க வலுசக்தி பொறித்தொகுதிகள் மொத்தத் கொள்ளளவில் 67% ஆகவும், கூரைமேல் பொருத்தப்பட்ட சூரியசக்தி 29% ஆகவும், ஏனையவை 38% ஆகவும் பங்களித்தன.

**அட்டவணை 2.1.3**
**மின்பிறப்பாக்க மூலங்களின் அடிப்படையில் நிறுவப்பட்ட மின்சார கொள்திறன்**
**(2025 டிசம்பர் இறுதில் உள்ளவாறு)**

| | சக்தி மூலம் | | நிறுவப்பட்ட கொள்திறன் (மெகாவோட்) | மின் நிலையங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | அனல் மின்சாரம் | வெப்ப எண்ணெய் (CEB) | 727 | 07 |
| 2 | | வெப்ப எண்ணெய் (IPP) | 582 | 02 |
| 3 | | நிலக்கரி | 900 | 01 |
| 4 | புதுப்பிக்கத்தக்க சக்தி | பெரிய நீர்மின் திட்டம் (CEB) | 1,530 | 19 |
| 5 | | சிறிய நீர்மின் திட்டம் (IPP) | 437 | 221 |
| 6 | | காற்று மின்சாரம் (CEB) | 104 | 01 |
| | | காற்று மின்சாரம் (IPP) | 163 | 19 |
| 7 | | தரையில் பொருத்தப்பட்ட சூரிய சக்தி (IPP) | 307 | 131 |
| 8 | | கூரை மேல் சூரிய சக்தி (IPP) | 1,935 | 108,979 |
| 9 | | NCRE ஏனைய (IPP) | 64 | 16 |
| | மொத்த திறன் (கூரை மேல் பொருத்தப்பட்ட சூரிய சக்தியுடன்) | | **6,749** | **109,396** |

**வரைபு – 2.1.2**
**மின்பிறப்பாக்க மூலங்கள்**




### 2.1.4. பிறப்பாக்கக் கருத் திட்டங்கள்

தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் முக்கிய மின்பிறப்பாக்க கருத் திட்டங்கள் வருமாறு:

**அட்டவணை 2.1.4**
**நீர் மின்சார பிறப்பாக்க விரிவாக்கல் கருத்திட்டங்கள்**

| இல | கருத்திட்டம் / நிகழ்ச்சித்திட்டம் | முன்னேற்றம் | நிறைவுத் திகதி |
|---|---|---|---|
| 1 | 30.5 மெ.வோ மொரகொல்ல நீர்மின் திட்டம் | நிர்மாணப் பணிகள் இடம்பெற்று வருவதோடு இறுதி கட்டத்தில் உள்ளன (91.7%) | 2026 செப்டம்பர் |

**அட்டவணை 2.1.5**
**அனல் மின்சார பிறப்பாக்க விரிவாக்கல் கருத்திட்டங்கள்**

| இல | கருத்திட்டம் ஃ நிகழ்ச்சித்திட்டம் | முன்னேற்றம் | நிறைவுத் திகதி |
|---|---|---|---|
| 1 | முதலாவது 350 மெகாவோட் இயற்கை எரிவாயு கூட்டுச் சுழற்சி மின் நிலையம் கெரவலபிட்டிய | ஒருங்கிணைந்த சுழற்சி செயல்பாடுகள் 2025-06-23 அன்று தொடங்கப்பட்டு, தொடர்ந்து வெற்றிகரமாக இயங்கிவருவதோடு, தேசிய மின் கட்டமைப்புக்கு 320 மெகாவோட் மின்சாரத்தை வழங்குகின்றன. | நிறைவுற்றது |
| 2 | இரண்டாவது 350 மெகாவோட் இயற்கை எரிவாயு ஒருங்கிணைந்த சுழற்சி மின் நிலையம்- கெரவலப்பிட்டிய | சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு மற்றும் விரிவான வடிவமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. திட்டத்தின் ஆரம்பகட்டப் பணிகள் 2026- ஏப்ரலில் நிறைவடை திட்டமிடப்பட்டுள்ளது.<br><br>திறந்த சுழற்சி செயல்பாடு 2028 மார்ச் இல் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது | GT- ஒக்டோபர். 2027<br><br>ST- ஒக்டோபர். 2028 |

| | | | |
|---|---|---|---|
| 3 | களனிதிஸ்ஸவில் 130 மெகாவொட் எரிவாயு விசையாழிகள் | பெறுகை செயற்பாடு தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. | 2030 |
| 4 | கெரவலப்பிட்டியவில் 200 மெகாவொட் IC இயந்திர இரட்டை எரிபொருள் (இயற்கை எரிவாயு மற்றும் HFO அல்லது டீசல்) மின் உற்பத்தி நிலையம் | தற்போதைய நிலைமையில், கருத்திட்டத்தை நிறுத்தி வைத்து அதன் தேவைகளை மீளாய்வு செய்ய அமைச்சினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. | 2028 |

**அட்டவணை 2.1.6**
**கூரை மீது பொருத்தப்பட்ட சூரியகல இணைப்புகளின் முன்னேற்றம்**

| விபரம் | நிகர மாணிவாசிப்பு | நிகர மிகை | நிகர கணக்கீடு | நிகர மிகை மிகை | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| சூரியகல உற்பத்தியாளர்களின் எண்ணிக்கை | 14,453 | 3,589 | 72,088 | 18,849 | 108,979 |
| பொருத்தப்பட்ட அளவு (மெ. வோ) | 233 | 225 | 863 | 614 | 1,935 |

**அட்டவணை 2.1.7**
**காற்று மின்பிறப்பாக்க கருத்திட்டங்கள்**

| கருத்திட்டத்தின் பெயர் | கொள்திறன் | 2025–12–31 இல் பௌதீக முன்னேற்றம் | பூர்த்திசெய்ய எதிர்பார்க்கும் திகதி |
|---|---|---|---|
| (1-10) மெகாவோட் திறன்களில் 60 மெகாவோட் காற்றாலை மின் கருத்திட்டம் | 35MW | - 15 மெகாவோட் மின் நிலையம் (மன்னார்) செயல்பாட்டிற்கு வந்தது<br>- 10 மெகாவோட் மின் நிலையம் (திருகோணமலை) - இரத்து செய்யப்பட்டது<br>- 2 x 5 மெகாவோட் (மாதம்பே - மீள கேள்விப்பத்திரம் கோரப்பட்டது) - மின் பெறுகை ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது மற்றும் தவிர்க்க முடியாத சூழ்நிலை (நிலப் பிரச்சினை) காரணமாக உள்ளது | 2027 |
| 250 மெகாவோட் மன்னார் இரண்டாம் கட்ட காற்றாலை மின் கருத்திட்டம் | 250 MW | - திட்ட முன்மொழிபவர் முன்மொழிவைச் சமர்ப்பித்துள்ளார், மேலும் CANC உடன் நிதி முன்மொழிவு குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. | 2026 |

| கருத்திட்டத்தின் பெயர் | கொள்திறன் | 2025–12–31 இல் பௌதீக முன்னேற்றம் | பூர்த்திசெய்ய எதிர்பார்க்கும் திகதி |
|---|---|---|---|
| 20 மெகாவோட் தரைவழி காற்றாலை மின் நிலையங்கள் (2.5-10 மெகாவோட்) | 20 MW | - 3 x 5 மெகாவோட் - பொறித்தொகுதி நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ளன, 2026 ஜனவரியில் செயல்பாட்டிற்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.<br>- 1 x 5 மெகாவோட் - பொறித்தொகுதி, எதிர்பாராத நெருக்கடி நிலையில் உள்ளது. 2026 பெப்ரவரியில் செயல்பாட்டிற்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. | 2026 |
| 234 மெகாவோட் பூநகரி காற்றாலை மின் கருத்திட்டம் | 234 MW | - திட்ட முன்மொழிபவர் திட்ட முன்மொழிவைச் சமர்ப்பித்துள்ளார், மேலும் ஊயுஊேஊ உடன் நிதித் திட்ட முன்மொழிவு குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது | 2026 |
| மன்னார் 50 மெகாவோட் காற்றாலைத் கருத்திட்டம் | 50 MW | - 2025-05-28 அன்று PPA கைச்சாத்திடப்பட்டது | 2027 |
| முள்ளிக்குளம் 2 x 50 மெகாவோட் காற்றாலைத் கருத்திட்டம் | 100MW | - 2026-01-14 அன்று ஒப்பந்தம் வழங்கப்பட்டது | 2027 |

**ஆட்டவணை 2.1.8**
**வலுசக்தி சேமிப்பு அபிவிருத்தி கருத்திட்டங்கள்**

| இல | கருத்திட்டம் / நிகழ்ச்சித்திட்டம் | முன்னேற்றம் | நிறைவுத் திகதி |
|---|---|---|---|
| 1 | 100 மெகாவோட் / 100 மெகாவோட்-மணி தனித்த மின்கல சேமிப்பு சேமிப்பு (BESS) (கொலன்னாவ) | கோரிக்கை முன்மொழிவு இறுதி செய்யப்பட்டு வருகிறது | 2027 |
| 2 | 160 மெகாவோட் / 640 மெகாவோட்-மணி தனித்த BESS திட்டம் | கேள்விப்பத்திரம் கோரப்பட்டுள்ளது | 2026 |
| 3 | ஹம்பாந்தோட்டாயில் 5 மெகாவோட/10.7 மெகாவோட்-மணி மின்கல சக்தி சேமிப்பு முறைமை | சோதனை மற்றும் செயல்பாட்டுக்குக் கொண்டுவரும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன | 2026 |
| 5 | தெற்குப் பகுதியில் 100 மெகாவோட் / 400 மெகாவோட்-மணி BESS | திட்டத்தைத் ஆரம்பிக்க CEB-யின் உள்ளக அங்கீகாரங்கள் பெறப்பட்டன | 2028 |
| 6 | மகா ஓயா நீரேற்று சேமிப்பு மின் நிலையத்தில் 600 மெகாவோட் PSPP | விரிவான வடிவமைப்பிற்கான நிதி திரட்டும் பணி நடைபெற்று வருகிறது | 2034 |

**அட்டவணை 2.1.9**
**முறைமை நவீனமயப்படுத்துகை மற்றும் ஆதரவு கருத்திட்டங்கள்**

| இல | கருத்திட்டம் / நிகழ்ச்சித்திட்டம் | முன்னேற்றம் | நிறைவுத் திகதி |
|---|---|---|---|
| 1 | தேசிய முறைமை கட்டுப்பாட்டு நிலையத்தில் உள்ள புதுப்பிக்கத்தக்க வலுசக்தி கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்புப் கருமபீடம் | கேள்விமுறி ஆவணம் தயாரிக்கப்பட்டு வருகிறது | 2027 |

### 2.1.5 மின்செலுத்துகை அபிவிருத்திகள்

மின் இணைப்பு கட்டமைப்பை வலுப்படுத்துதல், முறைமையின் நம்பகத்தன்மையை மேம்படுத்துதல் மற்றும் எதிர்காலத் தேவை வளர்ச்சியை ஈடுசெய்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு, நடைபெற்று வரும் மின் செலுத்துகை உள்கட்டமைப்பு அபிவிருத்தி கருத்திட்டங்களின் நிலைமை, 2025.12.31 இல் உள்ளவாறு கீழே வழங்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.1.10**
**இடம்பெற்றுவரும் மின்செலுத்துகை அபிவிருத்தி கருத்திட்டங்களின் முன்னேற்றம்**

| கருத்திட்டம்/ கிளை | பொதி | செலவு (இல.ரூ மில்லயன்) | 2025.12.31 உள்ளவாறு பௌதீக முன்னேற்றம் | நிறைவுத் திகதி |
|---|---|---|---|---|
| தேசிய மின் பரிமாற்றம், விநியோக வலையமைப்பு மேம்பாடு மற்றும் மின் விநியோகத் கருத்திட்டம் | பொதி 1: 400 கி.வோ 220 கி.வோ மற்றும் 132 கி.வோ மின் செலுத்துகை இணைப்பை நிர்மாணித்தல் | 41,589 | 80.55% | 2026 டிசம்பர் |
| | பொதி 2: மின்கட்டமைப்பு துணை மின்நிலையங்கள் அமைத்தல் மற்றும் மேம்படுத்துதல் | | 78.90% | 2026 மார்ச்சு |
| | பொதி 3: மின் செலுத்துத் தடங்கள் அமைத்தல் (220 கி.வோ , 132 கி.வோ) | | 79.4% (ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டது-59.8%) | 2028 சனவரி (29.01.2026 புதிய கேள்விமுறி மூடப்பட்டது கட்டம் II) |
| | பொதி 4: மின்பகிர்வு துணை மின்நிலையங்கள் மற்றும் மின்கம்பிகள் அமைத்தல் (33 கி.வோ , 11 கி.வோ, 0.4 கி.வோ) | | 41% (ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டது). | 2029-ஆகஸ்ட் (புதிய கேள்விமுறை செயன்முறை கட்டம் II) |
| மின் விநியோக நம்பகத்தன்மை மேம்பாட்டுத் திட்டத்திற்கு ஆதரவளித்தல் | 16 எண்ணிக்கையிலான 33 கி.வோ கோபுரத் தடங்கள் (285 கி.மீ) மற்றும் 13 எண்ணிக்கையிலான இரண்டு பிரிவு ஒற்றை பஸ்பார் கேன்ட்ரிகள் | USD 23.65 மில் & ரூ 4,867.5 மில் | 91% | 2026 மார்ச்சு- |
| கெரவலப்பிட்டிய- துறைமுகம் 220 அடி வடக்கு இரண்டாம் நிலத்தடி கேபிள் திட்டம் | 15.7 கி.மீ நிலத்தடி மின்கம்பிச் சுற்று அமைத்தல் கெரவலபிட்டியவிலிருந்து போர் ஜிஎஸ்எஸ் வரை | USD 52 மில் | 0.00% | 27 ஒக்டோபர் |
| மின்செலுத்துகை நிர்மாண கருத்திட்டங்கள் | மெதகம - அம்பாறை 132 கி.வோ மின் செலுத்துகை இணைப்பின் புனரமைப்பு | 3,206 | 79% | 26 மே |
| | விக்டோரியா - ரந்தெம்பே 220 கி.வோ மின் செலுத்துகை இணைப்பின் நிர்மாணம் | 2,200 | EIA அங்கீகாரத்துடன் திருத்தப்படவுள்ளது | 27 – ஏப்ரல் |
| | பூநகரி - கிளிநொச்சி 220 கி.வோ மின் செலுத்துகை இணைப்பின் நிர்மாணம் | | - | N/A |
| | கொலன்னாவை - பன்னிப்பிட்டிய 132 கி.வோ மின் செலுத்துகை இணைப்பின் புனரமைப்பு | 1,120 | - | 26 - டிசம்பர் |
| | களனிதிஸ்ஸ - கொலன்னாவை 132 கி.வோ மின் செலுத்துகை இணைப்பின் உயரத்தை அதிகரித்தல் | 702 | - | காணப்படவில்லை |
| | தம்புள்ள - புதிய ஹபரணை 220/132 கிவோ மின் செலுத்துகை இணைப்பு நிர்மாணம் | 1,790 | 55% | 26 - மே- |

| | | | | |
|---|---|---|---|---|
| மின்செலுத்துகை நிர்மாண கருத்திட்டங்கள் | மன்னார் - நடுக்குடா 220 கிவோ மின் செலுத்துகை இணைப்பு புனரமைத்தல் | 550 | 10% | 26 - டிசம்பர் |
| | களனிதிஸ்ஸ 132 கிவோ புவிநிலைத் துணை மின்பரிமாற்றப் இணைப்பை விஸ்தரித்தல் | 1,400 | கட்டம் 1 - 100%<br>கட்டம் 2 -15% | 25 - செப்டம்பா |
| | பலங்கொட மின்கட்டமைப்பு துணை மின்நிலையத்தில் இரண்டு 33 அடி/ வடக்கு மின்பரிமாற்ற இணைப்புகள் நிர்மாணம் | 702 | 80% | 26 - மார்ச்சு |
| | ரந்தம்பே ஸ்விட்ச் யார்டில் 220கி. வோ ஜிஐஎஸ் நிர்மாணம் | 464 | - | 26- டிசம்பர் |
| | விக்டோரியா பிஎஸ் ஸ்விட்ச் யார்டில் ஒரு 220கி.வோ /பீடர் பேக் நிர்மாணம் | 291 | 60% | 26 - டிசம்பர் |
| | அம்பாறை கிரிட்டில் 01 எண். 132கி. வோ /பீடர் பேக் நிர்மாணம் | 67 | 85% | 26 - டிசம்பர் |
| | 33கி.வோ பாதுகாப்பு ரிலே மாற்றுதல் | 15 | 45% | 26 - மார்ச்சு |
| | புதிய அனுராதபுர ஜிஎஸ்-இல் 02 இல். 220கி.வோ /பீடர் பேக்கள் நிர்மாணம் | 2,809 | 70% | 226 - மே- |
| | சுன்னாகம் ஜிஎஸ்-இன் விரிவாக்கம் | 229 | 38% | 26 - மே- |
| | அனியகந்த ஜிஎஸ்-இன் விரிவாக்கம் | 350 | 48% | 26 - மார்ச்சு |
| | குக்குலேகங்க ஸ்விட்ச்யார்டின் விரிவாக்கம் | 85 | 60% | 26 -ஏப்ரல் |
| | மத்துகம ஜிஎஸ்-இன் விரிவாக்கம் | 212 | 38% | 26 -மே- |
| | விரிவாக்கம் நடுக்குடா புவி மின்நிலையம் | 595 | 5% | 26 -மே- |
| மின்செலுத்துகை நிர்மாண கருத்திட்டங்கள் | சியபலாண்டுவ மின்கட்டமைப்பு துணை மின்நிலையம் நிர்மாணம் | - | 14% | 27 –ஏப்ரல் |
| | எம்பிலிப்பிட்டிய இ.உ.ப மின்கட்டமைப்பை விரிவாக்குதல் | 353 | கட்டம் 1 - 100%<br>கட்டம; 2 - NS | 25 - டிசம்பர் |
| மன்னார்- வவுனியா 220 கி.வோ மின்செலுத்துகை இணைப்பு மேம்படுத்தல் கருத்திட்டம். | தற்போதுள்ள ஸீப்ரா மின்செலுத்துகைக்குப் பதிலாக புதிய HTLS மின்செலுத்தலை அமைத்தல் (72 கி.மீ.) | 569 | 38.14% | 2026 ஒக்டோபர் |
| முள்ளிக்குளம் காற்றாலை மின் செலுத்துகை கருத்திட்டம் | * மன்னார்-முள்ளிக்குளம் இரட்டைச் சுற்று 220 கி.வா மின் செலுத்துத்தொடர் நிர்மாணம் (28 கி.மீ.)<br>* மன்னார் மின்கட்டமைப்பு துணை மின்நிலையத்தில் 220 கி.வா மின் செலுத்துத்தொடர் விரிகுடாக்கள் இரண்டின் நிர்மாணம். முள்ளிக்குளம் கலெக்டர் இணைப்பு துணை மின் நிலையத்தின் உள்வரும் பக்கத்தின் நிர்மாணம் | 5,969.00 | 2026 சனவரியில் கருத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. | 2027 –ஆகஸ்ட் |

| | | | | |
|---|---|---|---|---|
| மின்செலுத்துகை கருத்திட்டங்கள் | பொருட்களின் பெறுகை<br><br>சாம்பூர்- கப்பல்துறை மின்செலுத்துகை அபிவிருத்தி கருத்திட்டத்தின் கீழ், மின்பரிமாற்ற வலையமைப்புத் தேவைகளுக்கான உதிரிப்பாகங்கள் மற்றும் கருவிகள் அடங்கிய தொகுப்பு 4, 5, 6, 10 மற்றும் 11-க்கான பொருட்கள்ஃ. உபகரணங்கள் பெறுகை | 4,381 | 98.00% | 2025 -மார்ச்சு |
| | பூநகரி- கிளிநொச்சி 220 கி.வா நேரடிஃமின்செலுத்துகை இணைப்பு நிர்மாணம் முதற்கட்டப் பணிகள் SP-Ph-02-OU2 | 3,400 | 69% | 2026 மார்ச்சு |
| PSRSP: Ph II P 2 - OU 01 | ஹொரணை-பாதுக்க 132 கி.வா மின்செலுத்துகை இணைப்பு நிர்மாணம் | 568 | 60% | 2026 - டிசம்பர் |
| மின்முறைமை பலப்படுத்தல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி ஒருங்கிணைப்பு கருத்திட்டம்- - PSSREIP | 6 தொகுப்புகளைக் கொண்டது | 76,281.000 | நிர்மாண ஒப்பந்தம் இன்னும் வழங்கப்படவில்லை | 2029 – கடன் உடன்படிக்கைக்கு இணங்க |
| மின்முறைமை நம்பகத்தன்மை ஒருங்கிணைப்பு கருத்திட்டம்- - -PSRSP பொதி 4A – புதிய ஹபரண- புதிய அனுராதபுர 220 கிவா. முிண் இணைப்பு நிர்மாணம் | 6) புதிய ஹபரானா – புதிய அனுராதபுரம் 220 கி.வா மின் செலுத்துகை இணைப்பு நிர்மாணம்-சிவில் பணிகள், கோபுரம் அமைத்தல் மற்றும் மின் இழுபறிப் பணிகள் மற்றும் தற்போதுள்ள பழைய ஹபரண – புதிய அனுராதபுரம் 132 கி.வா மின் செலுத்துகை இணைப்பை கற்றுதல் | 1,911.000 | 56% | 26 செப்டம்பர் |

**நிதியளிக்கப்படவுள்ள மின்செலுத்துகை அபிவிருத்திகளின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:**

### அட்டவணை 2.1.11
### நிதியளிக்கப்படவுள்ள மின்செலுத்துகை அபிவிருத்திகளின் விபரங்கள்

| விடயம் | நிறைவடையும் என எதிர்பார்க்கப்படும் ஆண்டு | மொத்த செலவு மதிப்பீடு (ரூ.மில்லியன்) | 2026 ஆம் ஆண்டிற்குத் தேவைப்படும் நிதி உறுதிப்பாடு (ரு மில்லியன்) |
|---|---|---|---|
| **SKTDP** | | | |
| சம்பூர் - கப்பல்துறை 220 கி.வோ இரட்டைச் சுற்று செ..இ நிர்மாணம் மற்றும் சம்பூரில் 220/33கி.வோ சேகரிப்பு இ.நி. நிர்மாணம் | 2026 | 7,896 | 7,106 |
| **PSRSP: கட்டம் II P 2 - OU 01** | | | |
| வாரியபொல 220/132கி.வோ SS நிர்மாணம், வாரியபொல – குருநாகல் 132கி.வோ இரட்டைச் சுற்று 22 கி.மீ TL நிர்மாணம், ஹபரண வெயங்கொட 220கி.வோ TL-இலிருந்து வாரியபொல SS-(3 கி.மீ) இரட்டை உள்-வெளி இணைப்பு நிர்மாணம், குருநாகல் 132கி.வோ இ.நி விரிவாக்கம் | 2027 | 7,710 | 771 |

| | | | |
|---|---|---|---|
| **PSRSP: கட்டம் II P 2 - OU 02** | 2027 | | |
| (i) ஏக்கல 132/33கி.வோ இ.நி, கொட்டுகொட - களனி 132கி. வோ TL-இலிருந்து 4 கி.மீ இரட்டை உள் - வெளி இணைப்பு | | 3,897 | 556 |
| (ii) யக்கல 132/33கி.வோ இ.நி , 132கி.வோ இரட்டைச் சுற்று கிரிந்திவெல புவி மின்நிலையத்திலிருந்து முன்மொழியப்பட்ட யக்கல மின்நிலையம் வரை சுமார் 10 கி.மீ. தொலைவிற்கு மின்இணைப்பு | | 3,226 | 479 |
| (iii) 220 கி.வோ வவுனியா மின்கட்டமைப்பு துணை மின்நிலையத்தின் மேம்பாடு | 2028 | 9,097 | 910 |
| **PSRSP: கட்டம் II P 2 - OU 03** | இன்னும் இறுதிப்படுத்தப் படவில்லை | 12,717 | 925 |
| 132 /11கி.வோ கண்டி நகர மின்நிலையம் நிர்மாணம், கண்டி நகர புவி மின்நிலையத்திற்கு 6 கி.மீ. தொலைவிற்கு மின் பாதை நிர்மாணம் மற்றும் கிரிபத்துகும்புர மற்றும் உக்குவெல புவி மின்நிலையங்களை விரிவாக்குதல் | | | |
| 132/33 கி.வோ, 31.5MVA வெலிகம இ.நி. மின்நிலையம் நிர்மாணம் | இன்னும் இறுதிப்படுத்தப் படவில்லை | 3,824 | 714 |
| மன்னார் - வவுனியா 220கி.வோ மின் செலுத்துகை இணைப்பு மேம்படுத்தல | 2026 | 664 (வரிகளுடன்) | 489 (வரிகளுடன்)) |
| முள்ளிக்குளம் காற்றாலை மின் செலுத்துகை கருத்திட்டம் | 2027 | 5,951 | 3,273 |

### 2.1.6 காலநிலை மாற்றத் தணிப்பு நடவடிக்கைகள் மற்றும் மின்சாரத் துறையின் தேசிய அளவில் நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புகள் (NDCs)

மின்சாரத் துறையின் தற்போதைய போக்கு மற்றும் அண்மைய முன்னேற்றங்களையும், பொருளாதாரச் சூழலின் யதார்த்தத்தையும், அதனுடன் இணைந்த இலங்கையின் நிதி, தொழில்நுட்பப் பரிமாற்றம் மற்றும் திறன் மேம்பாட்டுத் தேவைகளையும் கருத்தில் கொண்டு, மேம்படுத்தப்பட்ட NDC 3.0 ஆனது NDC 2.0-ஐ விட ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் குறிக்கிறது.

இற்றைப்படுத்தப்பட்ட NDC-களைச் செயல்படுத்துவதன் மூலம், அடிப்படைச் சூழலுடன் (BAU நிலை) ஒப்பிடும்போது, 2026 முதல் 2035 வரையிலான காலகட்டத்தில் கணிசமான பசுமை இல்ல வாயு (GHG) வெளியேற்றக் குறைப்புகள் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதாவது, மின்சாரத் துறையில் NDC-களைச் செயல்படுத்துவதன் மூலம் பசுமை இல்ல வாயு வெளியேற்றம் ஒட்டுமொத்தமாக 26.2% குறையும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் 5.3% இலங்கையால் நிபந்தனையின்றியும், 20.9% சர்வதேச நிதி, தொழில்நுட்பப் பரிமாற்றம் மற்றும் திறன் அபிவிருத்தி ஆதரவைப் பெற்ற பிறகு 2035-க்குள் நிபந்தனையின் பேரிலும் அடையப்பட வேண்டும். இந்த சதவீதக் குறைப்புகள், 2026-2035 காலகட்டத்தில், நிபந்தனையின்றி 13,604.9 ஜிகா கிராம் $CO^{2}$ சமமான மற்றும் நிபந்தனைக்குட்பட்டு 53,746.2 ஜிகா கிராம் $CO^{2}$ சமமான என மதிப்பிடப்பட்ட ஒட்டுமொத்த தணிப்புத் தாக்கத்திற்கு சமமானவை. இதன் மொத்தத் தாக்கம் 67,351.1 ஜிகா கிராம் $CO^{2}$ சமமானதாகும்.

### 2.1.7 மின்சாரக் கட்டணத் திருத்தம்

”கட்டணக் காலத்தை மூன்று மாதங்களிலிருந்து ஆறு மாதங்களாகத் திருத்துவதற்கான கொள்கை வழிகாட்டுதல்களைத் திருத்துதல்” என்பது குறித்த அமைச்சரவைக் குறிப்பாணையை வலுசக்தி அமைச்சர் 05.12.2024 தேதியிட்டு சமர்ப்பித்தார். 18.12.2024 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், தற்போது நடைமுறையில் உள்ள மின்சாரக் கட்டணத் திருத்தக் காலங்களைத் திருத்துவது தொடர்பான ஒரு விரிவான முன்மொழிவை, இலங்கை சர்வதேச நாணய நிதியத்துடன்

செய்துகொண்ட விரிவாக்கப்பட்ட நிதி வசதித் திட்டத்தின் அடுத்த பணியாளர் மட்ட மீளாய்விற்குச் சமர்ப்பிக்குமாறு வலுசக்தி அமைச்சின் செயலாளருக்கு அமைச்சரவை அறிவுறுத்தியது.

வலுசக்தி அமைச்சர், “கட்டணக் காலத்தை மூன்று மாதங்களிலிருந்து ஆறு மாதங்களாகத் திருத்துவதற்கான கொள்கை வழிகாட்டுதல்களில் திருத்தம்” என்ற தலைப்பிலான அமைச்சரவைக் குறிப்பாணையை 05.12.2024 அன்று சமர்ப்பித்தார். 18.12.2024 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், தற்போது நடைமுறையில் உள்ள மின்சாரக் கட்டணத் திருத்தக் காலங்களைத் திருத்துவது குறித்த ஒரு விரிவான முன்மொழிவை, இலங்கை சர்வதேச நாணய நிதியத்துடன் (IMF) மேற்கொண்டுள்ள விரிவாக்கப்பட்ட நிதி வசதி (EFF) திட்டத்தின் அடுத்த பணியாளர் மட்ட மீளாய்வில் சமர்ப்பிக்குமாறு வலுசக்தி அமைச்சின் செயலாளருக்கு அமைச்சரவை உத்தரவிட்டது.

அதன்படி, இலங்கை மின்சார சபை (CEB), ”கட்டணக் காலத்தை 3 மாதங்களிலிருந்து 6 மாதங்களாக மாற்றுவதன் அவசியம் குறித்த அறிக்கையை IMF-க்கு” 01.07.2025 அன்று சமர்ப்பித்தது. மேலும், வலுசக்தி அமைச்சு அந்த அறிக்கையை நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சகத்திற்கு 26.08.2025 அன்று சமர்ப்பித்தது.

### 2.1.8 புதுப்பிக்கத்தக்க வலுசக்தி கட்டணங்களின் திருத்தம்

2024 ஆம் ஆண்டு முதல் அமல்படுத்துவதற்காக ஒரு சீரான கட்டண முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. முன்னர் பயன்படுத்தப்பட்ட மூன்று அடுக்கு கட்டண அமைப்பு மற்றும் மாறுபடும் கட்டணம் ஆகியவை 2024 முதல் தொடர்ந்து முன்னெடுக்கப்படமாட்டாது. 2025 ஆம் ஆண்டிற்காக, 10 மெகாவோட் அல்லது அதற்கும் குறைவான திறன் கொண்ட புதுப்பிக்கத்தக்க வலுசக்தி கருத்திட்டங்கள் மற்றும் கூரைமேல் சூரியசக்தி திட்டங்களுக்கான கட்டணம் 2025 ஜூன் 16, முதல் திருத்தப்பட்டது. கூரைமேல் சூரியசக்தியுடன் இணைக்கப்பட்ட மின்கல சக்தி சேமிப்பு அமைப்புக்கான (BESS) கட்டணம் இந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. கூரைமேல் சூரியசக்தி அமைப்புகளுடன் ஒருங்கிணைக்கப்பட்ட BESS-I செயல்படுத்துவதற்கான ஒரு கொள்கைக் கட்டமைப்பும் உருவாக்கப்பட்டுள்ளது இருப்பினும், அதைச் செயல்படுத்துவது தொடர்பான முடிவுகள் இன்னும் எடுக்கப்படவில்லை.

தற்போது இலங்கை மின்சார சபையால் (CEB) முறையாகச் செயல்படுத்தப்படாத மாறுபடும் கட்டணத்தை உரிய நேரத்தில் ஏற்றுக்கொள்வதை உறுதி செய்வதற்காக, அதனை மீளாய்வு செய்ய ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. 10 மெகாவோட் மற்றும் அதற்குக் குறைவான திறன் கொண்ட புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆலைகளை தேசிய மின்கட்டமைப்பில் ஒருங்கிணைப்பதற்கான கட்டண சூத்திரத்தை உருவாக்க ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

## 2.2 2025 ஆம் ஆண்டில் வலுசக்தி பிரிவின் செயலாற்றுகை

வலுசக்தி அமைச்சின் வலுசக்திப் பிரிவு, நாட்டின் எரிசக்தித் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் முக்கியப் பங்கு வகிப்பதோடு, பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்கும் கணிசமாகப் பங்களிக்கிறது. எரிபொருள் என்பது அன்றாட வாழ்வின் ஒரு இன்றியமையாத அங்கமாகும். இது போக்குவரத்து, தொழிற்துறை நடவடிக்கைகள் மற்றும் வீட்டு உபயோகத்திற்கான முதன்மை எரிசக்தி ஆதாரமாகச் செயற்படுவதோடு, பொதுமக்களுக்கான சேவைகளின் தடையற்ற செயற்பாட்டையும் உறுதி செய்கிறது. எரிபொருள் விநியோகத்தின் நம்பகத்தன்மையை மேலும் வலுப்படுத்துவதற்கும், செயற்பாட்டுத் திறனை மேம்படுத்துவதற்கும், களஞ்சிய மற்றும் விநியோக உட்கட்டமைப்பின் அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்வதற்கும் இவ் அமைச்சு உறுதிபூண்டுள்ளது.

இவ் அத்தியாயாம், உலகளாவிய எரிபொருள் விலைப் போக்குகள் உள்நாட்டு விலைகளில் ஏற்படுத்தும் தாக்கம், தேசிய எரிபொருள் தேவையைப் பூர்த்தி செய்வதில் அளிக்கப்படும் பங்களிப்பு, பெற்றோலியத் தொழிற்துறையில் செயற்படுத்தப்படும் ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகள் ஆகியவை தொடர்பான விரிவான மதிப்பாய்வை வழங்குகிறது. மேலும், பெற்றோலியத் தொழிற்துறையில் மேற்கொள்ளப்படும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி முயற்சிகள் மற்றும் 2026 இல் செயற்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படும் திட்டங்கள் தொடர்பான கண்ணோட்டத்தை முன்வைக்கிறது.

### 2.2.1 பெற்றோலியத் தொழிற்துறை ஒரே பார்வையில் – 2025

| | |
|---|---|
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்களின் மொத்த இறக்குமதி | 5,006,930.56 மெ.தொ |
| மசகு எண்ணெயின் மொத்த இறக்குமதி | 1,679,000 மெ.தொ |
| சப்புகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் உற்பத்தி | 1,715,799 மெ.தொ |
| பெற்றோலியப் பொருட்களின் மொத்த இறக்குமதி செலவு | USD 3,256.16 மில்லியன் |
| பெற்றோலியப் பொருட்களின் மொத்த விற்பனை | 6,450,984.34 மெ.தொ |
| செயற்பாட்டில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களின் எண்ணிக்கை | 1,436 |
| CPSTL இன் பெற்றோலிய களஞ்சியத் திறன் | 474,404 மெ.தொ |

### 2.2.2 உலகளாவிய பெற்றோலிய விலைகளின் போக்குகளால் இலங்கையில் எரிபொருள் விலையில் ஏற்படுத்தும் தாக்கம்

**i. உலகளாவிய பெற்றோலிய விலைகளின் போக்குகள்**

சர்வதேச எரிபொருள் விலைகள் உள்நாட்டு எரிபொருள் விலைகளில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. 2025-ஆம் ஆண்டில், ஆசிய பசிபிக் பிராந்தியம் மசகு எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட எரிபொருள் விலைகளில் பின்வரும் போக்குகளைக் கண்டுள்ளது.

2025 காலப்பகுதி மழுவதும், ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் மசகு எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்களின் விலைகள் மிதமான ஏற்ற இறக்கத்தைக் காட்டின. மசகு எண்ணெயின் சராசரி விலை பரல் ஒன்றிற்கு USD 63 முதல் USD 80 வரை ஏற்ற இறக்கமாக இருந்தது, அதே நேரத்தில் பெற்றோல் (92 மற்றும் 95 ஒக்டேன்) மற்றும் டீசல் (ஓட்டோ மற்றும் சுப்பர்) விலைகள் இதே போன்ற நகர்வுகளைப் பிரதிபலித்தன. முதன்மையாக மந்தமான உலகளாவிய கேள்வி மற்றும் மேம்பட்ட விநியோக

நிலைமைகள் காரணமாக ஆண்டின் முதல் பாதியில் விலைகளில் படிப்படியான சரிவு பதிவாகியுள்ளது. எவ்வாறாயினும், பொருளாதார நடவடிக்கைகளின் மீளெழுச்சி மற்றும் பிரதான எண்ணெய் ஏற்றுமதி நாடுகளால் உற்பத்தி ஒதுக்கீட்டில் ஏற்பட்ட சீராக்கங்கள் ஆகியவற்றால் யூன் முதல் படிப்படியான மீளெழுச்சிப் போக்கு காணப்பட்டது. இந்த உலகளாவிய விலை ஏற்ற இறக்கங்கள் இலங்கையின் உள்நாட்டு எரிபொருள் விலை நிர்ணயக் கட்டமைப்பில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்தி, அந்த ஆண்டில் பெற்றோலிய இறக்குமதிச் செலவில் பாரிய செல்வாக்கை செலுத்தியுள்ளது.

2025 ஆம் ஆண்டில் உலகளாவிய பெற்றோலிய விலைகளில் ஏற்பட்ட ஏற்ற இறக்கங்கள் இலங்கையின் உள்நாட்டு எரிபொருள் விலை நிர்ணய பொறிமுறையில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இறக்குமதி செய்யப்பட்ட மசகு எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்களை நாடு பெரிதும் சார்ந்திருப்பதால், சர்வதேச சந்தை விலைகளில் ஏற்படும் மாறுபாடுகள் உள்நாட்டு எரிபொருள் செலவினத்தில் நேரடியாகப் தாக்கத்தை செலுத்துகின்றன. உலகளாவிய விலை நகர்வுகள் மற்றும் நாணயமாற்று விகித மாறுபாடுகளை பிரதிபலிக்கும் உள்நாட்டு விலைச் சூத்திரம், விலையின் நிலையான தன்மை மற்றும் தடையற்ற எரிபொருள் விநியோகத்தில் உறுதி செய்வதற்காக அவ்வப்போது சீராக்கம் செய்யப்படுகிறது. ஆண்டின் ஆரம்ப மாதங்களில் உலகளாவிய விலைகளில் ஏற்பட்ட சரிவு இறக்குமதி செலவினங்களைக் குறைப்பதற்கு உதவியது எனினும், 2025 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இருந்து ஏற்பட்ட மீளெழுச்சி சில்லறை எரிபொருள் விலைகளில் மேல்நோக்கிய நகர்வை ஏற்படுத்தியுள்ளது. வலுசக்தி அமைச்சு, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடன் (CPC) இணைந்து, தடையற்ற எரிபொருள் விநியோகத்தைப் பராமரிக்கவும், உள்நாட்டு விலைகளில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களைக் குறைக்கவும், பெற்றோலியத் தொழிற்துறையின் நிதி ஸ்திரத்தன்மையைப் பாதுகாக்கும் அதே வேளையில் நுகர்வோருக்கு மலிவான விலையை உறுதி செய்யவும் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

**அட்டவணை 2.2.1**
**ஆசிய–பசிபிக் பிராந்திய மசகு எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்களின் விலை போக்குகள் – 2025**

| மாதம் | பரல் ஒன்றிற்கான விலை (USD) | | | | |
|---|---|---|---|---|---|
| | பெற்றோல் 92 ஒக்டேன் | பெற்றோல் 95 ஒக்டேன | சுப்பர் டீசல் | ஓடோ டீசல் | மசகு எண்ணெய் |
| ஜனவரி | 84.48 | 86.75 | 95.41 | 94.76 | 72.81 |
| பெப்ரவரி | 84.83 | 86.30 | 91.70 | 90.62 | 73.28 |
| மார்ச் | 79.55 | 81.00 | 86.47 | 85.12 | 80.22 |
| ஏப்ரல் | 75.30 | 76.75 | 81.77 | 80.48 | 77.62 |
| மே | 75.02 | 76.46 | 79.36 | 78.85 | 72.63 |
| யூன் | 80.10 | 82.00 | 87.03 | 86.58 | 67.73 |
| யூலை | 77.92 | 79.59 | 90.88 | 89.81 | 63.62 |
| ஆகஸ்ட் | 77.96 | 80.12 | 86.37 | 85.47 | 69.81 |
| செப்ரெம்பர் | 79.51 | 81.55 | 89.08 | 88.22 | 71.12 |
| ஒக்ரோபர் | 77.09 | 79.75 | 88.89 | 87.79 | 70.10 |
| நவம்பர் | 78.73 | 81.51 | 93.59 | 91.75 | 70.22 |
| டிசம்பர் | 75.82 | 77.29 | 82.39 | 82.09 | 65.79 |

(மூலம்: ஆசிய-பசுபிக் பெற்றோலிய சந்தை புள்ளிவிபரங்கள் (2025))

**2025ஆம் ஆண்டின் சிங்கப்பூர் பிளாட் விலைகளைக் கவனத்தில் எடுத்து:**

- மார்ச் மாதத்தில் பரல் ஒன்றிற்கான மசகு எண்ணெயின் அதிகபட்ச விலை USD 80.22 ஆகவும், யூலையில் குறைந்தபட்ச விலை USD 63.62 ஆகவும் பதிவாகியுள்ளது. அவ் ஆண்டில் பரல் ஒன்றிற்கான சராசரி மசகு எண்ணெயின் விலை USD 71.246 ஆகவும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

- பெப்ரவரி மாதத்தில் ஒரு பெற்றோல் ஒக்டேன் 92 பரல் ஒன்றிற்கான அதிகபட்ச விலை USD 84.33 ஆகவும், குறைந்தபட்ச விலை மே மாதத்தில் USD 75.029 ஆகவும் பதிவாகியுள்ளது. அதே நேரத்தில், பெற்றோல் ஒக்டேன் 92 பரல் ஒன்றிற்கான சராசரி வருடாந்த விலை USD 78.864 ஆகவும் அடையாளம் காணப்பட்டுள்ளது.
- ஜனவரி மாதத்தில் பெற்றோல் ஒக்டேன் 95 பரல் ஒன்றிற்கான அதிகபட்ச விலை USD 86.750 ஆகவும், குறைந்தபட்ச விலை மே மாதத்தில் USD 76.467 ஆகவும் பதிவாகியுள்ள அதேநேரத்தில், பெற்றோல் ஒக்டேன் 95 பரல் ஒன்றிற்கான சராசரி வருடாந்த விலை USD 80.760 ஆகவும் பதிவாகியுள்ளது.
- ஜனவரி மாதத்தில் ஓட்டோ டீசல் பரல் ஒன்றிற்கான அதிகபட்ச விலை USD 94.765 ஆகவும், குறைந்தபட்ச விலை மே மாதத்தில் USD 78.851 ஆகவும் பதிவாகியுள்ளது. அதேநேரத்தில், ஓட்டோ டீசல பரல் ஒன்றிற்கான சராசரி வருடாந்த விலை USD 86.769 ஆகவும் அடையாளம் காணப்பட்டுள்ளது.
- ஜனவரி மாதத்தில் சுப்பர் டீசல் பரல் ஒன்றிற்கான அதிகபட்ச விலை USD 95.412 ஆகவும், குறைந்தபட்ச விலை மே மாதத்தில் USD 79.365 ஆகவும் பதிவாகியுள்ளது. அதே நேரத்தில் சுப்பர் டீசல் பரல் ஒன்றிற்கான சராசரி வருடாந்த விலை USD 87.749 ஆகவும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

**ii உள்நாட்டு எரிபொருள் விலைகளில் உலகளாவிய விலைகளின் தாக்கம்**

இலங்கை முழுமையாக இறக்குமதி செய்யப்படும் பெற்றோலியப் பொருட்களைச் சார்ந்து இருப்பதால், சர்வதேச எரிபொருள் விலையில் ஏற்படும் ஏற்ற இறக்கங்கள் உள்நாட்டு எரிபொருள் விலைகளில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. பெற்றோல் 92 ஒக்டேன் மற்றும் ஓட்டோ டீசலின் நாளாந்த விற்பனைத் தொகை அதிகமாக இருப்பதால், இந்த எரிபொருட்களின் உலகளாவிய விலை மாற்றங்கள் உள்நாட்டு சில்லறை விலைகளில் உடனடி தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. எவ்வாறாயினும், பெற்றோல் 95 ஒக்டேன் மற்றும் சுப்பர் டீசல் மொத்த விற்பனையில் ஒப்பீட்டளவில் சிறிய பங்கைக் கொண்டிருப்பதால், இவ் உற்பத்திகளில் ஏற்படும் சர்வதேச விலை மாற்றங்கள் குறிப்பிடத்தக்களவில் உள்நாட்டு விலையில் மாற்றங்களை ஏற்படுத்தாது.

**அட்டவணை 2.2.2**
**பெற்றோலியப் பொருட்களின் சராசரி, அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச விலைகள் – 2025**
**(சிங்கப்பூர் பிளாட் விலைகளின் அடிப்படையில்)**

| பெற்றோலியப் பொருட்கள | அதிகபட்ச விலை (USD/பரல்) | பதிவு செய்யப்பட்ட மாதம் | குறைந்தபட்ச விலை (USD/பரல்) | பதிவு செய்யப்பட்ட மாதம் | சராசரி விலை (USD/பரல்) |
|---|---|---|---|---|---|
| மசகு எண்ணெய் | 80.22 | மார்ச் | 63.62 | யூலை | 71.24 |
| பெற்றோல் 92 ஒக்டேன் | 84.83 | பெப்ரவரி | 75.02 | மே | 78.86 |
| பெற்றோல் 92 ஒக்டேன் | 86.75 | ஜனவரி | 76.46 | மே | 80.76 |
| ஓட்டோ டீசல் | 94.76 | ஜனவரி | 78.85 | மே | 86.79 |
| சுப்பர் டீசல் | 95.41 | ஜனவரி | 79.36 | மே | 87.74 |

(மூலம்: இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்)

அட்டவணை 2.2.3
எரிபொருளின் சராசரி மாதாந்த இறக்குமதி செலவு – 2025

| மாதம் | பரல் ஒன்றிற்கான சராசரி இறக்குமதி செலவு (USD) | |
|---|---|---|
| | பெற்றோல் 92 ஒக்டேன் (USD/ பரல்) | லங்கா ஓடோ டீசல் (USD/ பரல்) |
| ஜனவரி | 94.73 | 106.95 |
| பெப்ரவரி | 100.28 | 106.95 |
| மார்ச் | 105.44 | 109.51 |
| ஏப்ரல் | 108.34 | 109.32 |
| மே | 102.29 | 101.34 |
| யூன் | 93.17 | 103.23 |
| யூலை | - | - |
| ஆகஸ்ட் | 89.93 | 94.99 |
| செப்ரெம்பர் | 83.66 | 86.82 |
| ஒக்ரோபர் | 117.17 | 115.52 |
| நவம்பர் | 115.70 | 118.04 |
| டிசம்பர் | 116.70 | 113.62 |

(மூலம்: இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்)

### 2.2.3 பெற்றோலியப் பொருட்களின் இறக்குமதி, இறக்குமதி செலவினம் மற்றும் விற்பனைகள்

#### i. பெற்றோலியப் பொருட்களின் இறக்குமதி, இறக்குமதி செலவினம்

பொருளாதார நெருக்கடிகளுக்கு பின்னர் பொருளாதார செயற்பாடுகள் மீளெழுச்சி பெறத் தொடங்கியதிலிருந்து, அந்நியச் செலாவணி நெருக்கடிகள் சற்று தளர்வடைந்ததனால், 2025 ஆம் ஆண்டில் பெற்றோலியப் பொருட்களின் இறக்குமதிகள் முன்பு போல் இடம்பெறத் தொடங்கியுள்ளது. இதற்கிணங்க, 2025 ஆம் ஆண்டில் உள்நாட்டு பெற்றோலியத் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் உள்ளடங்கலாக நான்கு (04) பிரதான வழங்குனர்களால் 5,006,930.56 மெற்றிக் தொன் மசகு எண்ணெய் உள்ளடங்கலாக எட்டு (08) பெற்றோலியப் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டு வழங்கப்பட்டது. இதற்கான இறக்குமதிச் செலவினம் USD 3,256.16 மில்லியன் ஆகும்.

அட்டவணை: 2.2.4
2025 ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட பெற்றோலியப் பொருட்கள்

| பெற்றோலியப் பொருட்கள் | தொகை (மெற்றிக் தொன்) | | | | |
|---|---|---|---|---|---|
| | இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (ஊீஊ) | லங்கா இந்தியன் ஒயில் கம்பனி (LIOC) | சீனோபக் எனர்ஜி லங்கா (பிரைவேட்) லிமிட்டெட் | ஆர் எம் பார்க்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் | மொத்தம் |
| மசகு எண்ணெய் | 1,679,012.61 | - | - | - | **1,679,012.61** |
| லங்கா ஓடோ டீசல் | 551,134.72 | 331,679.29 | 202,801.01 | 148,467.88 | **1,234,082.90** |
| லங்கா சுப்பர் டீசல் | 25,062.79 | 10,955.97 | 9,050.31 | 9,029.90 | **54,098.97** |
| பெற்றோல் 92 ஒக்டேன் | 639,589.25 | 317,211.30 | 166,347.87 | 146,337.17 | **1,269,485.59** |
| பெற்றோல் 95 ஒக்டேன் | 20,629.12 | 17,098.69 | 6,141.03 | 6,081.76 | **49,950.60** |
| விமான எரிபொருள் | 330,049.24 | - | - | - | **330,049.24** |
| லங்கா உலை எண்ணெய் உயர் சல்பர் | - | - | 19,122.00 | - | **19,122.00** |
| லங்கா உலை எண்ணெய் குறை சல்பர் (180 செக்) | - | 247,597.65 | 123,531.00 | - | **371,128.65** |
| மொத்தம் | **3,245,477.73** | **924,542.90** | **526,993.22** | **309,916.71** | **5,006,930.56** |

மூலம்: இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (CPC), லங்கா இந்தியன் ஒயில் கம்பனி (LIOC), சினோபக் எனர்ஜி லங்கா (பிரைவேட்) லிமிட்டெட், ஆர் எம் பார்க்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்

அட்டவணை: 2.2.5

2025 ஆம் ஆண்டின் உள்ளவாறான பெற்றோலியப் பொருட்களின் இறக்குமதி செலவினம்

| பெற்றோலியப் பொருட்கள் | இறக்குமதி செலவினம் (USD மில்லியன்) | | | | |
|---|---|---|---|---|---|
| | இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (CPC) | லங்கா இந்தியன் ஒயில் கம்பனி (LIOC) | சினோபக் எனர்ஜி லங்கா (பிரைவேட்) லிமிட்டெட் | ஆர் எம் பார்க்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் | மொத்தம் |
| மசகு எண்ணெய் | 1,014.38 | - | - | - | **1,014.38** |
| லங்கா ஓடோ டீசல் | 373.07 | 223.72 | 137.31 | 90.70 | **824.80** |
| லங்கா சுப்பர் டீசல் | 16.95 | 7.59 | 6.29 | 16.30 | **47.13** |
| பெற்றோல் 92 ஒக்டேன் | 447.18 | 226.89 | 118.37 | 104.70 | **897.14** |
| பெற்றோல் 95 ஒக்டேன் | 14.78 | 12.40 | 4.61 | 4.50 | **36.29** |
| விமான எரிபொருள் | 232.36 | - | - | - | **232.36** |
| லங்கா உலை எண்ணெய் உயர் சல்பர் | - | - | 8.99 | - | **8.99** |
| லங்கா உலை எண்ணெய் குறை சல்பர் (180 செக்) | - | 127.13 | 67.94 | - | **195.07** |
| மொத்தம் | **2,098.72** | **597.73** | **343.51** | **216.20** | **3,256.16** |

**மூலம்:** இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (CPC), லங்கா இந்தியன் ஒயில் கம்பனி (LIOC), சினோபக் எனர்ஜி லங்கா (பிரைவேட்) லிமிட்டெட், ஆர் எம் பார்க்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்

### ii. பெற்றோலியப் பொருட்களின் விற்பனைகள்

போக்குவரத்து, மின்சாரம், கைத்தொழில், விவசாயம், மீன்பிடி போன்ற தேசிய பொருளாதாரத்தின் அனைத்துத் தொழிற்துறைகளும் வினைத்திறன் மிக்கதாக செயற்படுவதோடு இவை நம்பகமான பெற்றோலியப் பொருட்களின் விநியோகத்தைச் சார்ந்து இருப்பதால், அத் தொழிற்துறைகளின் சீரான செயற்பாட்டின் தேவைக்கு ஏற்ற எரிபொருள் விநியோகத்தைப் பராமரிப்பது அவசியமானதாகும். இதற்கிணங்க, 2025 ஆம் ஆண்டில் பெற்றோலியப் பொருட்களின் விற்பனையில் ஒவ்வொரு எரிபொருள் வழங்குனரின் பங்களிப்பையும் பின்வரும் அட்டவணை காட்டுகிறது. 2025 ஆம் ஆண்டின் மொத்த பெற்றோலிய பொருட்களின் விற்பனை 6,450,811.34 மெற்றிக் தொன் ஆகும்.

**அட்டவணை: 2.2.6**
**2025ஆம் ஆண்டின் உள்ளவாறு பெற்றோலியப் பொருட்களின் விற்பனைகள்**

| பெற்றோலியப் பொருட்கள் | விற்பனை செய்யப்பட்ட தொகை (மெற்றிக் தொன்) | | | | |
|---|---|---|---|---|---|
| | இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (CPC) | லங்கா இந்தியன் ஓயில் கம்பனி (LIOC) | சினோபக் எனர்ஜி லங்கா (பிரைவேட்) லிமிட்டெட் | ஆர் எம் பார்க்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் | மொத்தம் |
| பெற்றோல் 92 ஒக்டேன் | 1,486,470.00 | 301,302.60 | 159,547.36 | 205,617.00 | **2,152,937.96** |
| பெற்றோல் 95 ஒக்டேன் | 47,047.00 | 18,421.07 | 6,233.96 | 9,702.00 | **81,404.03** |
| லங்கா ஓடோ டீசல் | 1,459,023.00 | 353,490.74 | 187,585.27 | 183,190.00 | **2,183,289.01** |
| லங்கா சுப்பர் டீசல் | 38,595.00 | 12,602.73 | 7,444.37 | 9,379.00 | **68,021.10** |
| லங்கா மண்ணெண்ணெய் | 229,827.00 | - | - | - | **229,827.00** |
| லங்கா கைத்தொழில் மண்ணெண்ணெய் | 14,905.00 | - | - | - | **14,905.00** |
| லங்கா இரசாயன நெப்தா | 186,320.00 | - | - | - | **186,320.00** |
| லங்கா உலை எண்ணெய் 1500 செக் (உயர் சல்பர்) | 110,678.00 | - | - | - | **110,678.00** |
| லங்கா உலை எண்ணெய் 1500 செக் (குறை சல்பர்)) | 97,427.00 | 261,768.24 | - | - | **359,195.24** |
| லங்கா சுப்பர் உலை எண்ணெய் | 226,499.00 | - | - | - | **226,499.00** |
| ஜெட் A-1 | 815,721.00 | - | - | - | **815,721.00** |
| லங்கா சோல்வன்ட்(SBP) | 1,989.00 | - | - | - | **1,989.00** |
| லங்கா பெற்றோலிய எரிவாயு (LP Gas) | 19,918.00 | - | - | - | **19,918.00** |
| லங்கா AV வாயு | 108.00 | - | - | - | **108.00** |
| மொத்தம் | **4,734,527.00** | **947,585.38** | **360,810.96** | **407,888.00** | **6,450,811.34** |

**மூலம்:** இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம (CPC), லங்கா இந்தியன் ஒயில் கம்பனி (LIOC), சினோபக் எனர்ஜி லங்கா (பிரைவேட்) லிமிட்டெட

1 பரல்= 159 லீற்றர்
1கிலோ லீற்றர் = 1000 ட = 6.29 பரல்
மசகு எண்ணெய் : 1 மெ.தொ. = 7.33 பரல் = 1.165 கிலோ லீற்றர்
டீசல் : 1 மெ.தொ = 7.45 பரல் = 1.19 கிலோ லீற்றர்
பெற்றோல் : 1 மெ.தொ = 8.5 பரல் = 1.36 கிலோ லீற்றர்

**மின்சார உற்பத்தி நிலையங்களிற்கான எரிபொருள் விற்பனை**

மின்சார உற்பத்திக்கான எரிபொருளை வழங்கும் தனியுரிமை நிறுவனமாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் செயற்படுவதோடு, இலங்கை மின்சார சபை மற்றும் தனியார் மின் நிலையங்களிற்கும் தேவையான எரிபொருளை வழங்குகிறது.

2022 ஆம் ஆண்டு முதல் 2025ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியல் மின்சார உற்பத்தி நிறுவனங்களிற்கு விற்பனை செய்த எரிபொருளின் விபரங்களை அட்டவணை 2.2.7 காட்டுகிறது. இதற்கிணங்க, 2025 ஆம் ஆண்டில் 568,238 லீற்றர் எரிபொருள் மின்சார உற்பத்தி நிறுவனங்களிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

அட்டவணை: 2.2.7

மின்சார உற்பத்திக்கான எரிபொருள் விற்பனை (2022 – 2025)

| | இலங்கை மின்சார சபை (லீற்றர் '000') | | | | சுதந்திரமான மின்சார உற்பத்தியாளர் (லீற்றர் '000') | | | மொத்தம் (லீற்றர் '000 ) |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஆண்டு | லங்கா ஓடோ டீசல் | நெப்தா | உலை எண்ணெய் | லங்கா சுப்பர் டீசல் | லங்கா ஓடோ டீசல் | உலை எண்ணெய் | லங்கா சுப்பர் டீசல் | |
| **2022** | 86,769 | 46,781 | 181,103 | 12,147 | 115,205 | 123,369 | 5,678 | **571,052** |
| **2023** | 102,877 | 174,136 | 228,885 | - | 3,175 | 256,580 | - | **765,653** |
| **2024** | 44,647 | 147,251 | 206,467 | - | 16,609 | 164,335 | - | **579,309** |
| **2025** | 15,622 | 186,493 | 165,477 | - | 35,937 | 164,709 | - | **568,238** |

மூலம்: இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

## 2.2.4 இறக்குமதி செய்யப்பட்ட மசகு எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்கள்

சப்புகஸ்கந்தையில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் 1969 ஆம் ஆண்டு, நாளொன்றுக்கு 38,000 பீப்பாய்கள் சுத்திகரிப்புத் திறனுடன் நிறுவப்பட்டது. அதன் பின்னர், நாளொன்றுக்கு 50,000 பீப்பாய்கள் மசகு எண்ணெய் வரை சத்திகரிக்கும் திறனை அதிகரிக்கும் வகையில், இவ் சுத்திகரிப்பு நிலையம் பல மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டது. தற்போது, இவ் சுத்திகரிப்பு நிலையத்தின் மொத்த உற்பத்தி, நாட்டின் மொத்த பெற்றோலியப் பொருட்களின் வருடாந்த கேள்வியில் சுமார் மூன்றில் ஒரு பங்கைப் பூர்த்தி (1/3) செய்கிறது. பெற்றோல், ஓட்டோ டீசல், சூப்பர் டீசல், உலை எண்ணெய், மண்ணெண்ணெய், திரவ பெற்றோலிய வாயு, ஜெட் A-1, தார், இரசாயன் நெப்தா மற்றும் சோல்வென்ட் ஆகியவை இவ் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து பெறப்படும் இறுதிப் பொருட்கள் ஆகும்.

2020 முதல் 2025 வரையிலான காலகட்டத்தில் இறக்குமதி செய்யப்பட்ட மசகு எண்ணெயின் விவரங்களை அட்டவணை 2.2.8 உம் , 2022 முதல் 2025 வரையிலான காலப்பகுதியில் சுத்திகரிப்பு நிலையத்தால் உற்பத்தி செய்யப்பட்ட பெற்றோலியப் பொருட்களின் தொகையை அட்டவணை 2.2.9 உம் காட்டுகிறது.

அட்டவணை: 2.2.8

மசகு எண்ணெய் இறக்குமதி (2020 – 2025)

| ஆண்டு | தொகை (மெ. தொ) | இறக்குமதி செலவினம் (ரூ. மில்லியன்) |
|---|---|---|
| 2020 | 1,666,000 | 98,277 |
| 2021 | 1,130,000 | 101,306 |
| 2022 | 743,000 | 180,019 |
| 2023 | 1,666,000 | 364,098 |
| 2024 | 1,519,284 | 322,404 |
| 2025 | 1,679,012 | 309,809 |

மூலம்: இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம

2022 ஆம் ஆண்டில் 743,000 மெற்றிக் தொன் மசகு எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டது, இது 2023 ஆம் ஆண்டில் 1,666,000 மெற்றிக் தொன்னாக அதிகரித்தது. இதற்கிணங்க, 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, 2023 ஆம் ஆண்டில் மசகு எண்ணெய் இறக்குமதி 124% வளர்ச்சியைக் காட்டுகிறது. 2024 ஆம் ஆண்டில், மசகு எண்ணெய் இறக்குமதி மீண்டும் 1,518,726 மெற்றிக் தொன்னாகக் குறைந்து, 2025 ஆம் ஆண்டில் 1,679,012 மெற்றிக் தொன்னாக அதிகரித்துள்ளது.

அட்டவணை: 2.2.9

உள்நாட்டில் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்கள் (2022 – 2025)

| உற்பத்திகள் | தொகை (மெற்றிக் தொன்) | | | |
|---|---|---|---|---|
| | 2022 | 2023 | 2024 | 2025 |
| மசகு எண்ணெய் உள்ளீட்டுத் தொகை | **529,773** | **1,677,033** | **1,543,839** | **1,794,646** |
| பெற்றோல் 92 ஒக்டேன் | 38,666 | 171,186 | 150, 665 | 181,412 |
| லங்கா ஓடோ டீசல் | 128,165 | 505,675 | 443,933 | 518,618 |
| உலை எண்ணெய 800 சுப்பர் | 87,196 | 379,015 | 427,447 | 505,385 |
| மண்ணெண்ணெய் | 25,289 | 49,484 | 72,618 | 61,128 |
| நெப்தா | 30,835 | 129,058 | 121,449 | 150,031 |
| லங்கா பெற்றோலிய எரிவாயு (LP Gas) | 5,687 | 23,800 | 20,815 | 25,527 |
| ஜெட் A-1 | 57,346 | 233,652 | 207,434 | 273,098 |
| லங்கா சோல்வன்ட் (SBP) | 2,690 | 1,524 | 1,267 | 600 |
| மொத்தம் | **375,874** | **1,493,394** | **1,294,963** | **1,715,799** |

மூலம்: இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், 2025 ஆம் ஆண்டில் 1,794,646 மெற்றிக் தொன் மசகு எண்ணெயைப் பயன்படுத்தி 1,715,799 மெற்றிக் தொன் சுத்திகரித்த பெற்றோலியப் பொருட்களை பெற்றது. இது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மொத்த சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்களில் 52% ஆகும். 2025 ஆம் ஆண்டில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் இறக்குமதி செய்யப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்கள் மற்றும் உள்நாட்டில் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்களின் விபரங்கள் அட்டவணை 2.2.10இல் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை : 2.2.10

2025 ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட முடிவுப் பொருட்கள் மற்றும் உள்நாட்டில் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்கள்

| உற்பத்திகள் | இறக்குமதி செய்யப்பட்ட முடிவுப் பொருட்களின் தொகை (மெற்றிக் தொன்) | சுப்புகஸ்கந்தை சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்களின் தொகை (மெற்றிக் தொன்) | மொத்தம் (மெற்றிக் தொன்) | உள்நாட்டில் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்களின் சதவீதம் (%) |
|---|---|---|---|---|
| லங்கா ஓடோ டீசல் | 551,135 | 518,618 | 1,069,753 | 48 |
| லங்கா சுப்பர் டீசல் | 25,063 | - | 25,063 | - |
| பெற்றோல் 92 ஒக்டேன் | 644,890 | 181,412 | 826,302 | 22 |
| பெற்றோல் 95 ஒக்டேன் | 15,329 | - | 15,329 | - |
| மண்ணெண்ணெய் | - | 61,128 | 61,128 | 100 |
| ஜெட் A-1 | 330,049 | 273,098 | 603,147 | 45 |
| நெப்தா | - | 150,031 | 150,031 | 100 |

| | | | | |
|---|---|---|---|---|
| லங்கா பெற்றோலிய எரிவாயு (LP Gas) | - | 25,527 | 25,527 | 100 |
| லங்கா சோல்வண்ட் (SBP) | - | 600 | 600 | 100 |
| உலை எண்ணெய் 800 சுப்பர் | - | 505,385 | 505,385 | 100 |
| **மொத்தம்** | **1,566,466** | **1,715,799** | **3,282,265** | **52** |

மூலம்: இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

### 2.2.5 எரிபொருள் களஞ்சியம்

வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையம், இரண்டு பிரதான முனையங்களான கொலன்னாவை மற்றும் முத்துராஜவெல களஞ்சியசாலைகளில் களஞ்சிய செயற்பாடுகளை முன்னெடுத்துவருகிறது. இதற்கிணங்க, கொலன்னாவை முனையத்தில் 265,666 மெற்றிக் தொன்னையும் மற்றும் முத்துராஜவெல முனையத்தில் 208,738 மெற்றிக் தொன்னையும் ஆக மொத்தம் 474,404 மெற்றிக் தொன் கொள்ளளவு கொண்ட எரிபொருள் களஞ்சிய வசதிகளை நாட்டில் பராமரித்து வருகின்றது. இதற்கிணங்க, 2025ஆம் ஆண்டில் இரண்டு பிரதான முனையங்கள் ஊடாக எரிபொருட்களை களஞ்சியப்படுத்துவதில் செயற்திறன் மிக்க பங்களிப்பைச் செய்துள்ளது. மேலும், இவ் இரண்டு கஞ்சியசாலைகளின் களஞ்சியத் திறன் மற்றும் தாங்கிகளின் எண்ணிக்கை தொடர்பான விபரங்கள் அட்டவணை 2.2.11இல் காட்டப்பட்டுள்ளது

**அட்டவணை: 2.2.11**
**கொலன்னாவை மற்றும் முத்துராஜவல எரிபொருள் களஞ்சியசாலை தகவல்கள**

| உற்பத்தி வகைகள் | தாங்கிகளின் எண்ணிக்கை | | களஞ்சியத் திறன் (மெ.தொ) | |
|---|---|---|---|---|
| | கொலன்னாவை முனையம் | முத்துராஜவல முனையம் | கொலன்னாவை முனையம் | முத்துராஜவல முனையம் |
| நெப்தா | 4 | - | 14,209 | - |
| பெற்றோல்95 ஒக்டேன் | 3 | - | 18,249 | - |
| பெற்றோல் 92ஒக்டேன் | 6 | 14 | 65,473 | 95,105 |
| மண்ணெண்ணெய் | 1 | - | 10,488 | - |
| ஜெட் A-1 | 4 | - | 38,988 | - |
| ஓட்டோ டீசல் | 6 | 15 | 50,972 | 113,633 |
| சுப்பர் டீசல் | 3 | - | 17,232 | - |
| உலை எண்ணெய் | 8 | - | 48,120 | - |
| சோல்வன் | 1 | - | 342 | - |
| கைத்தொழில் மண்ணெண்ணெய் | 1 | - | 1,593 | - |
| பழுதுபார்க்கும் நிலையில் உள்ள தாங்கிகள் | 2 | - | - | - |
| **மொத்தம்** | **39** | **29** | **265,666** | **208,738** |

மூலம்: சிலோன் பெட்ரோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல்ஸ் லிமிடெட்

### 2.2.6 எரிபொருள் விநியோகம்

2025 ஆம் ஆண்டுக்குள், நான்கு எரிபொருள் விநியோக நிறுவனங்கள் எரிபொருள் விநியோக நடவடிக்கைகளில் ஈடுபடும், மேலும் CPSTL அந்த நிறுவனங்களின் எரிபொருள் தேவைகளுக்கு ஏற்ப எரிபொருளை விநியோகிக்கும். கொலன்னாவை மற்றும் முத்துராஜவெலவில் உள்ள வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையத்தின் இரண்டு பிரதான முனையங்கள் உட்பட பிராந்திய எரிபொருள் களஞ்சியசாலைகளில் இருந்து எரிபொருள், விநியோக நிறுவனங்களுக்கு எரிபொருள் விடுவிக்கப்படும், மேலும் 2025 ஆம் ஆண்டில் எரிபொருள் விநியோக நிறுவனங்களுக்கு எரிபொருள் விநியோகத்தின் முன்னேற்றம் அட்டவணை 2.2.12 இல் காட்டப்பட்டுள்ளது.


இதற்கிணங்க, 2025 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்ட எரிபொருளின் மொதத்தத் தொகை 4,576,443 கிலோ லீற்றராக பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு 3,269,546 கிலோ லீற்றர், லங்கா இந்தியன் ஒயில் கம்பனிக்கு 435,047 கிலோ லீற்றர், சினோபெக் எனர்ஜி லங்கா (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தற்கு 463,998 கிலோ லீற்றர் மற்றும் ஆர். எம். பார்க் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்திற்கு 407,852 கிலோ லீற்றர் எரிபொருளும் விநியோகிகப்பட்டுள்ளது. இதற்கிணங்க, CPSTL ன் மொத்த எரிபொருள் விநியோகத்தில் 71% இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கும் மீதி 29% லங்கா இந்தியன் ஒயில் கம்பனி, சினோபெக் எனர்ஜி லங்கா (பிரைவேட்) லிமிடெட் மற்றும் ஆர்.எம். பார்க் (பிரைவேட்) லிமிடெட் ஆகியவற்றுக்கும் உரித்தானதாகக் காணப்படுகிறது.

**அட்டவணை : 2.2.12**
**வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையத்தின்**
**2025ஆம் ஆண்டில் உள்ளவாறான எரிபொருள் விநியோக முன்னேற்றங்கள்**

| உற்பத்தி வகைகள் | தொகை (கி.லீ) | | | | |
|---|---|---|---|---|---|
| | இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (CPC) | லங்கா இந்தியன் ஒயில் கம்பனி (LIOC) | சீனோபக் எனர்ஜி லங்கா (பிரைவேட்) லிமிட்டெட் (SINOPEC) | ஆர். எம் பார்க்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் (R.M. PARK) | மொத்தம் |
| உலை எண்ணெய் | 396,224 | - | - | - | **396,224** |
| ஜெட் A-1 | 611,925 | - | - | - | **611,925** |
| லங்கா ஓட்டோ டீசல் | 1,020,388 | 195,742 | 225,886 | 183,172 | **1,625,188** |
| லங்கா சுப்பர் டீசல் | 32,618 | 9,114 | 8,989 | 9,378 | **60,099** |
| நெப்தா | 251,014 | - | - | - | **251,014** |
| பெற்றோல் 92ஒக்டேன் | 922,562 | 215,751 | 220,593 | 205,600 | **1,564,506** |
| பெற்றோல்95 ஒக்டேன் | 34,815 | 14,440 | 8,530 | 9,702 | **67,487** |
| மொத்தம் | **3,269,546** | **435,047** | **463,998** | **407,852** | **4,576,443** |

மூலம்: சிலோன் பெட்ரோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல்ஸ் லிமிடெட்

வரைபு 2.2.1
2025 ஆம் ஆண்டின் எரிபொருள் விநியோகம்




**அட்டவணை: 2.2.13**
**எரிபொருள் நிரப்பு நிலையங்களின் மொத்த எண்ணிக்கை (2025ஆம் ஆண்டில் உள்ளவாறு)**

| மாகாணம் | இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (CPC) | லங்கா இந்தியன் ஒயில் கம்பனி (LIOC) | ஆர். எம் பார்க் (பிரைவேட்) லிமிட்டெட் | சினோபக் எனர்ஜி லங்கா (பிரைவேட்) லிமிட்டெட் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| மத்திய மாகாணம் | 72 | 36 | 10 | 11 | **129** |
| கிழக்கு மாகாணம் | 90 | 19 | 13 | 15 | **137** |
| வடமத்திய மாகாணம் | 59 | 14 | 9 | 9 | **91** |
| வடக்கு மாகாணம் | 95 | 16 | 7 | 7 | **125** |
| வடமேல் மாகாணம் | 129 | 28 | 23 | 28 | **208** |
| சபரகமுவ மாகாணம் | 57 | 17 | 10 | 10 | **94** |
| தெற்கு மாகாணம் | 119 | 28 | 11 | 13 | **171** |
| உவா மாகாணம் | 40 | 16 | 8 | 9 | **73** |
| மேல் மாகாணம் | 225 | 96 | 39 | 48 | **408** |
| மொத்தம் | **886** | **270** | **130** | **150** | **1,436** |

மூலம்: இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (CPC), லங்கா இந்தியன் ஒயில் கம்பனி (LIOC), சினோபக் எனர்ஜி லங்கா (பிரைவேட்) லிமிட்டெட், ஆர் எம் பார்க் (பிரைவேட்) லிமிட்டெட்

### 2.2.7 பெற்றோலிய சந்தையின் தன்மைகள்

- **உராய்வு நீக்கி எண்ணெய் வர்த்தகம்**

இலங்கை நுகர்வோருக்கு சர்வதேச தரத்தை பூர்த்தி செய்யும் உயர்தர உராய்வு நீக்கி எண்ணெய் மற்றும் கிரீஸ் தயாரிப்புகளை போட்டி விலையில் வழங்குவதே அமைச்சின் எதிர்பார்ப்பாகும்.

1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் பிரிவு 5 மற்றும் தொடர்புடைய திருத்தப்பட்ட விதிகளின் அடிப்படையில் உராய்வு நீக்கி எண்ணெய் ஒரு பெற்றோலியப் பொருளாக வரையறுக்கப்படுகிறது. இதற்கிணங்க, தொடர்புடைய அதிகாரங்களின் படி, இலங்கையில் உராய்வு நீக்கி எண்ணெய் சந்தை

06/0858/217/015 ஆம் இலக்கமிடப்பட்ட 2006.05.08 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவைப் விஞ்ஞாபனத்தின் மீது 2006.05.24 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவைத் தீர்மானற்கிணங்க, 1453/6 ஆம் இலக்கமிடப்பட்ட 2006.07.12 ஆம் திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பு மூலம் முழுமையாக தாராளமயமாக்கப்பட்டது.

இதற்கிணங்க, 2025 ஆம் ஆண்டுக்குள், 34 நிறுவனங்கள் 45 வர்த்தக குறியீட்டின் அடிப்படையில் நாட்டிற்குள் உராய்வு நீக்கி எண்ணெயை இறக்குமதி செய்வதற்கு ஒப்புதல் பெற்றுள்ளன, இவற்றில், 4 நிறுவனங்கள் உள்நாட்டில் உராய்வு நீக்கி எண்ணெய் உற்பத்திகளை முன்னெடுக்கப்படுவதுடன், இவ் நிறுவனங்கள் 5 பிரதான செயற்பாடுகளின் கீழ் செயற்படுகின்றன. அவை தொடர்பான விபரங்கள் அட்டவணை 2.2.14 இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.2.14**
**2025 ஆம் ஆண்டின் உராய்வு நீக்கி எண்ணெய் தொழிற்துறையின் செயற்பாடுகள்**

| செயற்பாட்டு இல. | விபரம் | நிறுவனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| A1 | உராய்வு நீக்கி எண்ணெய் மற்றும் கிரீஸ் ஆகியவற்றை இறக்குமதி, ஏற்றுமதி, விற்பனை, வழங்கல், விநியோகம், கலத்தல் மற்றும் உற்பத்தி செய்தல் | 4 |
| A2 | உராய்வு நீக்கி எண்ணெய் மற்றும் கிரீஸ் ஆகியவற்றை இறக்குமதி, ஏற்றுமதி, விற்பனை, வழங்கல் மற்றும் விநியோகம் செய்தல் | 27 |
| B | கலவைசெய்யப்படாத பரிமாற்றல் எண்ணெய் (ரடெிடநனெநன வசயளெஅளைளழைெ ழடைள) மற்றும் கிரீஸ் ஆகியவற்றை இறக்குமதி, ஏற்றுமதி, விற்பனை, வழங்கல் மற்றும் விநியோகம் செய்தல | 1 |
| C1 | கப்பலுக்கான உராய்வு நீக்கி எண்ணெய் மற்றும் கிரீஸ் ஆகியவற்றை இறக்குமதி, ஏற்றுமதி, விற்பனை, வழங்கல் மற்றும் விநியோகம் செய்தல் | 1 |
| C2 | கைத்தொழிலுக்கான உராய்வு நீக்கி எண்ணெய் மற்றும் கிரீஸ் ஆகியவற்றை இறக்குமதி, ஏற்றுமதி, விற்பனை, வழங்கல் மற்றும் விநியோகம் செய்தல் | 1 |

மேலும், இலங்கையில் உராய்வு நீக்கி எண்ணெய் தொழிற்துறைக்கான புதிய கொள்கை கட்டமைப்பை அறிமுகப்படுத்த அமைச்சு தீவிரமாக செயற்பட்டு வருகிறது, இது 2026 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் இறுதி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

- **தார் வர்த்தகம்**

இலங்கையில் தாரின் முதன்மை உற்பத்தியாளர் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (CPC) ஆகும். எவ்வாறாயினும், தாருக்கான தேசிய தேவையை பூர்த்தி செய்வதற்கு உள்நாட்டு உற்பத்தித் திறன் போதுமானதாக இல்லாததால், நிறுவப்பட்ட பிரமாணங்கள் மற்றும் நடைமுறைகளுக்கு இணங்க, பிற நிறுவனங்கள் தாரை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டில், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் பரிந்துரையின் பேரில், CPC நிறுவனத்தைத் தவிர்த்து மேலும் பத்து நிறுவனங்கள் மொத்தம் 190,000 மெற்றிக் தொன் தாரை இறக்குமதி செய்வதற்கு அமைச்சினால் அனுமதி வழங்கப்பட்டது. இதற்கிணங்க, இவ் அமைச்சு, அனுமதிக்கப்பட்ட அளவில் இருந்து 82,141 மெற்றிக் தொன் தாரை இறக்குமதி செய்வதற்கு ஆட்சேபனையின்மை கடிதத்தை வழங்கியது.

மேலும், நாட்டின் அபிவிருத்தித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், வினைத்திறன் மிக்க, வெளிப்படையான மற்றும் நிலையான வழங்கலை உறுதிசெய்யும் வகையில், இலங்கையில் தார் இறக்குமதியை நிர்வகிக்கும் ஒரு புதிய கொள்கைக் கட்டமைப்பை வகுப்பதற்கான நடவடிக்கைகளை அமைச்சு தற்போது மேற்கொண்டு வருகிறது.

- **கப்பல்களுக்கான எண்ணெய் வர்த்தகம்**

தற்போது, இலங்கையில் கப்பல்களுக்கான எரிபொருளை இறக்குமதி செய்து விநியோகிப்பதற்காக பன்னிரண்டு நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அந்தந்த நிறுவனங்கள் சமர்ப்பித்த மாதாந்த அறிக்கைகளின் படி, 2025 ஆம் ஆண்டில் மொத்தம் 1,315,823 மெற்றிக் தொன் கப்பல்களுக்கான எரிபொருள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. கப்பல்களுக்கான எரிபொருள் வர்த்தகத்தின் செயற்திறனை மேம்படுத்தவும் அதன் வீச்சை விரிவுபடுத்தவும், இத்துறைக்கான புதிய கொள்கைக் கட்டமைப்பை வகுப்பதற்காக, மொரட்டுவ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கல்வியாளர் ஒருவர் தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. அக்குழு தற்போது தனக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை மேற்கொண்டு வருகிறது, மேலும் கொள்கை வகுக்கும் செயல்முறையும் நடைபெற்று வருகிறது.

- **ஜெட் A-1**

விமானங்களுக்கான ஜெட் A-1 எரிபொருள் வழங்கும் செயற்பாடுகள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் (CPC) முன்னெடுக்கப்படுகிறது. மேலும், ஜெட் A-1 எரிபொருள் இறக்குமதிக்கு Cannel (Pvt) Ltd நிறுவனத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சட்டத்தின்படி, விமான எரிபொருள் விநியோகத்திற்கான அனுமதிப்பத்திரங்களை வழங்கும் அதிகாரம் அவ் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரிடம் உள்ளது. இலங்கையில் ஜெட் A-1 இறக்குமதிக்கான கொள்கை கட்டமைப்பை உருவாக்குவதை அமைச்சு நோக்கமாகக் கொண்டுள்ளது.

- **அனுமதிப்பத்திரம் வைத்திருப்ப‑வர்களால் இறக்குமதி செய்யப்படாத பெற்றோலியம் தொடர்பான பொருட்களுக்கு ஆட்சேபனையின்மை கடிதங்கள் வழங்குதல் – 2025**

நாட்டில் கைத்தொழிற்துறை மற்றும் சேவைத் துறைகளுக்கு அத்தியாவசிய பெற்றோலியம் தொடர்பான பொருட்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதிப்பத்திரதாரர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. எப்போதாவது, ஏனைய நிறுவனங்கள் இவ் அனுமதிப்பத்திரதாரர்களால் இறக்குமதி செய்யப்படாத பொருட்களை இறக்குமதி செய்வதற்கு அமைச்சிடம் தினசரி கோரிக்கைகளை சமர்ப்பிக்கின்றன. இவ் கோரிக்கைகள் மதிப்பாய்வு செய்யப்பட்டு, அமைச்சின் மேற்பார்வையின் கீழ் நியமிக்கப்பட்ட குழுவால் பரிந்துரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பின்வரும் நிறுவனங்களிடமிருந்து பரிந்துரைகளும் தனித்தனியாகப் பெறப்படுகின்றன.

- கைத்தொழில் அமைச்சு
- இலங்கை முதலீட்டு சபை
- இரசாயன ஆயுத மாநாட்டை செயல்படுத்துவதற்கான தேசிய அதிகாரசபை
- பிற தொடர்புடைய நிறுவனங்கள்

இதற்கிணங்க, 2025 ஆம் ஆண்டில், அமைச்சு பின்வரும் வகைகளின் கீழ் இறக்குமதிகளுக்கு ஆட்சேபனையின்மை கடிதங்களை வழங்கியுள்ளது:

- ரப்பர் தொடர்பான பொருட்கள்
- ஆடை தொடர்பான பொருட்கள் *
- அழகுசாதனப் பொருட்கள் *
- மை தொடர்பான பொருட்கள் *
- பிற தொழிற்துறை பொருட்கள் *
- பிற தொழிற்துறை மற்றும் சேவை நிறுவனங்களுக்கு விற்பனைக்கான பொருட்கள் ** *

2025 ஆம் ஆண்டில், அமைச்சினால் பின்வரும் ஆடசேபனையின்மை கடிதங்கள்

- தொழில்துறை பயன்பாட்டிற்கான பெற்றோலியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்காக 474 ஆட்சேபனையின்மை கடிதங்கள் *
- பிற தொழில்துறை மற்றும் சேவை நிறுவனங்களுக்கு விற்பனை செய்வதற்காக பெற்றோலியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கான 91 ஆட்சேபனையின்மை கடிதங்கள் **

### 2.2.8 2025 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகள்

- **பெற்றோலியத் தொழிற்துறைக்கு புதிய ஒழுங்குபடுத்துனரை அறிமுகம் செய்தல்**

இதுவரை, இலங்கையில் கீழ்நிலை பெற்றோலியத் தொழற்துறைக்கு விரிவான ஒழுங்குபடுத்தல் பொறிமுறையொன்று இல்லை. பெற்றோல், டீசல், உலை எண்ணெய், விமான எரிபொருள், திரவ பெற்றோலிய வாயு (LPG) மற்றும் உராய்வுநீக்கி எண்ணெய் போன்ற பெற்றோலியப் பொருட்களின் இறக்குமதி, சுத்திகரிப்பு, விநியோகம் மற்றும் விற்பனை மற்றும் மின்சாரம் மற்றும் மீள புதுப்பிக்கத்தக்க சக்தி தொழிற்துறைகளின் மேற்பார்வை ஆகியவற்றை உள்ளடக்கிய இத் தொழிற்துறை, பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட பல்வேறு சட்டங்களால் நிர்வகிக்கப்படுகிறது. இவ் சட்டங்கள் தற்போது சட்ட கட்டமைப்பிற்குள் செயற்பட்டு வருகின்றன.

ஒருங்கிணைப்பு இல்லாமை மற்றும் ஒருங்கிணைந்த ஒழுங்குபடுத்தல் அணுகுமுறை காரணமாக, ஒரே பணிகள் பெரும்பாலும் பல தரப்பினரால் மேற்கொள்ளப்படுகின்றன, சில நேரங்களில் மீண்டும் மீண்டும் முன்னெடுக்கப்படுகின்றன, இதன் விளைவாக செயற்திறன்யின்மை ஏற்பட்டு நாட்டின் எரிசக்தித் துறையை திறம்பட நிர்வகிப்பது சவாலாக உள்ளது. பெற்றோலிய சந்தை செயற்பாடுகளின் விரிவாக்கம் மற்றும் புதிய போட்டி நிறுவனங்களின் உள்நுழைவுடன், தயாரிப்பு தரத்தை உறுதி செய்வதற்கும் நுகர்வோரைப் பாதுகாப்பதற்கும் ஒரு சுயாதீனமான ஒழுங்குபடுத்தல் அமைப்பு மற்றும் வலுவான ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பின் அவசியத்தை அரசாங்கம் அங்கீகரித்துள்ளது.

இதற்கிணங்க, தொழிற்துறை தொடர்பான பிற சட்டங்களை ஒருங்கிணைத்து உயர் மட்ட எரிசக்தி மாற்றச் சட்டத்தை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இது எரிசக்தி நுகர்வோரின் விருப்பங்களை நிறைவேற்றும் மற்றும் எரிசக்தி தொழிற்துறையில் பொதுமக்களின் பங்களிப்பை வலுப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில், உராய்வுநீக்கி எண்ணெய் சந்தையை ஒழுங்குபடுத்துவதற்கு, ஒரு நிரந்தர ஒழுங்குபடுத்துனர் இன்னும் நியமிக்கப்படவில்லை. அத்தகைய நியமனம் செய்யப்படும் வரை, அமைச்சரவை அமைச்சர்களின் தீர்மானத்தின் அடிப்படையில், இந்தப் பகுதியில் ஒழுங்குபடுத்தல் அதிகாரத்தைப் பயன்படுத்த இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவிற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

- **எரிபொருள் நிரப்பும் நிலையத்தை நிறுவுதல் மற்றும் செயற்படுத்துவதற்கான வழிகாட்டுதலை அறிமுகப்படுத்துதல்**

1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் ஏற்பாடுகளின் படி, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (CPC) மட்டுமே ஆரம்பத்தில் பெற்றோலியம் மற்றும் அது தொடர்பான அனைத்து பொருட்களையும் இறக்குமதி செய்து விநியோகித்திருந்தது. எவ்வாறாயினும், சந்தை தாராளமயமாக்கப்பட்டதனால், தற்போது இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் (CPC) நீங்கலாக லங்கா இந்தியன் ஒயில் கம்பனி (LIOC), சினோபெக் எனர்ஜி லங்கா (பிரைவேட்) லிமிடெட்

(Sinopec), R.M. Park (Pvt) Ltd மற்றும் United Petroleum Lanka (Pvt) Ltd ஆகிய நிறுவனங்களுக்கு எரிபொருளை இறக்குமதி செய்து விநியோகிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது. இருந்தபோதிலும், சில சிக்கல்கள் காரணமாக, United Petroleum Lanka (Pvt) Ltd; தற்போது இலங்கை சந்தையில் அதன் செயற்பாடுகளில் இருந்து விலகியுள்ளது.

தற்போது, புதிய போட்டி நிறுவனங்கள் சந்தையில் உள் நுழைந்துள்ளதனால், எரிபொருள் நிரப்பு நிலையங்களை நிறுவுதல் மற்றும் செயற்படுத்தல் தொடர்பாக குறைந்தபட்ச தகுதிநிலைகளை உள்ளடக்கிய தெளிவான வழிகாட்டுதலை அறிமுகப்படுத்தியுள்ளது. இதற்கிணங்க, மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு பின்வரும் பிரதான பகுதிகளை உள்ளடக்கிய வழிகாட்டுதலை அறிமுகப்படுத்தியுள்ளது.

- எரிபொருள் நிரப்பு நிலைய அமைவிடத் தெரிவு தொடர்பான பிரமாணங்கள்
- எரிபொருள் நிரப்பு நிலைய நிர்மாணம் தொடர்பான பிரமாணங்கள்
- எரிபொருள் நிரப்பு நிலையத்தின் செயற்பாடு மற்றும் பராமரிப்பு தொடர்பான பிரமாணங்கள்

இவ் வழிகாட்டுதல்களைப் பின்பற்றுமாறு எரிபொருள் விநியோக நிறுவனங்களுக்குத் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன், பொதுமக்களின் தகவல்களுக்காக அமைச்சின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளன. மேலும், இவ் வழிகாட்டுதல்களுக்கிணங்க புதிய எரிபொருள் விநியோக நிறுவனங்கள் செயல்படுகின்றனவா என்பதையும் அமைச்சு கண்காணிக்கும

மேலும், ஒரு புதிய அரசாங்கக் கொள்கை தீர்மானத்தின் கீழ், இலங்கையில் புதிய எரிபொருள் நிரப்பும் நிலையங்களை நிறுவுவதற்கு ஒப்புதல் அளிப்பதற்கான திருத்தப்பட்ட நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இப் பணிக்காக ஒரு குழு நியமிக்கப்பட்டு, புதிய எரிபொருள் நிரப்பும் நிலையங்களை நிறுவுவதற்குப் பொருத்தமான இடங்களைக் கண்டறிவதற்காக ஓர் அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. அத்துடன், எதிர்காலத்தில் நிறுவப்படும் அனைத்து எரிபொருள் நிரப்பும் நிலையங்களும் இவ் அறிக்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட வழிகாட்டுதல்களின்படியே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- **பெற்றோலியப் பொருட்களை நேரடியாக நுகர்வோர் நிறுவனங்களுக்கு வழங்கும் செயல்முறையை நெறிப்படுத்துதல்**

எரிபொருள் விநியோக நிறுவனங்கள், கைத்தொழில் நிறுவனங்கள், வர்த்தக நிறுவனங்கள் மற்றும் அடையாளம் காணப்பட்ட சில அரச நிறுவனங்கள் உள்ளடங்கலாக நுகர்வோர் நிறுவனங்களுக்கு நேரடியாகவும், நாடு முழுவதும் நிறுவப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூலமாகவும் எரிபொருளை விநியோகிக்கின்றன.

எரிபொருள் நிரப்பு நிலையங்களை நிறுவுவதற்கு வலுசக்தி அமைச்சிடமிருந்து ஒப்புதல் பெறப்பட்டாலும், அத்தகைய நுகர்வோர் நிறுவனங்களுக்கு நேரடியாக மொத்தமாக எரிபொருளை வழங்குவதற்கு அமைச்சிடமிருந்து முன்னர் உத்தியோகபூர்வ ஒப்புதல் பெறப்படவில்லை. 2023 ஒக்டோபர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு, நாடு முழுவதும் எரிபொருள் வழங்கும் நிறுவனங்கள் அண்ணளவாக 3,385 நுகர்வோர் சேவை மையங்களை செயற்படுத்தி வருவது அவதானிக்கப்பட்டுள்ளது.

இவ் நுகர்வோர் சேவை மையங்கள் மூலம் தினமும் கணிசமான அளவு எரிபொருள் விநியோகிக்கப்படுவதால், அத்தகைய மையங்களை நிறுவி செயற்படுத்தும் செயல்முறையை ஒழுங்குபடுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை அமைச்சு அடையாளம் கண்டுள்ளது. இதற்கிணங்க, தற்போது பதிவுசெய்யப்பட்ட நுகர்வோர் சேவை மையங்களில் எது தொடர்ந்து

செயற்பட வேண்டும் என்பதை தீர்மானிக்க குறைந்தபட்ச அளவுகோல்களை அறிமுகப்படுத்தவும், புதிய மையங்களின் பதிவை ஒழுங்குபடுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ் குறைந்தபட்ச தரநிலைகளை பூர்த்தி செய்யும் நுகர்வோர் சேவை மையங்களை செயற்படுத்துவதற்கு எரிபொருள் வழங்கும் நிறுவனங்கள் அமைச்சிடமிருந்து உத்தியோகபூர்வ ஒப்புதலைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

2025 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு, செயற்படும் நுகர்வோர் சேவை மையங்களின் எண்ணிக்கை பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை: 2.2.15**
**2025 ஆம் ஆண்டில் உள்ளவாறான நுகர்வோர் சேவை நிலையங்களின் எண்ணிக்கை**

| எரிபொருள் வழங்கும் நிறுவனம் | நுகர்வோர் சேவை நிலையங்களின் எண்ணிக்கை |
|---|---|
| இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (CPC) | 521 |
| லங்கா இந்தியன் ஒயில் கம்பனி (LIOC) | 178 |
| சினோபக் எனர்ஜி லங்கா கம்பனி | 14 |
| மொத்தம் | **713** |

மூலம்: இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (CPC), லங்கா இந்தியன் ஒயில் கம்பனி, சினோபக் எனர்ஜி லங்கா கம்பனி

- **புதிதாக நிறுவப்பட்ட மற்றும் ஏற்கனவே உள்ள நுகர்வோர் சேவை மையங்களின் பதிவு**

புதிதாக நிறுவப்பட்ட நுகர்வோர் சேவை மையங்களின் பதிவும், ஏற்கனவே உள்ள மையங்களின் மீள் பதிவும் வலுசக்தி அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. இவ் நுகர்வோர் சேவை மையங்கள், தொடர்புடைய பல்வேறு அரசு நிறுவனங்கள், ஒப்பந்ததாரர்கள், தனியார் நிறுவனங்கள் போன்றவற்றுக்கு மொத்த எரிபொருள் விநியோகம் (bulk fuel supply) செய்வதற்காக அமைக்கப்பட்டுள்ளன.

- **எரிபொருள் விலைச் சூத்திரத்தை அமுல்படுத்துதல்**

இலங்கையில் எரிபொருள் விலை நிர்ணய பொறிமுறை நீண்ட காலமாக ஒழுங்கற்றதாகவும், முறையற்றதாகவும் செயற்பட்டதால், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (CPC) பாரிய நிதி நெருக்கடிகளை எதிர்கொண்டது. நிலையான அமைப்பு இல்லாத நிலையில், முன்னைய விலை திருத்தங்கள் பெரும்பாலும் எரிபொருள் விலைகளில் திடீர் மற்றும் குறிப்பிடத்தக்க ஏற்ற இறக்கங்களுக்கு வழிவகுத்தன.

இவ் சவால்களை எதிர்கொள்வதற்கு, அரசாங்கம் 2022 மே மாதத்தில் செலவு-பிரதிபலிப்பு எரிபொருள் விலை நிர்ணய சூத்திரத்தை அறிமுகப்படுத்த முன்முயற்சி எடுத்தது. இது எரிபொருள் விலைகள் உண்மையான செலவுகளின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுவதை உறுதிசெய்து அதன் மூலம் சந்தையில் அதிகளவில் நிலையான விலையை பராமரிக்க உதவுகிறது.

2025 ஆம் ஆண்டில், பத்து (10) சந்தர்ப்பங்களில் எரிபொருள் விலை திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. 2025 டிசம்பர் எரிபொருள் விலைகளை 2024 டிசம்பர் விலைகளுடன் ஒப்பிடும் போது, விலைகள் பின்வருமாறு குறைந்துள்ளதைக் அவதானிக்க முடிந்தது:

- பெற்றோல் (ஒக்டேன் 92) – 5%
- பெற்றோல் (ஆக்டேன் 95) – 10%
- ஓட்டோ டீசல் – 3%
- மண்ணெண்ணெய் – 4%

**அட்டவணை: 2.2.16**


**2025 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச சந்தை விலைகள்**

| உற்பத்தி | ஆகக்கூடிய விலை (ரூ./லீற்றர்) | பதிவுசெய்யப்பட்ட மாதம் | ஆகக்கூடிய விலை (ரூ./லீற்றர்) | பதிவுசெய்யப்பட்ட மாதம் |
|---|---|---|---|---|
| பெற்றோல் 92ஒக்டேன் | ரூ. 309.00 | ஜனவரி / பெப்ரவரி | ரூ. 293.00 | ஏப்ரல் / மே |
| பெற்றோல்95 ஒக்டேன் | ரூ. 371.00 | ஜனவரி / பெப்ரவரி | ரூ. 335.00 | செப்ரெம்பர் / ஒக்ரோபர் / நவம்பர் / டிசம்பர் |
| ஒட்டோ டீசல் | ரூ. 289.00 | யூன் / யூலை | ரூ.274.00 | (ஏப்ரல் / மே ) |
| சுப்பர் டீசல் | ரூ. 331.00 | ஜனவரி / பெப்ரவரி / மார்ச் | ரூ.313.00 | ஆகஸ்ட் / செப்ரெம்பர் |
| லங்கா மண்ணெண்ணெய் | ரூ. 185.00 | யூன் / யூலை / ஆகஸ்ட் | ரூ. 178.00 | ஏப்ரல் / மே |


**மூலம்:** வலுசக்தி அமைச்சு

**வரைபு 2.2.2**


**2025 ஆம் ஆண்டில் உள்ளவாறான அறிக்கையிடப்பட்ட சந்தை விலைகள்**






**மூலம்:** இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்




**மூலம்:** இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்


சுப்பர் டீசலுக்கான விலை
விலை (லீற்றர் ஒன்றிற்கு) ரூ
500
450
400
350
300
250
200
150
100
50
0
மாதம்
ஜனவரி
பெப்ரவரி
மார்ச்
ஏப்ரல்
மே
யூன்
யூலை
ஆகஸ்ட்
செப்ரெம்பர்
ஒக்ரோபர்
நவம்பர்
டிசம்பர்
டீசலுக்கான விலை (லீற்றர் ஒன்றிற்கு)-2024
டீசலுக்கான விலை (லீற்றர் ஒன்றிற்கு)-2025
மூலம்: இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்


ஓட்டோ டீசலின் விலை
விலை (லீற்றர் ஒன்றிற்கு) ரூ
400
350
300
250
200
150
100
50
0
மாதம்
ஜனவரி
பெப்ரவரி
மார்ச்
ஏப்ரல்
மே
யூன்
யூலை
ஆகஸ்ட்
செப்ரெம்பர்
ஒக்ரோபர்
நவம்பர்
டிசம்பர்
டீசலுக்கான விலை (லீற்றர் ஒன்றிற்கு)-2024
டீசலுக்கான விலை (லீற்றர் ஒன்றிற்கு)-2025
மூலம்: இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்


மண்ணெண்ணெய் ணெய்க்கான விலை
விலை (லீற்றர் ஒன்றிற்கு) ரூ
300
250
200
150
100
50
0
மாதம்
ஜனவரி
பெப்ரவரி
மார்ச்
ஏப்ரல்
மே
யூன்
யூலை
ஆகஸ்ட்
செப்ரெம்பர்
ஒக்ரோபர்
நவம்பர்
டிசம்பர்
மண்ணெண்ணெய்க்கான விலை (லீற்றர் ஒன்றிற்கு)-2024
மண்ணெண்ணெய்க்கான விலை (லீற்றர் ஒன்றிற்கு)-2025
மூலம்: இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

**2.2.9 பெற்றோலியம் சார்ந்த உட்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்றம்**

- **அம்பாந்தோட்டையில் ஏற்றுமதி சார்ந்த பெற்றோலிய சுத்திகரிப்பு நிலையம் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்களை உற்பத்தி செய்யும் நிலையத்தை நிறுவுதல்**

மேற்குறிப்பிட்ட திட்டத்தின் நிர்மாணம் மற்றும் செயற்பாட்டிற்காக, சீன பெட்ரோலியம் மற்றும் கெமிக்கல் கார்பரேஷன் நிறுவனங்களுடன் ஒப்பந்தங்கள் செய்துகொள்வதற்கு அமைச்சு அமைச்சரவையின் ஒப்புதலைப் பெற்றுள்ளது.

அதனைத் தொடர்ந்து, சீன பெட்ரோலியம் மற்றும் கெமிக்கல் கார்பரேஷன் நிறுவனங்களுடன் ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன, மேலும் தற்போது கலந்துரையாடல்கள் இறுதிக் கட்டத்தில் உள்ளன. இவ்விடயத்தில் இறுதி ஒப்பந்தம் எட்டப்பட்ட பின்னர், அமைச்சரவை விஞ்ஞாபனம் ஒன்று சமர்ப்பிக்கப்பட உள்ளது.

- **சப்புகஸ்கந்தை சுத்திகரிப்பு நிலையத்தை நவீனமயப்படுத்தல் மற்றும் புதிய சுத்திகரிப்பு நிலையத்தை நிர்மாணித்தல்**

இலங்கையின் பெற்றோலியத் தேவைகளில் சுமார் 25% சப்புகஸ்கந்தை சுத்திகரிப்பு நிலையத்தின் மூலமும , மீதி 75% இறக்குமதி செய்யப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட பெற்றாலியப் பொருட்கள் மூலமும் பூர்த்திசெய்யப்படுகிறது. இதனால், பெற்றோலியப் பொருட்களை இறக்குமதிசெய்வதற்கு அதிகளவான அந்நியச் செலாவணி தேவைப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இதன் காரணமாக, உள்நாட்டு பெற்றோலியத் தேவைகளுக்கான எரிபொருளை உள்நாட்டு சுத்திகரிப்பு நிலையங்கள் மூலம் உற்பத்தி செய்வதே எங்கள் பிரதானமான நோக்கமாகும், இதனால், சப்புகஸ்கந்தை சுத்திகரிப்பு நிலையத்தைப் நவீனமயப்படுத்தும் மற்றும் புதிய சுத்திகரிப்பு நிலையத்தை நிர்மாணிப்பதற்கும் விரைவில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும், நாளொன்றுக்கு 100,000 பரல் உற்பத்தி திறன் கொண்ட புதிய சுத்திகரிப்பு நிலையத்தை நிர்மாணிக்க வேண்டிய அவசியம் உள்ளது. தற்போது, சர்வதேச நிறுவனங்களிடமிருந்து ஆர்வங்களிற்கான வெளிப்பாடுகள் கோரப்பட்டுள்ளன, இதற்கு பதிலளிக்குமுகமாக 20 கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளன.

- **திருகோணமலை தாங்கிப் பண்ணை அபிவிருத்தி**

திருகோணமலை சீனக்குடாவில் உள்ள மேல் நிலைத் தாங்கிப் பண்ணை பிரித்தானிய காலணித்துவ ஆட்சிக் காலத்தில் கப்பல்களுக்கு எரிபொருளை வழங்குவதற்காக பிரித்தானிய அரசால் நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன் இவை மீள புனரமைக்கப்பட்டுள்ளது. இவ் களஞ்சியத் தாங்கிகள் ஒவ்வொன்றும் 10,000 MT திறன் கொண்டதாக உள்ளதுடன், இவை ஒவ்வொன்றும் 99% உறுதியாக உள்ளன.

மேலும், இல் எரிபொருள் களஞ்சிய தாங்கிகளை அபிவிருத்தி செய்வதற்காக 21/2285/325/050 ஆம் இலக்கமிடப்பட்ட 2022.01.11 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் இவ் களஞ்சியத் தாங்கிகளைபி ன்வரும் உடன்படிக்கைகள் மூலம் 50 வருடத்திற்கு குத்தகைக்கு விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. இதன் விபரங்கள் பின்வருமாறு:

- இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு 24 எண்ணெய் தாங்கிகள்
  லங்கா இந்தியன் ஒயில் கம்பனிக்கு (LIOC) 14 எண்ணெய் தாங்கிகள்
- வரையறுக்கப்பட்ட தனியார் திருகோணமலை பெற்றோலிய முனையத்திற்கு (TPTL) 61 எண்ணெய் தாங்கிகள்

## I. திருகோணமலை மேல் நிலை தாங்கிப் பண்ணையில் 24 தாங்கிகளை அமைத்தல்

அமைச்சரவையானது, CP/25/0321/825/018-ஆம் இலக்கமிடப்பட்ட 2025.03.03 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் கீழ் இத் திட்டத்தைச் செயற்படுத்த ஒப்புதல் அளித்தது. அதனைத் தொடர்ந்து, 25/2192/825/018-I ஆம் இலக்கமிடப்பட்ட 2025.12.01 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் கீழ், இறங்குதுறையை மேல் நிலை தாங்கிப் பண்ணையுடன் இணைக்கும் குழாய்களை அமைப்பதற்கும் ஒப்புதல் அளித்தது.

2025 ஆம் ஆண்டில், எண்ணெய் தாங்கி பண்ணையின் புனரமைப்பு மற்றும் அபிவிருத்தியில் கணிசமான முன்னேற்றம் எட்டப்பட்டது. தளத்தை தயார் செய்தல், தாங்கிகளை சுத்தம் செய்தல் மற்றும் ஆய்வு செய்தல், பாதுகாப்பு உள்கட்டமைப்பை நிறுவுதல், பயன்பாட்டு அமைப்பு மேம்பாடு மற்றும் பிற அத்தியாவசிய ஆயத்தப் பணிகள் ஆகியவை நிறைவு செய்யப்பட்ட பிரதான நடவடிக்கைகளில் அடங்கும். மேலும், தீ பாதுகாப்பு மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ வசதிகள் அமைத்தல், தாங்கிகள் புனரமைப்புப் பணிகள் மற்றும் பயன்பாட்டுச் சேவைகளை வழங்குதல் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இத் திட்டம் திட்டமிட்டதன் படி முன்னேறி வருவதுடன், நாட்டின் பெற்றோலிய களஞ்சியத் திறனையும் எரிசக்திப் பாதுகாப்பையும் மேலும் வலுப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## II. திருகோணமலை பெற்றோலிய முனையங்கள் (தனியார்) லிமிடெட் நிறுவனத்திற்குச் சொந்தமான தாங்கிகளை அபிவிருத்தி செய்வதல் (61 தாங்கிகள்)

திருகோணமலை பெற்றோலிய முனையங்கள் (தனியார்) லிமிடெட் நிறுவனத்திற்குச் சொந்தமான 61 எரிபொருள் தாங்கிகளின் அபிவிருத்தி பணிக்கான முதற்கட்ட நடவடிக்கைகள், அதாவது தள அணுகல் மேம்பாடுகள், தொழில்நுட்ப மதிப்பீடுகள் மற்றும் குறுகிய கால, நீண்ட கால அபிவிருத்தி மூலோபாயங்களை வகுத்தல் ஆகியவை 2025 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன.

கருத்திட்டத்திற்குப் பொருத்தமான முதலீட்டாளரை அடையாளம் காண்பதற்காக, ஆர்வங்களிற்கான வெளிப்பாடுகள் (EOIs) கோரப்பட்டு, ஏழு (07) நிறுவனங்களிடமிருந்து முன்மொழிவுகள் பெறப்பட்டன. அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட கருத்திட்டக் குழு மற்றும் பேரம்பேசும் குழுவால் பெற்றுக்கொள்ளப்பட்ட முன்மொழிவுகள் தற்போது மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றன.

இதேவேளையில், திருகோணமலையை ஒரு பிராந்திய எரிசக்தி மையமாக அபிவிருத்தி செய்வதற்காக இலங்கை, இந்தியா மற்றும் ஐக்கிய அரபு இராஜ்சியம் ஆகியவற்றுக்கு இடையே முத்தரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானதைத் தொடர்ந்து, இவ் தாங்கிகளின் அபிவிருத்தி பணிகளை விரிவான எரிசக்தி மைய முன்னெடுப்பில் இணைப்பது குறித்த கலந்துரையாடல்கள் நடைபெற்று வருகின்றன. இதற்கிணங்க, முத்தரப்பு ஆலோசனைகளும் பொருத்தமான வணிக மாதிரியை உருவாக்கும் பணிகளும் தற்போது நடைபெற்று வருகின்றன.

- **திருகோணமலையை சக்தி வள மையமாக அபிவிருத்திசெய்வதில் இந்தியா, இலங்கை மற்றும் ஐக்கிய அரபு இராஜ்சியத்தின் (UAE) ஒத்துழைப்புக்கள்**

திருகோணமலையை சக்திவள மையமாக அபிவிருத்தி செய்வதற்கான ஒத்துழைப்பு வேண்டி இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு, இந்திய குடியரசு அரசு மற்றும் ஐக்கிய அரபு இராஜ்சிய அரசு இடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) கைச்சாத்திடுவதற்கான ஒப்புதல் கோரி வலுசக்தி அமைச்சு மற்றும் வெநாட்டு

அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைசசால் 2025.03.28 ஆம் திகதி கூட்டு அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டது. இவ் முன்மொழிவுக்கு அமைச்சரவை அமைச்சர்கள் 25/0567/825/031-I ஆம் இலக்கமிடப்பட்ட 2025.04.02 ஆம் திகதியிடப்பட்ட தீர்மானத்தின் மூலம் ஒப்புதல் அளித்ததுள்ளனர். இதற்கிணங்க, இலங்கையின் சார்பாக வலுசக்தி அமைச்சின் செயலாளர் 2025.04.05 ஆம் திகதி புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளார். இது தொடர்பாக தற்போது முத்தரப்பு விவாதங்கள் நடைபெற்று வருகின்றன.

- **தீவு முழுவதும் மின்சார வாகனங்களுக்கான (EV) மின்னேற்றல் நிலையங்களை நிறுவுதல்**

இத் திட்டம் 10 மின்சார வாகன மின்னேற்றல் நிலையங்களை நிர்மாணிப்பதை இலக்காகக் கொண்டுள்ளது, அவற்றில் 7 நிலையங்கள் ஏற்கனவே நிறைவடைந்துள்ளன, மேலும் அவை வாடிக்கையாளர்களுக்கு சேவைகளை வழங்குகின்றன.

அடுத்து, மேலதிகமாக அனுராதபுரம், தெமட்டகொட மற்றும் பம்பலப்பிட்டி ஆகிய மூன்று (03)இடங்களில் நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளன.

**அட்டவணை – 2.2.17**
**எரிபொருள் களஞ்சியத் திறன் விரிவாக்கல் திட்டத்தின் விபரங்களா**

| விபரம் | மதிப்பிடப்பட்ட செலவு (இலங்கை ரூபாய் மில்லியன்) | நிதி மூலம் | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| கொலன்னாவை முனையத்தில் மொத்தம் 64,000 $m^3$ கொள்ளளவு கொண்ட 6 தாங்கிகளை நிர்மாணித்தல். | 3,374 | சிலோன் பெட்ரோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல்ஸ் லிமிடெட் (CPSTL) | ஒப்பந்தம் 2025.09.17 ஆம் திகதி வழங்கப்பட்டு, 2025.09.30 ஆம் திகதி நிர்மாண பணித்தளம் ஒப்படைக்கப்பட்டது. தாங்கிகளின் நிர்மாணப் பணிகள் 8.5% பூர்த்தியடைந்துள்ளன. |
| கொலன்னாவை முனையத்தில் மொத்தம் 22,000 $m^3$ கொள்ளளவு கொண்ட 2 தாங்கிகளை நிர்மாணித்தல். | 1,470.4 | சிலோன் பெட்ரோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல்ஸ் லிமிடெட் (CPSTL) | கேள்விமனு மதிப்பீட்டுக் குழு / அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழு நியமனம் 2025.12.24 ஆம் திகதி பெறப்பட்டது. |
| முத்துராஜவல முனையத்தில் மொத்தம் 40,000 $m^3$ கொள்ளளவு கொண்ட 3 தாங்கிகளை நிர்மாணித்தல். | 3,496 | சிலோன் பெட்ரோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல்ஸ் லிமிடெட் (CPSTL) | அமைச்சரவை ஒப்புதல் பெறப்பட்டு, பெறுகை ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. |

- **எரிபொருள் குழாய் வலைப்பின்னல் அபிவிருத்தி**

**அட்டவணை: 2.2.18**
**எரிபொருள் குழாய் வலைப்பின்னல் அபிவிருத்தி கருத்திட்டங்கள்**

| விபரம் | மதிப்பிடப்பட்ட செலவு (இலங்கை ரூபாய் மில்லியன்) | நிதி ஆதாரம் | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| கொழும்பு துறைமுகத்திலிருந்து கொலன்னாவ முனையத்திற்கு 18 அங்குல விட்டம் கொண்ட குழாய் பாதை அமைத்தல். | 2,852.5 | சிலோன் பெட்ரோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல்ஸ் லிமிடெட் (CPSTL) | திருத்தப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது, மேலும் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழுவின் கூட்டம் நடைபெற உள்ளது. இறுதி ஆவணம் பரிசீலிக்கப்பட்டு, அமைச்சரவையின் ஒப்புதலுக்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| கொலன்னாவை முனையத்திலிருந்து களனிதிஸ்ஸ மின் நிலையத்திற்கு 12 அங்குல விட்டம் கொண்ட குழாய் பாதையை நிர்மாணித்தல். | 1,444 | சிலோன் பெட்ரோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல்ஸ் லிமிடெட் (CPSTL) | இத் திட்டத்திற்கு 2025.12.15 ஆம் திகதி அமைச்சரவை ஒப்புதல் வழங்கப்பட்டது. கேள்விமனு மதிப்பீட்டுக் குழு (BEC) மற்றும் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழு (CAPC) ஆகியவை நியமிக்கப்பட உள்ளன. |
| விமான எரிபொருள் பரிமாற்றத்திற்காக முத்துராஜவெலவிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு குழாயை நிர்மாணித்தல் | 18,000 | இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் (CPC) | ஒப்பந்தக்காரரின் மோசமான செயற்திறன் காரணமாக அத் திட்டம் நிறுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து, ஆலோசனை மற்றும் மேலதிக நடவடிக்கைக்காக இவ் விடயம் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. |

## 2.3 2026 ஆம் ஆண்டிற்கான எதிர்கால கண்ணோட்டம்

**மின்சக்திப் பிரிவு**

பின்வரும் கருத்திட்டங்கள் வெளிநாட்டு நிதி உதவியுடன் 2026 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்படவுள்ளன:

- விநியோகப் பிரிவுகள் 04 ற்காக SCADA மற்றும் AMI தொழில்நுட்பங்களின் ஆதரவுடன் ADMS அமைப்பைக் கொண்ட 04 DCC மையங்களை நிறுவுதல்.
- 600 மெகாவாட் திறன் கொண்ட மஹா–ஓயா பம்ப் சேமிப்பு நீர்மின் நிலையம் (PSHP) தொடர்பான விரிவான வடிவமைப்புப் பணிகள் (CEB இனால் பெறப்பட்ட ADB கடன் உதவியுடன்) ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளதுடன், பின்வரும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் தொடங்கப்படவுள்ளன:

- கிளிநொச்சியிலிருந்து புதிய ஹபரணை வரை வடக்கு 400kV மின்கடத்தல் வலையமைப்பை அபிவிருத்தி செய்தல்.
- நுரைச்சோலை – வாரியபொல 220kV மின்கடத்தல் பாதை மற்றும் வாரியபொல சுவிட்சிங் நிலையத்தை நிர்மாணித்தல்.
- பாதுக்கை 220kV கிரிட் உப மின் நிலையத்தில் Static Synchronous Compensator (STATCOM) அமைப்பை நிறுவுதல்.
- புதிய ஹபரணை கிரிட் உப மின் நிலையத்தில் 75 MVA Synchronous Condenser அலகை நிறுவுதல்.

- நீர்கொழும்பு பிராந்தியத்தில் LECO மின்விநியோக அமைப்பை வலுப்படுத்தும் கருத்திட்டம்.

- புந்தலு ஓயா மற்றும் புந்தல் நீர்வீழ்ச்சி இரண்டாம் கட்டக் கருத்திட்டம் – மேல் கொத்மலை நீர்மின் திட்டம்.

- காற்றாலை வள மதிப்பீடு, தெதுறு ஓயா மிதக்கும் சூரிய ஒளிமின் திட்டம், கராச்சி காற்றாலை மின் உற்பத்தித் திட்டம்.

**வலுசக்திப்பிரிவு**

- முதலீட்டாளரைத் தேர்ந்தெடுத்து, சப்புகஸ்கந்தை சுத்திகரிப்பு நிலையத்தை நவீனமயப்படுத்தல் மற்றும் புதிய சுத்திகரிப்பு நிலையத்தை நிர்மாணிக்கும் பணிகளை ஆரம்பித்தல்

- திருகோணமலை மேல் நிலை தாங்கிப் பண்ணையில் 24 தாங்கிகளை அமைக்கும் பணிகளை தொடருதல்

- திருகோணமலை பெற்றோலிய முனையங்கள் (தனியார்) லிமிடெட் நிறுவனத்திற்குச் சொந்தமான தாங்கிகளை அபிவிருத்தி செய்வதை (61 தாங்கிகள்) தொடருதல்

- அனுராதபுரம், தெமட்டகொட மற்றும் பம்பலப்பிட்டிய ஆகிய மூன்று (03) மேலதிக இடங்களில் மின்சார வாகன மின்னேற்றும் நிலையங்களைக் நிர்மாணித்தல் மற்றும் இலங்கை முழுவதும் மின்சார வாகன மின்னேற்றும் நிலையங்களை நிறுவுதல்.

- எரிபொருள் களஞ்சியத் திறனை விரிவாக்குதல்

- எரிபொருள் குழாய் வலையமைப்பை அபிவிருத்தி செய்தல்

# அத்தியாயம் 03
# திசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான ஒட்டுமொத்த நிதி சார்ந்த செயலாற்றுகை

# அத்தியாயம் 03

# திசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான ஒட்டுமொத்த நிதி சார்ந்த செயலாற்றுகை

**அறிக்கையிடும் அறிப்படை**

1) அறிக்கையிடப்படும் காலப் பகுதி

2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் திசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையான காலப் பகுதி இந்த நிதிக் கூற்றுக்களுக்குரிய அறிக்கையிடும் காலப் பகுதியாகும்.

2) அளவீட்டு அடிப்படை

நிதிக் கூற்றுக்கள் வரலாற்று ஆகுசெலவு அடிப்படையில் தயாரிக்கப் பட்டுள்ளன. சில சொத்துக்கள் மீள்விலை மதிப்பிடப்பட்ட பெறுமானத்திற்கு மேம்படுத்தப்பட்டுள்ளன.

வேறெந்த வகையிலும் குறிப்பிடப்படாதவிடத்து, கணக்குகள் மேம்படுத்திய நிதி அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன. நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாக்களில் அண்ணளவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

3) வருமானம் இனங்காணல்

பரிமாற்றத்தில் உள்ள கொடுக்கல்வாங்கல்களினதும் மற்றும் பரிமாற்றத்தில் அல்லாத கொடுக்கல்வாங்கல்களினதும் வருமானம் அத்தகைய கொடுக்கல் வாங்கல்களின் வரி செலுத்தப்படும் காலப் பகுதி கருத்திற் கொள்ளப்படாமல் கணக்கீட்டு காலப் பகுதியினுள் நிதி கிடைப்பனவுக்கு ஏற்ப இனங்காணப் படுகின்றது.

4) சொத்துக்களையும், பொறித் தொகுதிகளையும் மற்றும் உபகரணங்களையும் இனங்காணலும் மற்றும் அவற்றை அளவிடுதலும்

சொத்துக்களுககான எதிர்கால பொருளாதார நன்மை நிறுவனத்திற்கு கிடைப்பது உறுதிசெய்யப்பட்டுள்ள மற்றும் அந்த சொத்துக்கள் நம்பத்தகுந்த விதத்தில் அளவிட முடியுமாக உள்ள சந்தர்ப்பத்தில் அத்தகைய சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் இனங்காணப்படுகின்றன.

சொத்துக்களும் உபகரணங்களும் ஆகுசெலவில் இனங்காணப்படுகின்றன. ஆகுசெலவு மாதிரி ஏற்புடையதாகாத சந்தர்ப்பங்களில் மீளவிலை மதிப்பிடப் படும் பெறுமானம் பிரயோகிக்கப்படுகின்றது.

5) சொத்துக்களினதும், பொறித் தொகுதிகளினதும் மற்றும் உபகரணங்களினதும் ஒதுக்கம்

இந்த ஒதுக்கக் கணக்கு சொத்துக்களினதும், பொறித் தொகுதிகளினதும் மற்றும் உபகரணங்களினதும் ஒத்த கணக்காகும்.

6) காசும் மற்றும் காசு ஒப்புரவுகளும்

காசும் மற்றும் காசு ஒப்புரவுகளிலும் 2025 திசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் கையிருப்பில் உள்ள உள்நாட்டுப் பரிவர்த்தனை நாணயங்களும் உள்ளடங்கும்.

## 3.1 நிதிச் செயலாற்றுகை கூற்று

ஏசீஏ- எப்

**2024 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான**
**நிதிச் செயலாற்றுகைக் கூற்று**

(ரூபா)

| திருத்தப்பட்ட பாதீட்டு ஒதுக்கீடு 2024 ரூபா | | குறிப்பு | உண்மை நிலை 2025 ரூபா | 2024 ரூபா | |
|---|---|---|---|---|---|
| - | **வருமான பெறுவனவுகள்** | | | - | |
| - | வருமான வரி | 1 | - | - | |
| - | உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி | 2 | - | - | ஏசீஏ-1 |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | 3 | - | - | |
| 2,400,000,000 | வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும் | 4 | 2,137,599,304 | 3 ,158,283,029 | |
| 2,400,000,000 | மொத்த வருமானப் பெறுகைகள் (அ) | | **2,137,599,304** | 3,158,283,029 | |
| - | **வருமானமற்ற பெறுகைகள்** | | - | - | |
| - | திறைசேரி பணிமுற்பணங்கள் | | 1,865,819,147 | 7,941,916,912 | ஏசீஏ-3 |
| - | வைப்புகள் | | 18,349,826 | 896,711 | ஏசீஏ-4 |
| - | முற்பணக் கணக்குகள் | | 13,128,523 | 11,525,177 | ஏசீஏ-5 |
| | ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள் | | - | - | |
| - | மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ) | | **1,897,297,496** | 7,954,338,800 | |
| 2,400,000,000 | மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் | | | | |
| | அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ) | | **4,034,896,801** | 11,112,621,829 | |
| | திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ) | | 669,398,526 | 613,559,261 | |
| | தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் | | | | |
| | வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ) | | **3,365,498,275** | 10,499,062,568 | |
| | **கழி : செலவினம்** | | | | |
| | **மீண்டுவரும் செலவினம்** | | - | - | |
| 196,150,000 | சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் | 5 | 186,302,291 | 172,701,438 | |
| 234,620,000 | ஏனைய பொருட்கள் சேவைகள் | 6 | 210,831,878 | 231,472,868 | ஏசீஏ-2(ii) |
| 626,000,000 | மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள் | 7 | 461,177,700 | 343,781,526 | |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | - | - | |
| 500,000 | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 9 | 46,650 | 500 | |
| 1,057,270,000 | மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ) | | **858,358,519** | 747,956,332 | |
| | **மூலதனம் செலவினம்** | | | | |
| 6,580,000 | முலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும் | 10 | 4,071,351 | 5,167,451 | |
| 3,939,826,676 | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | 11 | 1,900,937,591 | 2,456,703,933 | |
| 1,884,500,000 | மூலதன மாற்றல்கள் | 12 | 1,370,099,719 | 7,530,808,674 | ஏசீஏ-2(ii) |
| - | நிதிச் சொத்துக்களின் கொள்வனவு | 13 | - | - | |
| 292,292,000 | திறன் விருத்தி | 14 | 972,300 | 527,644,374 | |
| 3,976,500,000 | ஏனைய மூலதனச் செலவினங்கள் | 15 | 3,711,874,572 | 15,603,436,028 | |
| 10,099,698,676 | மொத்த மூலதனம் செலவினம் (எ) | | **6,987,955,532** | 26,123,760,460 | |
| | வைப்புக் கொடுப்பனவுகள் | | 17,498,454 | 1,071,012 | ஏசீஏ-4 |
| | முற்பணக் கொடுப்பனவுகள் | | 18,686,017 | 11,585,407 | ஏசீஏ-5 |
| | ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம் | | - | - | |
| | மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ) | | 36,184,470 | 12,656,419 | |
| | மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ) | | 7,882,498,522 | 26,884,37,211 | |
| (46,787,700,000) | **டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)** | | (4,517,000,247) | (16,385,310,643) | |
| | **பணிமுற்பண சரிப்படுத்தல் அறிக்கையின்படி மீதி** | | (4,517,000,247) | (16,385,998,643) | ஏசீஏ-7 |
| | **டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி** | | | 688,001 | ஏசீஏ-3 |
| | | | (4,517,000,247) | (16,385,310,642) | |

## 3.2 நிதி நிலைமைக் கூற்று



**2025 டிசம்பர் 31 இல் உள்ளவாறான**
**நிதி நிலைமைக் கூற்று**

| | குறிப்பு | உண்மை நிலை 2025 ரூபா | உண்மை நிலை 2024 ரூபா |
|---|---|---|---|
| **நிதி சொத்துக்கள் அற்றது** | | | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் | ஏசீஏ-6 | 630,620,523 | 745,479,913 |
| **நிதி சொத்துக்கள்** | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசீஏ-5/5ஏ | 37,443,559 | 31,886,066 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | ஏசீஏ-3 | - | 688,001 |
| **மொத்த சொத்துக்கள்** | | **668,064,083** | **778,053,980** |
| **தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு** | | | |
| திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள் | | 26,639,642 | 21,933,522 |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம் | | 630,620,523 | 745,479,913 |
| வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம் | ஏசீஏ-5பீ | 9,550,000 | 9,550,000 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வைப்புக் கணக்குகள் | ஏசீஏ-4 | 1,253,916.91 | 402,544 |
| தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி | ஏசீஏ-3 | - | 688,001 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **668,064,083** | **778,053,980** |

பக்க இலக்கம் ....... முதல் ..... வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்/பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் ....... முதல் ....... வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். **2025 ஆம் ஆண்டின் 17.12.2025 திகதியிடப்பட்ட இல 02/2025 அரச கணக்குகள் விதிமுறைகள் மற்றும் அரச நிதி விதிமுறைகள் 150 மற்றும் 151 ஆகியவற்றின் தேவைகளுக்கு ஏற்ப நிதி நிலமைக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.** அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் எண் தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 38(1) (இ) இன் படி நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

.........................
பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்:
பதவி :
திகதி : 26/02/26

.........................
கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்:
பதவி :
திகதி : 26/02/26

.........................
பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் / பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(
பெயர் :
திகதி : 26.02.26

Pof. K.T.M. Udayanga Hemapala
Secretary
Ministry of Energy
No. 437, Galle Road,
Colombo 03.

G. Chandrasena
Chief Financial Officer
Ministry of Energy
No: 437, Galle Road,
Colombo 03.

2

## 3.3 காசுப் பாய்ச்சல் கூற்று

ஏசீஏ- சீ

**வலுசக்தி அமைச்சு**
**2024 டிசம்பர் 31 இல் உள்ளவாறான**
**காசுப் பாய்ச்சல் கூற்று**

| | | உண்மை | |
|---|---|---|---|
| | | **2025**<br>ரூபா | **2024**<br>ரூபா |
| தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல் | | | |
| மொத்த வரிப் பெறுகைகள் | | - | - |
| கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் | 1 | 301,661,904 | 742,592,829 |
| இலாபம் | | - | - |
| வருமானம் அல்லாத பெறுகைகள் | | - | - |
| ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் | 2 | 2,104,171,328 | 2,634,824,309 |
| கிடைக்கப்பெற்ற கட்டுநித | 3 | 1,865,131,146 | 7,941,916,912 |
| முற்பணங்களை அறவிடல | 4 | 12,754,736 | 10,410,029 |
| வைப்புக்களின் பெறுகை | 3 | 18 ,349,826 | 896,711 |
| **செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)** | | **4,302,068,941** | **11,330,640,790** |
| **கழி – பகிர்ந்தளிக்கப்பட்ட காசு** | | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாட்டுக் கொடுப்பனவுகள் | 5 | 396,559,719 | 403,125,625 |
| மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும் | 6 | 149,175,800 | 112,277,526 |
| புனரமைப்பு மற்றும் மேம்பாடு மூலதனச் சொத்துக்கள்,<br>மூலதனப் பரிமாற்றம், மூலதனம் | 7 | 1,170,525,731 | 7,995,785,499 |
| கட்டிடம் மற்றும் இதர மூலதனச் செலவினங்கள் | 8 | 1,677,610 | 1,245,856 |
| பிற தலைப்புகளின் சார்பாக ஏற்பட்ட செலவினம் | 9 | 668,710,525 | 613,559,261 |
| முற்பணக்கொடுப்பனவு | 10 | 18,806,017 | 11,428,107 |
| வைப்புக் கொடுப்பனவு | 11 | 17,498,454 | 1,071,012 |
| **தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)** | | **2,422,953,856** | **9,138,492,886** |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ) = (அ) – (ஆ)** | | **1,879,115,085** | **2,192,147,904** |
| முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல் | | | |
| வட்டி | | - | - |
| பங்கு இலாபம் | | - | - |
| உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை | | - | - |
| உப கடன்கள் மீதான அறவீடுகள் | | - | - |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)** | | - | - |
| **கழி – பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:** | | | |
| மூலதன செலவினம் | 12 | 1,879,115,085 | 2,191,459,902 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)** | | **1,879,115,085** | **2,191,459,902** |
| **முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ) = (ஈ) – (உ)** | | **(1,879,115,085)** | **2,191,459,902)** |
| **தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான**<br>**தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)** | | | 688,001 |
| நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல் | | | |
| உள்ளூர்க் கடன்கள் | | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் | | - | - |
| பெற்ற நன்கொடைகள் | | - | - |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)** | | - | |
| **கழி – பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:** | | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | | | |
| **நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)** | | **-** | **-** |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)–(ஐ)** | | **-** | **-** |
| **காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ) = (எ) + (ஒ)** | | **-** | **688,001** |
| **ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி** | | **-** | **-** |
| **டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி** | | **-** | **688,001** |

## 3.4 வருமானம் சேகரிக்கும் செயலாற்றுகை

| வருமானக் குறியீடு | வருமானக் குறியீட்டு விபரம் | ஆரம்ப மதிப்பீடு | | சேகரித்த வருமானம் | |
|---|---|---|---|---|---|
| | | ஆரம்ப மதிப்பீடு (ரூ.) | வருமான மதிப்பீடு (ரூ.) | தொகை (ரூ.) | இறுதி வருமான மதிப்பீட்டின் % வீதமாக |
| 2003.02.21 | வரி சாராத வருமானம் மற்றும் பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சுக்குரிய கட்டணங்கள | 3,000,000,000.00 | 400,000,000.00 | 2,137,599,304.40 | 89% |

## 3.5 ஒதுக்கிய நிதிப் பயன்பாட்டு செயலாற்றுகை

| நிதியேற்பாட்டு வகை | ஒதுக்கிய நிதியேற்பாடு | | உண்மையான செலவு | பயன்படுத்திய நிதியேற்பாடு, நிறைவு செய்த இறுதி நிதியேற்பாட்டின் % வீதமாக |
|---|---|---|---|---|
| | ஆரம்ப நிதியேற்பாடு | இறுதி நிதியேற்பாடு | | |
| மீண்டெழும் | 1,061,000,000.00 | 1,057,270,000.00 | 1,009,356,619.00 | 95% |
| மூலதன | 20,081,000,000.00 | 10,584,730,000.00 | 6,987,955,532.00 | 66% |

## 3.6 நி.பி.கு. இலக்கம் 208 இன் பிரகாரம் வழங்கிய நிதியேற்பாடு

| | நிதியேற்பாடு கிடைத்த அமைச்சு / திணைக்களம் | ஒதுக்கீட்டின் நோக்கம் | நிதியேற் பாட்டு வகை | ஒதுக்கிய நிதியேற்பாடு | | உண்மையான செலவு (ரூ.) | பயன்படுத்திய நிதியேற்பாடு, வழங்கிய இறுதி நிதியேற்பாடுகளின் % வீதமாக |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | ஆரம்ப நிதியேற் பாடு (ரூ) | இறுதி நிதியேற்பாடு (ரூ) | | |
| 1 | ரயில்வே துறை | அமைச்சக அதிகாரிகளுக்கு ரயில்வே அனுமதிச் சீட்டுகள் வழங்கப்பட்டன. | மீண்டெழும் | 621,100.00 | 621,100.00 | 621,100.00 | 100% |
| 2 | திறைசேரியின் செயற்பாடுகள் திணைக்களம் | இ.மி.ச. பெற்ற வெளிநாட்டு கடன் கணக்கீடு | மூலதன | 7,676,000,000.00 | 3,976,000,000.00 | 3,711,874,572.28 | 93% |
| 3 | திறைசேரியின் செயற்பாடுகள் திணைக்களம் | கொழும்பில் கழிவுகளிலிருந்து எரிசக்தியை உருவாக்கும் திட்டத்திற்கான கணக்கியல் செலவுகளை CEB பெறுதல் | மூலதன | 1,204,000,000.00 | 1,204,000,000.00 | 892,937,484.00 | 74% |
| 4 | திறைசேரியின் செயற்பாடுகள் திணைக்களம் | தொழிலாளர் பயிற்சிக்காக ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட நன்கொடைக்கான கணக்கு | மூலதன | 600,000.00 | 600,000.00 | - | 0% |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 5 | திறைசேரியின் செயற்பாடுகள் திணைக்களம் | CEB ஆல் செயல்படுத்தப்படும் கொரிய மானிய உலர்மின்கல சக்தி களஞ்சிய அமைப்பு (BESS) க்கான கணக்கியல் செலவுகள் | மூலதன | 900,000.00 | 717,868,673.00 | 717,768,673.00 | 100% |
| 6 | திறைசேரியின் செயற்பாடுகள் திணைக்கள | இந்திய அரசாங்கத்தின் கீழ் SLSEA க்கு வழங்கப்பட்ட வெளிநாட்டுக் கடன்களைக் கணக்கிடுதல் | மூலதன | 290,000,000.00 | 290,000,000.00 | 272,544,596.47 | 94% |
| 7 | திறைசேரியின் செயற்பாடுகள் திணைக்களம் | இந்திய அரசாங்கத்தால் SLSEA-க்கு நன்கொடையாக வழங்கப்பட்ட/ வழங்கப்பட்ட கணக்கியல் செலவினங்கள். | மூலதன | 3,000,000,000.00 | 3,000,000,000.00 | 1,086,191,346.98 | 36% |
| 8 | திறைசேரியின் செயற்பாடுகள் திணைக்களம் | USAID நிதியுதவியின் கீழ் இலங்கை எரிசக்தி திட்டத்திற்கான கணக்கியல் செலவினங்கள். | மூலதன | 297,000,000.00 | 290,692,000.00 | - | 0% |
| 9 | இலங்கை சுங்கம் | இலங்கை அணுசக்தி சபைக்கு வெளிநாட்டு மானியங்களாகப் பெறப்பட்ட உபகரணங்களின் மதிப்பிற்கான கணக்கியல் | மூலதன | 163,000,000.00 | 163,000,000.00 | 50,299,193.84 | 31% |
| 10 | திறைசேரியின் செயற்பாடுகள் திணைக்களம் | சர்வதேச அணுசக்தி நிறுவனம் (IAEA) வழங்கிய உபகரணங்களுக்கான கணக்கியல் செலவினங்கள் | மூலதன | 32,000,000.00 | 38,308,000.00 | 36,307,758.28 | 95% |
| 11 | திறைசேரியின் செயற்பாடுகள் திணைக்களம் | கெரவலபிட்டிய-துறைமுக இரண்டாவது நிலத்தடி மின்பரிமாற்ற வழித்தடத் திட்டத்திற்காக இலங்கை மின்சார சபையால் பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன்களின் கணக்கியல். | மூலதன | 7,000,000,000.00 | 483,031,327.00 | - | 0% |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 12 | திறைசேரியின் செயற்பாடுகள் திணைக்களம் | இலங்கை மின்சார சபைக்கு, புதிய ஹபரண கப்பல்துறை மின்பரிமாற்ற அபிவிருத்தி கருத்திட்டத்திற்காக AIIB-யிடமிருந்து பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன்களின் கணக்கியல். | மூலதன | 1,000,000.00 | 1,000,000.00 | - | 0% |
| 13 | திறைசேரியின் செயற்பாடுகள் திணைக்களம் | சம்பூர் கப்பல்துறை மின்பரிமாற்ற அபிவிருத்தித் திட்டத்திற்காக இலங்கை மின்சார சபைக்கு AIIB-யிடமிருந்து பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன்களின் கணக்கியல். | மூலதன | 1,000,000.00 | 1,000,000.00 | - | 0% |
| 14 | திறைசேரியின் செயற்பாடுகள் திணைக்களம் | இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபை | மீண்டெழும் | 155,000,000.00 | 155,000,000.00 | 154,999,900.00 | 100% |
| 15 | திறைசேரியின் செயற்பாடுகள் திணைக்களம் | இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபை | மூலதன | 200,000,000.00 | 200,000,000.00 | 149,993,337.00 | 75% |
| 16 | திறைசேரியின் செயற்பாடுகள் திணைக்களம் | இலங்கை அணு சக்தி சபை | மீண்டெழும் | 50,000,000.00 | 50,000,000.00 | 50,000,000.00 | 100% |
| 17 | திறைசேரியின் செயற்பாடுகள் திணைக்களம் | இலங்கை அணு சக்தி சபை | மூலதன | 30,000,000.00 | 30,000,000.00 | 5,649,677.92 | 19% |
| 18 | திறைசேரியின் செயற்பாடுகள் திணைக்களம் | இலங்கை அணு சக்தி ஒழுங்குறுத்துகை சபை | மீண்டெழும் | 65,000,000.00 | 65,000,000.00 | 57,602,000.00 | 89% |
| 19 | திறைசேரியின் செயற்பாடுகள் திணைக்களம் | இலங்கை அணு சக்தி ஒழுங்குறுத்துகை சபை | மூலதன | 7,000,000.00 | 7,000,000.00 | 6,368,623.42 | 91% |
| 20 | திறைசேரியின் செயற்பாடுகள் திணைக்களம் | பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபை | மீண்டெழும் | 77,000,000.00 | 77,000,000.00 | 49,400,000.00 | 64% |
| 21 | திறைசேரியின் செயற்பாடுகள் திணைக்களம் | பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபை | மூலதன | 50,000,000.00 | 50,000,000.00 | 42,600,000.00 | 85% |
| 22 | திறைசேரியின் செயற்பாடுகள் திணைக்களம் | தேசிய மின்சார ஆலோசனைக் குழு | மீண்டெழும் | 58,000,000.00 | 58,000,000.00 | - | 0% |
| 23 | திறைசேரியின் செயற்பாடுகள் திணைக்களம் | தேசிய மின்சார ஆலோசனைக் குழு | மூலதன | 51,000,000.00 | 51,000,000.00 | - | 0% |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 24 | திறைசேரியின் செயற்பாடுகள் திணைக்களம் | மின்சாரத் துறை சீர்திருத்தச் செயலகத்தை நிறுவுதல் | மீண்டெழும் | 58,000,000.00 | 58,000,000.00 | - | 0% |
| 25 | திறைசேரியின் செயற்பாடுகள் திணைக்களம் | மின்சாரத் துறை சீர்திருத்தச் செயலகத்தை நிறுவுதல் | மூலதன | 50,000,000.00 | 50,000,000.00 | - | 0% |
| 26 | திறைசேரியின் செயற்பாடுகள் திணைக்களம் | மின்சார உற்பத்திக்கு அணுசக்தியைப் பற்றி ஆய்வு செய்வதற்கான திட்டமிடல் திட்டம். | மூலதன | 2,500,000.00 | 2,500,000.00 | - | 0% |

## 3.7 நிதி சாராத சொத்துக்கள் அறிக்கையிடல் செயலாற்றுகை

| சொத்துக்கள் குறியீடு | குறியீட்டு விபரம் | 2025.12.31 ஆம் திகதிற்கான பொருட்கள் கணக்கெடுப்புக்கு இணங்க உள்ள நிலுவை (ரூ.) | 2025.12.31 ஆம் திகதிற்கான நிதி அறிக்கையின் பிரகாரம் உள்ள நிலுவை (ரூ.) | எதிர்காலத்தில் கணக்கீடு செய்யப்படவுள்ள (ரூ.) | முன்னேற்ற % வீதமாக அறிக்கையிடுதல் |
|---|---|---|---|---|---|
| 9151 | கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்கள் | - | - | - | - |
| 9152 | இயந்திராதிகள் | 622,482,387.45 | 622,482,387.45 | - | 100% |
| 9153 | காணிகள் | - | - | - | - |
| 9154 | கட்புலனாகா சொத்துக்கள் | 8,138,136.00 | 8,138,136.00 | - | 100% |
| 9155 | உயிரியல் விஞ்ஞான சொத்துக்கள் | - | - | - | - |
| 9160 | நிகழும் பணி | - | - | - | - |
| 9180 | குத்தகைக்கு விடப்பட்டுள்ள சொத்துக்கள் | - | - | - | - |

## 3.8 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

குறிப்பு: 2025 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு அறிக்கை பின்னிணைப்பு 1 எனக் குறிக்கப்பட்டு இணைக்கப்பட்டுள்ளது.

# அத்தியாயம் 04
# செயலாற்றுகை குறிகாட்டிகள்

# அத்தியாயம் 04
# செயலாற்றுகை குறிகாட்டிகள்

## 4.1 அமைச்சின் செயலாற்றுகை குறிகாட்டிகள் (செயற் றிட்டத்தின் அடிப்படையில்)

வலுசக்தி அமைச்சானது இலங்கையின் மின்சக்தித் துறை மற்றும் வலுசக்தி துறை ஆகியவற்றை உள்ளடக்கியதாக காணப்படுகிறது. மின்சக்தித் துறையானது மின்சார விநியோகம் தொடர்பான நடவடிக்கைகளைக் கையாள்வதோடு வலுசக்தி துறையானது பெற்றோலியம் சார்ந்த தயாரிப்புகளின் விநியோக நடவடிக்கைகளைக் கையாள்கிறது.

பின்வரும் அட்டவணை அமைச்சின் இரு பிரிவுகளினதும் பிரதான செயலாற்றுகை குறிகாட்டிகளை காட்டுகின்றன:

| குறிப்பான குறிகாட்டிகள் | | அளவீட்டுக் கூறு | 2025 வெளீட்டு முன்னேற்றம் (திரண்டது) |
|---|---|---|---|
| பிரதான செயலாற்றுகை குறிகாட்டிகள் | விபரம் | | |
| மின்சாரத் துறை | | | |
| 1. தேசியப் பங்கில் புதுப்பிக்கத்தக்க வலுசக்தியின் மொத்த நிறுவப்பட்ட கொள்திறன். | புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதன் மூலம் மொத்த மின்சார நிறுவப்பட்ட கொள்திறனில் மெகாவோட் அளவு. | சதவீதம் | 67% |
| 2. மொத்த பிறப்பாக்க கலவையில் புதுப்பிக்கத்தக்க சக்தியின் பங்கு. | புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களை (நீர்மின், காற்று, சூரியசக்தி, உயிரியல் நிறை) பயன்படுத்துவதன் மூலம் மொத்த மின் பிறப்பாக்க கலவையில் ஜிகாவொட் அளவு. | சதவீதம் | 60% |
| 3. உயர் அழுத்த மின்வழங்கல் வலையமைப்பின் நீளம் (மின்வழங்கல் பலப்படுத்துகை / மின்விநியோகக் இணைப்பு கொள்திறன்). | முின்பிறப்பாக்க நிலையங்களிலிருந்து மின்சுமை மையங்களுக்கு மின்சாரத்தை கடத்துவதற்கு வசதியாக மின்வழங்கல் பாதைகளின் நீளம் மற்றும் மின்விநியோகக் இணைப்பு துணை நிலையங்களின் எண்ணிக்கை | மேல்நிலை இணைப்பு கி.மீ 220 கி.வோட் | 999 |
| | | கீழ்நிலை நிலத்தடி கி.மீ 220 கி.வோட் | 22 |
| | | மேல்நிலை இணைப்பு கி.மீ 132 கி.வோட் | 2350 |
| | | கீழ்நிலை நிலத்தடி கி.மீ 132 கி.வோட் | 55 |
| | | மின் இணைப்பு துணை நிலையங்களின் எண்ணிக்கை | 92 |
| 4. இலங்கை மின்சார சபையை மறுசீரமைத்து புதிதாக நிறுவப்பட்ட நான்கு முக்கிய நிறுவனங்களின் செயல்பாட்டுத் தயார்நிலையை நிறைவு செய்தல் | இலங்கை மின்சார சபையை மறுசீரமைப்பதன் மூலம் உருவாகும் நான்கு முக்கிய பின்தொடர் நிறுவனங்களின் முழுமையான செயல்பாட்டுத் தயார்நிலை | சதவீதம் | 50 |

| வலுசக்தித் துறை | | | |
|---|---|---|---|
| 5. பெற்றோலியம் சார்ந்த தயாரிப்புகளின் போதிய விநியோகம் கிடைப்பதை உறுதிசெய்தல் | பெற்றோலியம் சார்ந்த தயாரிப்புகளின் இறக்குமதி, சுத்திகரிப்பு, சேமிப்பு, விநியோகம் மற்றும் சந்தைப்படுத்தல். | சதவீதம் | 100% |
| 6. பெற்றோலியம் மற்றும் இயற்கை எரிவாயு ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் | பெற்றோலியம் மற்றும் இயற்கை எரிவாயு ஆய்வு மற்றும் அது சார்ந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளல். | சதவீதம் | 10% |
| 7. பெற்றோலியத் துறைக்கு ஒரு சுயாதீன ஒழுங்குறுத்துகை அமைப்பை அறிமுகப்படுத்துதல். | நியாயமான போட்டி, வெளிப்படையான விலை வழிமுறைகள், நுகர்வோர் பாதுகாப்பு, காப்பு மற்றும் தரத் தராதரங்கள் மற்றும் பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்குவதை உறுதி செய்வதன் மூலம் பெற்றோலியத் தொழிலை சுயாதீனமாக ஒழுங்குபடுத்தவும் மேற்பார்வையிடவும், அதன் மூலம் திறமையான, நம்பகமான மற்றும் நிலையான பெற்றோலிய சந்தையை மேம்படுத்துதல். | சதவீதம் | 60% |
| 8. உராய்வு எண்ணெய் மற்றும் கப்பல்களுக்கு எரிபொருள் நிரப்புதல் மீதான கொள்கை மற்றும் ஒழுங்குறுத்துகை சட்டகங்களை உருவாக்குவதை நிறைவு செய்தல் | உராய்வு எண்ணெய் மற்றும் கப்பல்களுக்கு எரிபொருள் நிரப்பும் தொழில்களை நிர்வகிக்கும் கொள்கை மற்றும் ஒழுங்குறுத்துகை சட்டகங்களை இறுதி செய்து அங்கீகாரம் பெறுதல், இதன் மூலம் பயனுள்ள துறை ஆளுகை, சந்தை போட்டித்தன்மை, தரத் தரநிலைகள் மற்றும் நிலையான கைத்தொழில் அபிவிருத்தியை உறுதி செய்தல். | சதவீதம் | 70% |

# அத்தியாயம் 05
# நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைவதன் செயலாற்றுகை

# அத்தியாயம் 05

# நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைவதன் செயலாற்றுகை

## 5.1 மின்சக்தி துறையின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் (SDGs)

SDG இலக்கு 7 - அனைவருக்கும் மலிவான, நம்பகமான, நிலையான மற்றும் நவீன வலுசக்தி கிடைப்பதை உறுதிசெய்தல்.

வலுசக்தி வழங்கல்கள் மற்றும் மாற்றல் முறைமைக்கான அணுகல் இல்லாமையானது மனித மற்றும் பொருளாதார பொருளாதார அபிவிருத்திக்கு ஒரு தடையாக உள்ளது. சூழலானது சூரிய சக்தி, காற்று, நீர்மின்சக்தி, புவிவெப்ப சக்தி, உயிரியல் எரிபொருட்கள், இயற்கை எரிவாயு, நிலக்கரி மற்றும் பெற்றோலியம் போன்ற புதுப்பிக்கத்தக்க மற்றும் புதுப்பிக்க முடியாத தொடர் வலுசக்தி மூலங்களை வழங்குகிறது.

பசுமை இல்ல வாயுக்களைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் இன்றி புதைபடிவ எரிபொருட்களின் பயன்பாடு அதிகரிப்பது, உலகளாவிய காலநிலை மாற்ற விளைவுகளை ஏற்படுத்தும். வலுசக்தி வினைத்திறன் மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் பயன்பாட்டின் அதிகரிப்பு ஆகியவை காலநிலை மாற்றத்தைத் தணிப்பதற்கும் பேரழிவு அபாயக் குறைப்பிற்கும் பங்களிக்கின்றன.

அதன்பிரகாரம், மின்சக்தி துறை பின்வரும் செயல்பாடுகளுக்குப் பங்களித்துள்ளது:

- மொத்த வீட்டு மின்மயமாக்கலில் 99.9% இனை அடைவதற்கும், தரமான மின் விநியோகத்தை உறுதி செய்வதற்கும் விநியோக வலைப்பின்னலை மேம்படுத்துதல்.
- நாட்டில் மின்சாரத்திற்கான அணுகலை 100% வரை அதிகரித்தல். (அடைவதற்குக் கடினமான பகுதிகள் என அடையாளம் காணப்பட்ட எஞ்சிய 0.01% பகுதியானது, இணைப்பு சாரா (off-grid) மின்சார விநியோகக் கோட்பாடுகளின் கீழ் மின்மயமாக்கப்பட்டுள்ளது).
- 2030 ஆம் ஆண்டிற்குள் மொத்த மின் பிறப்பாக்க கலவையில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களின் மூலம் 70% மின்சாரப் பங்கை வழங்குதல்.
- 2025 ஆம் ஆண்டிற்குள் 1578.95 மெகாவாட் (MW) சூரிய மின்சக்தி திறனை தேசிய மின் கட்டமைப்பில் இணைத்தல்.

## 5.2 தொடர்புடைய நிலையான அபிவிருத்தி இலக்குகளின் (SDGs) முன்னேற்றம்


| நி.அ.இ இலக்கு | நி.அ.இ சுட்டி | அளவீட்டுக் கூறு | 2030 ஆம் ஆண்டிற்கான நிர்ணயிக்கப்பட்ட இலக்கு | 2025 ஆம் ஆண்டு வரையிலான முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| இலக்கு 7– அனைவருக்கும் மலிவான, நம்பகமான, நிலையான மற்றும் நவீன வலுசக்தி கிடைப்பதை உறுதிசெய்தல் | | | | |
| 7.1 2030 ஆம் ஆண்டிற்குள், மலிவான, நம்பகமான மற்றும் நவீன வலுசக்தி சேவைகளுக்கான உலகளாவிய அணுகலை உறுதிசெய்தல் | 7.1.1 மின்சார அணுகல் கொண்ட மக்கள் தொகையின் விகிதம் | சதவீதம் (%) | 99.9% | 98.2% |
| | 7.1.2 சுத்தமான எரிபொருட்கள் மற்றும் தொழில்நுட்பத்தை முதன்மையாகச் சார்ந்திருக்கும் மக்கள் தொகையின் விகிதம் | மக்கள் தொகையின் சதவீதம் (%) | 99.9% | 22.4% |
| 7.2 2030 ஆம் ஆண்டிற்குள், உலகளாவிய வலுசக்தி கலவையில் புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் பங்கை கணிசமாக அதிகரித்தல். | 7.2.1 மூல வாரியாக மொத்த மின் பிறப்பாக்கத்தியில் புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் பங்கு (நீர், திண்ம உயிரி எரிபொருட்கள், காற்று, சூரியன், திரவ உயிரி எரிபொருட்கள், பாயோகஸ், புவிவெப்பம், கடல் மற்றும் கழிவு) (பிரதி குறிகாட்டி) | சதவீதம் (%) | 70% | 67% |
| | 7.2.2 இறுதி எரிசக்தி நுகர்வில் புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் பங்கு | சதவீதம் (%) | 70% | 60% |
| 7.3 2030 ஆம் ஆண்டிற்குள், நவீன மற்றும் நிலையான வலுசக்தி சேவைகளை வழங்குவதற்காக உள்கட்டமைப்பை விரிவுபடுத்துதல் மற்றும் தொழில்நுட்பத்தை மேம்படுத்துதல். | 7.ஆ.1 இலங்கையில் நிறுவப்பட்ட புதுப்பிக்கத்தக்க வலுசக்தி பிறப்பாக்கத் திறன் (தனிநபர் வாட்ஸில்) (12.அ.1 இன் மீள்வரும்) | மோ.உ.உற்பத்தியின் தலா இ.ரூ ஒரு மில்லியனுக்கு | 286 | 277.6 |

## 5.3 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகளும் சவால்களும்

1. இலங்கையில் மின்மயமாக்கல் மட்டத்தை 99.9% வரை மேம்படுத்தியமை.
2. மின் பிறப்பாத்தியின் நிறுவப்பட்ட கொள்ளவில் புதுப்பிக்கத்தக்க வலுசக்தியின் பங்களிப்பை ஈர்க்கக்கூடிய அளவில் பேணவர முடிந்துள்ளது. மின் பிறப்பாக்கத்தியில் புதுப்பிக்கத்தக்க வலுசக்தியின் ஆண்டு மற்றும் பங்கு பின்வருமாறு:

| | மூலம் | மொத்த நிறுவப்பட்ட மின் உற்பத்தி திறன் (MW) | 2025 இல் திறன் விரிவாக்கம் (MW) |
|---|---|---|---|
| 1 | சிறிய நீர்மின்சாரம் | 437.3 | 5.29 |
| 2 | சூரிய சக்தி | 331.9 | 161.85 |
| 3 | கூரைமேல் சூரிய சக்தி | 2,243 | 766.00 |
| 4 | காற்று | 287 | - |
| 5 | உயிர்ப்பொருள் | 64.3 | 1.5 |
| | மொத்தம் | **3,363.5** | **934.64** |

**புதுப்பிக்கத்தக்க வலுசக்தி திறன் விரிவாக்கம் (MW)**




3. புதுப்பிக்கத்தக்க ஆற்றல் கட்டுப்பாட்டு மையத்தை நிறுவுவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

பிரதான நீர்மின்சக்தியைத் தவிர, 2025 ஆம் ஆண்டின் இறுதி வரையிலான ஒட்டுமொத்த புதுப்பிக்கத்தக்க திறன் சேமிப்பு 3,363.5 மெகாவாட் ஆகும். 2025 ஆம் ஆண்டில், கூரை சூரியசக்தி அமைப்புகள் மூலம் கிடைத்த 766 மெகாவாட் உட்பட, 934.64 மெகாவாட் இந்த அமைப்பில் சேர்க்கப்பட்டது.

**சவால்கள்**

நீண்ட கால மின் உற்பத்தித் திட்டத்தில் கூரைமேல் சூரிய மின்சக்தியின் ஆண்டு சேர்ப்பு இலக்கு 160 மெகாவாட் ஆகும், ஆனால் சமீபத்திய ஆண்டுகளில், இது எதிர்பாராத அளவில் மீறப்பட்டுள்ளது. கடன் உதவியுடன், ஸ்மார்ட் மீட்டர்கள் மற்றும் ஸ்கேடா (SCADA) வசதிகள் சேர்க்கப்பட்டு, தேசிய மின்கட்டமைப்பு படிப்படியாக வளர்ந்து வருகிறது. ஆனாலும், குறிப்பாக வெயில் நிறைந்த விடுமுறை நாட்களில் உருவாக்கப்படும் திறன் முழுவதையும் உள்வாங்கிக்கொண்டு, அதைக் குறைக்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாவதற்கு இது இன்னும் போதுமானதாக இல்லை.

EDL மற்றும் LECO-வின் கட்டுப்பாட்டில் உள்ள விநியோக அமைப்பை, ஒரு புதிய SCADA அமைப்பு மற்றும் AMI உடன் மேம்படுத்துவதற்கான முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் தீவு முழுவதும் புதிய புதுப்பிக்கத்தக்க வலுசக்தி கருத்திட்டங்களை அனுமதிக்கும் வகையில் மின் பரிமாற்றத்தின் ஆயுட்காலமும் வலுப்படுத்தப்படும்.

நிலையான அபிவிருத்தி இலக்குகளை (SDGs) அடைவதற்குப் பங்களிப்பதில் பெற்றோலியத் தொழிற்துறை பல சவால்களை எதிர்கொள்கிறது. தூய்மையான மற்றும் மேலும் நிலையான எரிசக்தி ஆதாரங்களை நோக்கிய மாற்றத்திற்கு ஆதரவளிக்கும் அதே வேளையில், தேசிய எரிசக்தி பாதுகாப்பைப் பேணுவதும், பெற்றோலியப் பொருட்களின் தடையற்ற விநியோகத்தை உறுதி செய்வதும் ஒரு பிரதான சவாலாகும்.

எரிபொருள் களஞ்சியப்படுத்தல், விநியோகம் மற்றும் சில்லறை விற்பனை

உட்கட்டமைப்பை நவீனமயமாக்குவதற்கும், மின்சார வாகன மின்னேற்றும் வசதிகள் போன்ற புதுமையான தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதற்கும் இத் தொழிற்துறைக்கு கணிசமான நிதி மற்றும் தொழில்நுட்ப முதலீடுகள் தேவைப்படுகின்றன. மேலும், தேசிய காலநிலை உறுதிமொழிகள் மற்றும் நிலையான அபிவிருத்தி நோக்கங்களுக்கு இணங்க, சுற்றாடல் பாதிப்புகளைக் குறைப்பதற்கும் செயற்பாட்டுத் திறனை மேம்படுத்துவதற்கும் முயற்சிகள் தேவைப்படுகின்றன.

மேலும், பெற்றோலியத் தொழிற்துறையின் வினைத்திறன்மிக்க, வெளிப்படையான மற்றும் நிலையான நிர்வாகத்தை உறுதி செய்வதற்கு, செயற்திறன்மிக்க பெற்றோலிய ஒழுங்குபடுத்தல் பொறிமுறையை நிறுவுதல் மற்றும் மேம்படுத்தப்பட்ட கண்காணிப்பு அமைப்புகள் உள்ளடங்கலான ஒழுங்குமுறை மற்றும் நிறுவனக் கட்டமைப்புகளை வலுப்படுத்துவதும் இன்றியமையாததாக உள்ளது.

# அத்தியாயம் 06
# மனிதவளங்கள் பற்றிய குறிப்பு

# அத்தியாயம் 06
# மனிதவளங்கள் பற்றிய குறிப்பு

## 6.1 ஆளணி முகாமைத்துவம்

- **வலுசக்தி அமைச்சு**

| பதவி நிலை | அனுமதிக்கப்பட்டுள்ள ஆளணி | தற்போதுள்ள ஆளணி | வெற்றிடங்கள் / (மிகை) |
|---|---|---|---|
| சிரேஷ்ட | 45 | 32 | 13 |
| மூன்றாம் நிலை | 06 | 04 | 02 |
| இரண்டாம் நிலை | 122 | 87 | 41 |
| ஆரம்பப நிலை | 64 | 45 | 19 |
| மொத்தம் | **237** | **168** | **75** |

மூலம்: வலுசக்தி அமைச்சு

## 6.2 அமைச்சின் செயலாற்றுகை மீது மனித வளங்கள் பற்றாக்குறை அல்லது மிகை பாதிக்கும் விதம்

சிரேஷ்ட-மட்ட உத்தியோகததர்களின் பதவிகளில் 13 வெற்றிடங்கள் உள்ளன. அமைச்சின் பணியின் தன்மையைக் கருத்தில் கொண்டு, இவ் வெற்றிடங்கள் அவசர பிரதான பணிகளைச் செயற்படுத்துவதில் தாமதத்தை ஏற்படுத்துகின்றன. இது, அத்தியாவசிய அறிக்கைகளை உரிய நேரத்தில் தயாரிப்பதை நேரடியாகப் பாதிக்கிறது. மேலும், தற்போதுள்ள பதவிநிலை உத்தியோகத்தர்கள் இவ் வெற்றிடங்களுக்கான உத்தியோகத்தர்களின கடமைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இது அதிகப்படியான பணிச்சுமைக்கு வழிவகுத்து, ஊழியர்களின் ஊக்கம் குறையவும் காரணமாகியுள்ளது.

மேலும், போதுமான இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை உத்தியோகத்தர்கள் இல்லமை, தற்போது பணியில் உள்ள உத்தியோகத்தர்களின் பணிச்சுமையை அதிகரித்து, மேலும் செயற்பாட்டுத் தாமதங்களுக்கு வழிவகுக்கிறது. அவர்களின் பரபரப்பான பணி அட்டவணைகள் பணியாளர்களின் மன உறுதியைக் குறைக்கவும் காரணமாகின்றன.

எனவே, இவ் நிலைமை அமைச்சின் நிறுவனச் செயற்பாட்டை நேரடியாகவும் பாதகமாகவும் பாதிக்கிறது.

## 6.3 மனித வளங்கள் அபிவிருத்தி

### 2025 ஆம் ஆண்டில் பின்வரும் பயிற்சிநெறிகள் நடத்தப்பட்டுள்ளன

| இல. | நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | பயிற்றப்பட்ட பதவியினர் எண்ணிக்கை | நிகழ்ச்சித் திட்டக் காலம் | மொத்த முதலீடு (ரூபா - 000) | | நிகழ்ச்சித் திட்டத்தின் இயல்பு (உள்நாட்டு/ வெளிநாட்டு | வெளியீடு/ பெற்றுக்கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | உள்நாட்டு | வெளிநாட்டு | | |
| 1. | அரச பெறுகை மற்றும் ஒப்பந்த நிர்வாகத்திற்கான டிப்ளோமா பாடநெறி | 01 | 01 ஆண்டு | 75,000.00 | - | உள்நாடு | பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவு |
| 2. | அரசகரும மொழிகளில் தேர்ச்சி பெறுதல். | 05 | 150 மணித்தியாலங்கள் | 50,000.00 | - | உள்நாடு | பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவு |
| 3. | பெறுகை வழிகாட்டி மற்றும் கையேட்டின் பிரதான அம்சங்கள் | 01 | 01 நாள் | 9,500.00 | - | உள்நாடு | பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவு |
| 4. | பெறுகை ஆவணங்கள் (கேள்விமனு ஆவணங்கள்) தயாரிப்பது தொடர்பான பயிற்சிநெறி | 04 | 01 நாள் | 50,000.00 | - | உள்நாடு | வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டது |
| 5. | கோப்பு முகாமைத்தும் தொடர்பான பயற்சிபட்டறை | 02 | 01 நாள் | 13,000.00 | - | உள்நாடு | வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டது |
| 6. | அறிக்கை தயாரிப்பது தொடர்பான பயற்சிபட்டறை | 01 | 01 நாள் | 6,500.00 | - | உள்நாடு | வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டது |
| 7. | புதிய சம்பள சுற்றறிக்கையின்படி அரசு உத்தியோகத்தர்களின் சம்பளம் தயாரிப்பது தொடர்பான பயிற்சி நெறி | 01 | 01 நாள் | 6,500.00 | - | உள்நாடு | வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டது |
| 8. | விடுமுறை விடயப்பரப்பு தொடர்பான உத்தியோகத்தரின் பங்கு மற்றும் செயற்பாடு | 01 | 01 நாள் | 6,500.00 | - | உள்நாடு | பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவு |
| 9. | அலுவலக முகாமைத்துவம் மற்றும் நிதி ஒழுங்குமுறைகள் தொடர்பான பாடநெறி | 01 | 02 நாட்கள் | 12,000.00 | - | உள்நாடு | பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவு |
| 10. | அலுவலக உதவியாளர்கள் மற்றும் சாரதிகளுக்கான தமிழ் பாடநெறி | 06 | 100 மணித்தியாலங்கள் | 30,000.00 | - | உள்நாடு | வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டது |
| 11. | திட்ட முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி நெறி | 03 | 02 நாட்கள் | 36,000.00 | - | உள்நாடு | வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டது |
| 12. | தனிப்பட்ட கோப்புகளைத் திறம்படப் பராமரித்தல் | 01 | 01 நாள் | 6,500.00 | - | உள்நாடு | வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டது |
| 13. | அலுவலக அமைப்புமுறை தொடர்பான பாடநெறி | 01 | 02 நாட்கள் | 12,000.00 | - | உள்நாடு | பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவு |
| 14. | திறம்பட அலுவலகப் பணிகளை முன்னெடுப்பதற்கான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பாடநெறி | 02 | 04 நாட்கள் | 60,000.00 | - | உள்நாடு | வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டது |
| 15. | அலுவலக உதவியாளர்களுக்கான பணிப் பயிற்சி | 04 | 02 நாட்கள் | 48,000.00 | - | உள்நாடு | பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவு |
| 16. | பெறுகை ஆவணங்கள் தொடர்பான பாடநெறி | 04 | 01 நாள் | 50,000.00 | - | உள்நாடு | பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவு |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 17. | சைபர் பாதுகாப்பு குறித்த பயிற்சி | 55 | 02 நாட்கள் | 25,800.00 | - | உள்நாடு | வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டது |
| 18. | அரச பெறுகை மற்றும் ஒப்பந்த நிர்வாகத்திற்கான டிப்ளோமா பாடநெறி | 03 | 01 ஆண்டு | 240,000.00 | - | உள்நாடு | வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டது |
| 19. | வரிவிதிப்பு பாடநெறி | 01 | 01 ஆண்டு | 95,000.00 | | உள்நாடு | வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டது |
| 20. | தெற்காசிய துணை பிராந்திய பொருளாதார ஒத்துழைப்பு (SASEC) திட்டத்தின் 2025 ஆம் ஆண்டுக்கான செயற்குழு கூட்டம் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகள் கூட்டம் | 01 | 01 நாள் | - | | வெளிநாடு | பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவு |
| | ஆசிய வளர்ச்சி வங்கியின் (ADB) தெற்காசிய துணை பிராந்திய பொருளாதார (SASEC) திட்டத்தின் வலுசக்தி செயற்குழு கூட்டம் | | 06 நாட்கள | - | | வெளிநாடு | வெற்றிகரமாக பங்கேற்றார் |
| 21. | புதிய அணுசக்தித் திட்டத்திற்கான தேசிய நிலைப்பாட்டை நிறுவுவது குறித்த பிராந்தியங்களுக்கிடையேயான பயிற்சி வகுப்பு | 01 | 10 நாட்கள் | - | - | வெளிநாடு | வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டது |
| | சர்வதேச சூரியசக்தி கூட்டமைப்பின் பேரவையின் 8வது அமர்வு | | 11 நாட்கள் | - | - | வெளிநாடு | பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவு |
| 22. | வலுசக்தி இணைப்பு குறித்த 15வது நிபுணர் பணிக்குழு | 01 | 02 வாரங்கள் | - | | வெளிநாடு | பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவு |
| | அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் தூய்மையான வலுசக்தி மாற்றங்கள் குறித்த உப பிராந்திய பயிலரங்கம் | | 04 நாட்கள் | - | | வெளிநாடு | வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டது |
| | SASEC உப பிராந்தியத்தில் மின்சார உபகரணங்களுக்கான பிராந்திய விநியோகம் மற்றும் மதிப்புச் சங்கிலி மேம்பாட்டை வலுப்படுத்துவது குறித்த பயிலரங்கம் | | 05 நாட்கள் | - | | வெளிநாடு | பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவு |
| 23 | நிகர பூஜ்ஜிய இலக்கை நோக்கிய தூய்மையான வலுசக்தி மாற்றத்திற்கான அறிமுகம் | 01 | 07 நாட்கள் | - | - | வெளிநாடு | வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டது |
| | ஹம்பாந்தோட்ட BESS திட்டத்திற்கான விழிப்புணர்வு மற்றும் அறிவுப் பரிமாற்றத் திட்டம் | | 06 நாட்கள் | - | - | வெளிநாடு | வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டது |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 24 | சிறிய தொகுதி அணு உலைகள் (Small Modular Reactors - SMRs) பாதுகாப்பான மற்றும் பாதுகாக்கப்பட்ட முறையில் நிறுவப்படுவதை முன்னேற்றுவதற்கான தென், மத்திய மற்றும் கிழக்கு ஆசியாவின் பொறுப்பான சிறிய தொகுதி அணு உலை தொழில்நுட்ப பயன்பாட்டிற்கான அடித்தள உட்கட்டமைப்பு (FIRST) பான்-பிராந்திய மாநாடு. | 01 | 02 நாட்கள் | - | - | வெளிநாடு | வெற்றிகரமாக பங்கேற்றார் |
| 25 | இந்திய தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு (ITEC) திட்டத்தின் கீழ் இலங்கையின் தீவுச் சேவை அலுவலர்களுக்கான ஏழாவது நடுத்தர-தொழில்வாழ்க்கைப் பயிற்சி நிகழ்ச்சி (2024/2025). | 01 | 15 நாட்கள் | - | - | வெளிநாடு | பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவு |
| 26 | சீனாவும் இலங்கையும் இடையே பொருளாதார அபிவிருத்தி மற்றும் வறுமை ஒழிப்பு தொடர்பான அனுபவப் பகிர்வு கருத்தரங்கு. | 01 | 27 நாட்கள் | - | - | வெளிநாடு | வெற்றிகரமாக பங்கேற்றார் |
| 27 | உலகளாவிய அபிவிருத்தி முன்முயற்சியின் கீழ் வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் கார்பன் நடுநிலைத்தன்மை (Carbon Neutrality) மற்றும் எரிசக்தி புதுமை அபிவிருத்தி குறித்த கருத்தரங்கு. | 02 | 28 நாட்கள் | - | - | வெளிநாடு | வெற்றிகரமாக பங்கேற்றார் |
| | 2025 நவம்பர் 10 முதல் 16 வரை நடைபெறும் ஹைட்ரஜன் ஆற்றல் குறித்த சர்வதேச பயிற்சித் திட்டம் - செலவை இந்திய அரசு ஏற்கும். | 01 | 07 நாட்கள் | - | - | வெளிநாடு | பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவு |
| 28 | வளர்ச்சியடைந்து வரும் நாடுகளுக்கான உலகளாவிய எரிசக்தி நிர்வாக (Governance) அமைப்பை கட்டியெழுப்புதல் குறித்த கருத்தரங்கு. | 01 | 17 நாட்கள் | - | - | வெளிநாடு | பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவு |
| | கிரிட் (மின்வலை) நிலைநிறுத்தத்திற்காக BESS (Battery Energy Storage System) மற்றும் ஸ்மார்ட் கிரிட் தொடர்பான அறிவு பரிமாற்ற நிகழ்ச்சி. | 01 | 07 நாட்கள் | - | - | வெளிநாடு | வெற்றிகரமாக பங்கேற்றார் |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 29 | உலகளாவிய அபிவிருத்தி முன்முயற்சியின் கீழ் வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் கார்பன் நடுநிலைத்தன்மை (Carbon Neutrality) மற்றும் எரிசக்தி புதுமை அபிவிருத்தி குறித்த கருத்தரங்கு. | 02 | 28 நாட்கள் | - | - | வெளிநாடு | பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவு |
| 30 | உலகளாவிய அபிவிருத்தி முன்முயற்சியின் கீழ் வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் கார்பன் நடுநிலைத்தன்மை (Carbon Neutrality) மற்றும் வலுசக்தி புதுமை அபிவிருத்தி குறித்த கருத்தரங்கு. | 01 | 07 நாட்கள் | - | - | வெளிநாடு | பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவு |
| | 18வது தென் ஆசிய மின்சக்தி செயலாளர்கள் வட்டமேசை மாநாடு (PSRT) மற்றும் 4வது இரண்டாண்டு ஒருமுறை நடைபெறும் காமன்வெல்த் நிலைத்த எரிசக்தி மன்றம். | | 06 நாட்கள் | - | - | வெளிநாடு | வெற்றிகரமாக பங்கேற்றார் |
| | ஆசிய சுத்தமான வலுசக்தி மன்றம் | | 05 நாட்கள் | - | - | வெளிநாடு | வெற்றிகரமாக பங்கேற்றார் |
| | நிலைத்தன்மை மற்றும் குறைந்த கார்பன் எதிர்காலத்திற்கான புதுமையான தீர்வுகள் | | 04 நாட்கள் | - | - | வெளிநாடு | பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவு |
| 31 | வளர்ந்து வரும் நாடுகளில் சூரியஒளி மின்னியல் (Photovoltaic) திட்டங்கள் மூலம் வறுமை ஒழிப்புக்கான கொள்கை மற்றும் நடைமுறை தொடர்பான கருத்தரங்கு | 01 | 25 நாட்கள் | - | - | வெளிநாடு | வெற்றிகரமாக பங்கேற்றார் |
| 32 | 20வது ஆசிய சுத்தமான எரிசக்தி மன்றம் | 01 | 07 நாட்கள் | - | - | வெளிநாடு | வெற்றிகரமாக பங்கேற்றார் |
| 33. | வளர்ந்து வரும் நாடுகளில் சூரியஒளி மின்னியல் (Photovoltaic) திட்டங்கள் மூலம் வறுமை ஒழிப்புக்கான கொள்கை மற்றும் நடைமுறை தொடர்பான கருத்தரங்கு – செலவுகள் சீன மக்கள் குடியரசு அரசால் ஏற்கப்படும் | 01 | 54 நாட்கள் | - | - | வெளிநாடு | பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவு |
| 34. | நாடுகளுக்கிடையே மின்சாரத்தை பரிமாற்றம் செய்ய பயன்படும் எல்லை தாண்டிய மின்கம்பி வலையமைப்புகள் | 01 | 05 நாட்கள் | - | - | வெளிநாடு | வெற்றிகரமாக பங்கேற்றார் |
| 35. | இலங்கைக்கான புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, அபிவிருத்தி மற்றும் தர மேம்பாடு தொடர்பான கருத்தரங்கு – செலவுகள் சீன மக்கள் குடியரசு அரசால் ஏற்கப்படும் | 01 | 15 நாட்கள் | - | - | வெளிநாடு | வெற்றிகரமாக பங்கேற்றார் |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 36. | 20வது ஆசிய சுத்தமான எரிசக்தி மன்றம் – செலவுகள் ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) மற்றும் கொரியா எரிசக்தி நிறுவனம் இணைந்து ஏற்கப்படும் | 01 | 07 நாட்கள் | - | - | வெளிநாடு | பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவு |
| | அணு மின்சக்தி திட்டத்திற்கான பாதுகாப்பு (Safety), பாதுகாப்பு (Security) மற்றும் பாதுகாப்பு உறுதி (Safeguards) தொடர்பான சட்டக் கட்டமைப்பு மற்றும் ஒழுங்குமுறை உட்கட்டமைப்பு குறித்த சர்வதேச பயிற்சி பாடநெறி – செலவுகள் சர்வதேச அணு சக்தி முகவர் (IAEA) மூலம் ஏற்கப்படும் | | 08 நாட்கள் | - | - | வெளிநாடு | பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவு |

அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்ட கூட்டு முக்கியப் பொறுப்புகளைத் திறம்பட நிறைவேற்றுவதில், மனிதவளத்தை உத்திப்பூர்வமாக மேம்படுத்துவது ஒரு அத்தியாவசியத் தேவையாகும். இதில், பணியாளர்களின் திறன்கள், ஆற்றல்கள், திறன்கள், ஒத்துழைப்பு மற்றும் ஆர்வம் ஆகியவற்றை நிறுவனத்தின் தேவைகளுடன் சீரமைப்பது அடங்கும்.

பயிற்சிநெறிகள் பணியாளர்களின் ஊக்கம், அறிவு மற்றும் திறன்களை மேம்படுத்த உதவுகின்றன, அதன் மூலம் செயற்திறனை எதிர்பார்க்கப்படும் தரத்திற்கு உயர்த்துகின்றன.

# அத்தியாயம் 07
# இணக்கப்பாட்டு அறிக்கை

# அத்தியாயம் 07
# இணக்கப்பாட்டு அறிக்கை

| இல. | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலை (இணக்கமானது/ இணக்கமற்றது) | இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்குக. | ஏதிர்காலத்தில் இணக்கமற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை யாது |
|---|---|---|---|---|
| 1 | **பின்வரும் நிதி அறிக்கைகள் / கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன** | | | |
| 1.1 | வருடாந்த நிதி அறிக்கைகள் | இணக்கமானது | | |
| 1.2 | அரச அலுவலகர் முற்பணக் கணக்குகள் | இணக்கமானது | | |
| 1.3 | வணிக மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்குகள், வர்த்தக முற்பணக் கணக்குகள் | பொருத்தமற்றது | | |
| 1.4 | களஞ்சிய முற்பணக் கணக்குகள் | | | |
| 1.5 | சிறப்பு முற்பணக் கணக்குகள் | | | |
| 1.6 | ஏனையவை | | | |
| 2 | **புத்தகங்கள் மற்றும் பதிவுகளைப் பேணல் (நி.ப. 445)** | | | |
| 2.1 | பொது நிர்வாக சுற்றிக்கை 267/ 2018 இன் படி நிலையான சொத்து பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.2 | ஆள்சேர் வேதனாதிகள் பதிவு / தனிப்பட்ட ஊதிய அட்டைகளை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.3 | கணக்காய்வு வினாக்கள் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல | இணக்கமானது | | |
| 2.4 | உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் பதிவைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.5 | அனைத்து மாதாந்த கணக்கு சுருக்கங்களையும்(CIGAS) தயார் செய்து பொது திறைசேரிக்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 2.6 | காசோலை மற்றும் காசுக் கட்டளை பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.7 | பொருட் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.8 | இருப்புப் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல | இணக்கமானது | | |
| 2.9 | இழப்பு பதிவேட்டிறன புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 2.10 | பொறுப்பு பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.11 | அடிக்கட்டை புத்தகங்களின் (GA–N20) பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| **3** | **நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல்** (நி.பி 135) | | | |
| 3.1 | நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்பட்டன | இணக்கமானது | | |
| 3.2 | நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை பற்றி நிறுவனத்திற்குள் தெரியபடுத்தப்பட்டது | இணக்கமானது | | |
| 3.3 | ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்கள் மூலம் இடம்பெறும் வகையில் அதிகாரம்ஒப்படைக்கப்பட்டது. | இணக்கமானது | | |
| 3.4 | 2014.05.11 திகதிய அரச கணக்கு சுற்றறிக்கை இல. 171/2004 இன் படி அரசு ஊதிய மென்பொருள் தொகுப்பின் செயற்பாடுகள் கணக்காளர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை. | இணக்கமானது | | |
| **4** | **வருடாந்த திட்டத்தினைத் தயாரித்தல்** | | | |
| 4.1 | வருடாந்த செயற்பாட்டு திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 4.2 | வருடாந்த பெறுகைத் திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 4.3 | வருடாந்த உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 4.4 | வருடாந்த மதிப்பீட்டைத் தயாரித்தல் மற்றும் அதை தேசிய வ.செ.தி திணைக்களத்தில் (NBD) உரிய திகதியில் சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 4.5 | வருடாந்த காசுப் பாய்ச்சல் அறிக்கை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்கைத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது | இணக்கமானது | | |
| **5** | **கணக்காய்வு வினாக்கள்** | | | |
| 5.1 | அனைத்து கணக்காய்வு வினாக்களுக்கும் கணகாய்வாளர் நாயகத்துக்கு குறிப்பிட்ட திகதியில் பதில் அளிக்கப்பட்டுள்ளது | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| **6** | **உள்ளகக் கணக்காய்வு** | | | |
| 6.1 | நி. பி. 134 (2) டி.எம்.ஏ /1-2019 படி, ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்த பின்னர் உளளக கணக்காய்வு திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 6.2 | அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளித்தல். | இணக்கமானது | | |
| 6.3 | அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் துணைப்பிரிவு 40 (4) இன் அடிபபடையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 6.4 | அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 134 (3) நிதி பிரமானக் குறிப்பின் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு வழங்குதல் | இணக்கமானது | | |
| **7** | **கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு** | | | |
| 7.1 | டிஎம்ஏ1-2019 சுற்றறிக்கையின் படி ஆண்டுக்கு குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன | இணக்கமானது | | |
| **8** | **ஆதன முகாமைத்துவம்** | | | |
| 8.1 | ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 01/2017, சொத்து பெறுகை மற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும் | இணக்கமானது | | |
| 8.2 | மேற்கண்ட சுற்றறிக்கையின் 13 ஆம் அத்தியாயத்தின் படி, சுற்றறிக்கையின் விதிகளை அமுல்படுத்துவதற்கும், அத்தகைய அதிகாரியை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அனுப்புவதற்கும் பொருத்தமானதொரு தொடர்பு அதிகாரி நியமிக்கப் ட்டுள்ளார். | இணக்கமானது | | |
| 8.3 | அரச நிதி சுற்றறிக்கை இல. 05/2016 இன் படி, பொருட்கள் கணக்கிடப்பட்டு, தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கபபட்டுள்ளன | இணக்கமானது | | |
| 8.4 | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலகட்டத்தில் வருடாந்த கணக்கெடுப்பு மூலம் அதிகப்படியான, குறைபாடுகள் மற்றும் பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 8.5 | நி.பி 772 இன் படி கழிக்கபபட்ட பொருட்களை அகற்றுதல் இடம்பெற்றது | இணக்கமானது | | |
| 9 | **வாகன முகாமைத்துவம்** | இணக்கமானது | | |
| 9.1 | குழும வாகனங்களுக்கான தினசரி இயக்க அறிக்கை மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளைத் தயாரித்து அவற்றை உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 9.2 | கழிப்பனவு செபய்யப்பட்ட வாகனங்கள் கழிப்பனவு செய்யப்பட்டு ஆறு மாதங்களுக்குள் அகற்றப்படுதல் வேண்டும். | இணக்கமானது | | |
| 9.3 | வாகனப் பதிவு புத்தகங்கள் பராமரிக்கப்படுவதுடன் புதுப்பிக்கப்படுதல் வேண்டும் | இணக்கமானது | | |
| 9.4 | ஒவ்வொரு வாகன விபத்தும் நி.பி 103,104,109 மற்றும் 110 இன் படி நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | இணக்கமானது | 104(03) மற்றும் 104(04) இற்கு இணங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன | |
| 9.5 | 2016.12.29 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 2016/30 இன் பந்தி 3.1 இன் விதிகளின் படி வாகனங்களின் எரிபொருள் பாவனையினை மீண்டும் பரிசீலித்தல். | இணக்கமானது | | |
| 9.6 | குத்தகை வாகனங்களின் உரித்து பதிவு புத்தகம் குத்தகைக் காலத்தின் பின்னர் மாற்றப்படும். | இணக்கமானது | | |
| 10 | **வங்கி கணக்குகளின் முகாமை** | | | |
| 10.1 | உரிய திகதிகளில் வங்கி க க்கி க்க அறிக்றககறைத் தயாரித்து ொன்ளித்தல் மற்றும் கணக்காய்வுக்கு சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 10.2 | மீளாய்வு வருடத்தில் காணப்பட்ட செயற்படாத வங்கிக் கணக்குகளினைத் தீர்த்தல் | செயற்படாத வங்கிக் கணக்குகள் இல்லை | | |
| 10.3 | வங்கி கணக்கிணங்கல் அறிக்கையில் வெளிபபடுத்தப்பட வேண்டிய நிலுவைகளை வெளிப்படுத்துதல் மற்றும் சரிசெய்தல் மற்றும் ஒரு மாதத்திற்குள் அத்தகைய நிலுவைகளை தீர்த்தல். | இணக்கமானது | | |
| 11 | **நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்** | | | |
| 11.1 | ஒதுக்கீடு செபய்யப்பட்ட ஏற்பாடுகளை வரையறைகளை மீறாத படி செலவிடல். | இணக்கமானது | | |
| 11.2 | நி.பி. 94 (1) இன் படி ஒதுக்கீட்டு வரம்பை மீறாத பொறுப்புக்கள் வருட இறுதியில் தொடர்ந்திருக்கும் | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 12 | **அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு** | | | |
| 12.1 | எல்லைகளுக்கு இணங்குதல் | இணக்கமானது | | |
| 12.2 | நிலுவையிலுள்ள கடன் நிலுவை குறித்து சரியான நேரத்தில் பகுப்பாய்வு செய்திருத்தல். | இணக்கமானது | | |
| 12.3 | ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன்களை அடைத்தல் | இணக்கமானது | | |
| 13 | **பொது வைப்புக் கணக்கு** | இணக்கமானது | | |
| 13.1 | காலம் பிந்திய வைப்புக்களை அகற்றுவதற்கு நி.பி 571 பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் | இணக்கமானது | | |
| 13.2 | பொது வைப்புகளுக்கான கட்டுபாட்டு கணக்கை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 14 | **முற்பணக் கணக்கு** | | | |
| 14.1 | மீளாய்வு ஆண்டின் இறுதியில் காசுப் புத்தகத்தில் மீதி திறைசேரி செயறபாட்டுத் திணைக்ளகத்துக்கு அனுப்பபட்டுள்ளது | இணக்கமானது | | |
| 14.2 | நி.பி. 371 இன் அடிபபடையில் தற்செயலான இடைக்கால வழங்கல், அத்தகைய பணி நிறைவடைந்து மாதத்திற்குள் தீர்க்கப்படும் | இணக்கமானது | | |
| 14.3 | நி.பி. 371 இன் படி அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறாத தற்காலிக இடைக்கால வழங்கல் | இணக்கமானது | | |
| 14.4 | மாதந்தோறும் திறைசேரி புத்தகங்களுடன் கணக்கு மீதி கணக்கிணக்கம் செய்யப்படுதல் வேண்டும் | இணக்கமானது | | |
| 15 | **வருமானக் கணக்கு** | | | |
| 15.1 | விதிகளின் படி சேகரிக்கப்பட்ட வருமானத்தை திருப்பி செலுத்தியிருக்க வேண்டும். | இணக்கமானது | | |
| 15.2 | திரட்டப்பட்ட வருமானம் வைப்புக் கணக்கில் வரவு வைக்காமல் நேரடியாக வருமானத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும். | இணக்கமானது | | |
| 15.3 | நி.பி.176 அனட படி நிலுவைத் தொகையை கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல். | இணக்கமானது | | |
| 16 | **மனித முகாமைத்துவம்** | | | |
| 16.1 | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எல்லைக்குல் பணியாளர்களைப் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 16.2 | ஊழியர்களின் அனைத்து உறுப்பனர்களுக்கும் கடமைகளின் எழுதப்பட்ட பட்டியல்களை வழங்குதல். | இணக்கமானது | | |
| 16.3 | 20.09.2017 தேதியிட்ட எம்.எஸ்.டி. சுற்றிறக்கை இல.04/2017 இன் படி அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் சமர்ப்பிக்கபபட்டுள்ளன. | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| **17** | **பொதுமக்களுக்கான தகவல் வழங்கல்** | | | |
| 17.1 | தகவல் உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்குமுறைகளின் அடிப்படையில் தகவல் அதிகாரி ஒருவரை நியமித்தல். | இணக்கமானது | | |
| 17.2 | அமைப்பு பற்றிய தகவல்களை அதன் வலைத்தளத்தின் மூலம் வழங்குதல் மற்றும் வலையத்தளம் அல்லது மாற்று வழிகள் வழியாக நிறுவனத்தின் மீதான பொதுக் கருத்துள்/ குற்றச்சாட்டுகளை எளிதாக்குதல். | இணக்கமானது | | |
| 17.3 | தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 8 மற்றும் 10 பிரிவுகளின் படி ஆண்டுக்கு இரண்டு அல்லது ஒரு முறை அறிக்கைகளை சமர்பபித்தல். | இணக்கமானது | | |
| **18** | **பிரசைகள் பட்டயத்தினை செயற்படுத்தல்** | | | |
| 18.1 | பொது நிர்ாவகம் மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 05/2008 மற்றும் 05/2018 (1) இன் படி பிரசைகள் பட்டயம் / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை சாசனத்தை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துதல். | இணக்கமானது | | |
| 18.2 | சுற்றறிக்கையின் பத்தி 2.3 ஐப் பொறுத்தவரை பிரசைகள் பட்டயம் /பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்ததை செயல்படுத்தவும் அதை கண்காணிக்கவும் மதப்பீடு செய்யவும் நிறுவனம் ஒரு பொறி முறையை அமைத்துள்ளது. | இணக்கமானது | | |
| **19** | **மனித வள திட்டத்தினைத் தயாரித்தல்** | | | |
| 19.1 | 2018.01.24 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை 02/2018 இன் இணைப்பு 02 படிவத்தின் அடிப்படையில் மனித வளத் திட்டம் தயாரித்தல். | இணக்கமற்றது | | |
| 19.2 | ஊழியர்களின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் குறைந்தபட்சம் 12 மணிநேர பயிற்ச ஆண்டுக்கு 12 மணி நேரத்திற்கும் குறையாமல் இருப்பதை மேற்கண்ட மனித வள திட்டம் உறுதி செய்ய வேண்டும். | இணக்கமானது | | |
| 19.3 | மேற்கண்ட சுற்றிக்கையின் இணைப்பு 01 இல் கொடுக்கபட்டுள்ள படிவத்தின் அடிப்படையில் அனைத்து ஊழியர்களுக்கும் வருடாந்த செய்திறன் ஒப்பந்தம் கையெழுத்தடப்பட்டுள்ளது. | பொது நிர்வாக சுற்றறிக்கை 02/2018 (1) இன் பந்தி 03 இன் படி, இது தேவையில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 19.4 | மேற்கண்ட சுற்றிக்கையின் 6.5வது பந்திக்கு ஏற்ப மனிவள மேம்பாட்டுத் திட்டம் திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் திறன் மேம் பாட்டுத் திட்டங்களை செயற்படுத்ததல் ஆகியவற்றின் பொறுப்பில் ஒரு மூத்த அதிகாரியை நியமித்தல். | இணக்கமானது | | |
| **20** | **கணக்காய்வு பந்திகளுக்கான பொறுப்புக்கள்** | | | |
| 20.1 | முந்தைய ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு பந்திகளால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்தல். | இணக்கமானது | | |